
சந்தைப் பொருளாதாரம் பற்றிய தொகுதி

# பொருளியற் சிந்தனைகள்

மார்கா
நிறுவக
வெளியீடு



WITHDRAWN
PUBLIC LIBRARY

Ki

பொதுசன கல்வி நிகழ்ச்சித்திட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளியற் சிந்தனைகள்

றொபேட் கிளிகாட்
பீற்றர் எம். டிரக்கர்
ஜோர்ஜ் சவுல்

தமிழாக்கம்

ஐ. தனராஜ்

பதிப்பாசிரியர்
எஸ். அன்ரனி நோபேட்
புவியியல்துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

C.M.C
PUBLIC LIBRARY

பொதுசனக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்
மார்கா நிறுவகம்
1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Poruliat Sinthanaikal

## (Economic Thoughts)

Robert Klitgaard
Peter F. Drucker
George Soule

Translated by : T. Thanaraj
Edited by : S. Antony Norbert

First Published 1996

© Copy Right : Marga Institute

Type Setting : Unique Graphics,Wellawatte,Colombo - 6.
Printing : Unie Arts (Pvt) Ltd., Colombo - 13.

Please address inquiries and orders to:
**Newton Fernando**
Assoc. Director
Communication / Publication Division
Marga Institute
P.O.Box 601
93/10, Dutugemunu Road, Colombo - 6, Sri Lanka.

ஒ.330.01
33866
2218

**ADVISORY COMMITTEE**

**Godfrey Gunatilleke**
**Shelton Wanasinghe**
**Newton Fernando**
**S. Antony Norbert**
**P.P.M. Gunatilleke**
**Sarath Madduma**

This Series of Publication has the Financial Support of the Canadian International Development Agency **(CIDA).**

23805
33/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகுதி I**

# அரசாங்கங்களையும் சந்தைகளையும் சிறப்பாகச் செயலாற்றச் செய்தல்

**பகுதி II**

# புதிய முதலாளித்துவம்

**பகுதி III**

# தலை சிறந்த பொருளியலாளரின் கருத்துக்கள்


தமிழாக்கம்

**தை. தனராஜ்**

செயற்றிட்ட அதிகாரி
கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை
தேசியக் கல்வி நிறுவகம், மகரகம.



**பொதுசனக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

**மார்கா நிறுவகம்**

**1996**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவுசெய்து நூல்களைச்
சுத்தமாக வைத்திருக்கவும்
அடையாளங்கள் ஏற்படுத்த
வேண்டாம்

# பொருளடக்கம்

முன்னுரை

பகுதி I

**அரசாங்கங்களையும் சந்தைகளையும் சிறப்பாகச் செயலாற்றச் செய்தல்** *17*

அரசாங்கத்தினைச் சிறப்பாகச் செயற்படச் செய்தல் *19*
பொதுத்துறையில் ஊக்குவிப்புக்களை மேம்படுத்தல் *20*
சந்தைகளைச் சிறப்பாக இயங்கச் செய்தல் *23*

பகுதி II

**புதிய முதலாளித்துவம்** *27*

பொறுப்பேற்கும் இணைப்பு *28*
புதிய வளர்ச்சிக் கம்பனிகள் *29*
கால்பிறைத்தின் மரபு ரீதியான அறிவுடைமை *30*
தெரிவுப் பொருளியல் *32*
மூலதன உரிமையைப் பரப்புதல் *33*
பென்சன் மற்றும் பிணைப்புறுதி நிதி *34*
தொழில்களுக்கான பாரிய சந்தை *35*
யப்பானிய அனுபவம் *37*
பல்தேசிய கம்பனிகளுக்கு உதாரணங்கள் *37*
1970 களின் நிலைமைகள் *38*
உடைமையும் கட்டுப்பாடும் *39*
பல்தேசியக் கூட்டுத்தாபனம் *39*
மையப்படுத்தலும் போட்டியும் *40*
யதார்த்தத்துக்குப் பொருத்தமான கோட்பாடு *42*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி III

## தலைசிறந்த பொருளியலாளர்களின் கருத்துக்கள் *45*


1. பொருளாதாரம் என்றால் என்ன? *45*
அரசு மற்றும் குடும்பங்களின் மூலமான வீட்டுப் பராமரிப்பு *46*
பொருளாதாரம் என்றால் என்ன? *50*
வர்த்தக வாதத்தின் மீதான இயலாட்சி வாதிகளின் எதிர்ப்பு *59*

2. அடம்ஸ்மித் - பழம் முதன்மை வாதி *62*
ஸ்மித்தின் பொருளியலின் பிரதான அம்சங்கள் *63*
உற்பத்தியின் பங்கீடு *65*
முன்னைய கோட்பாடுகளுடன் உள்ள வேறுபாடுகள் *67*
கோட்பாட்டுக்கு றிக்காடோவின் பங்களிப்பு *71*
ஜெரமி பெந்தாமின் பயன்பாட்டு வாதம் *73*

3. றொபேட் ஓவன் *74*

4. கார்ல் மாக்ஸ் *76*
மாக்சின் பொருளியல் *77*

5. ஜோண் ஸ்ரூவர்ட் மில் *81*
மில்லின் அடிப்படைக் கோட்பாடு *81*
உற்பத்தி விதிகள் *82*
பங்கீடு பற்றிய மில்லின் கருத்துக்கள் *83*
சமூகத்தின் முன்னேற்றம் *85*
பெறுமதிகளும் விலைகளும் *88*
பணம் பற்றிய கருத்துக்கள் - தங்க நியமம் *91*

6. பணக் கணியக் கோட்பாடு *93*
கெயின்சின் பொதுக்கோட்பாடு - வேலைவாய்ப்பு *98*
கெயின்சும் பணக்கோட்பாடும் *101*
முதலீடு பற்றிய கெயின்சின் நிர்ணயங்கள் *102*
பெருக்கி *103*
அரசாங்கத்தின் பங்கு *104*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இத் தொகுதியானது சந்தைப் பொருளாதாரத்தின் இயல்பும் அதன் செயற்பாடுகளும் பற்றிய ஐந்து வெளியீடுகளில் இறுதியானது. சனநாயகம் பற்றி வெளிவரவிருக்கின்ற ஐந்து நூல்வெளியீடுகளுடன் இணைந்தமுறையில், அதன் தொடர்ச்சியாக இது அமைந்திருக்கின்றது. வாசகர்களுக்குப் பொருளாதாரம் மற்றும் அரசமுகாமைத்துவம் ஆகிய இரு முறைமைகளின் பிரதான அம்சங்களைத் தருவதற்கு இரு தொடர் வெளியீடுகள் மார்கா நிறுவகத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சமூக சிந்தனையாளர்கள் விவாதிப்பது போன்று பொருளாதாரம், அரசமுகாமைத்துவம் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாக இணைந்துள்ளது. சந்தைப் பொருளாதாரத்தினை நிர்வகிக்கவும், விருத்தி செய்யவும் முயற்சிக்கின்ற அதேவேளை, அவையின்றிச் சனநாயக நிறுவனங்களைப் பேணுவதும், வலுவூட்டுவதும் மிகக் கடினமானது. இரு முறைமைகளின் அடிப்படைகள் சிலவற்றினைப் பற்றிய விளக்கங்களை இவ் இரு வரிசைத் தொடர் வெளியீடுகள் எடுத்துக்காட்டுகின்றதுடன் சந்தைப் பொருளாதாரத்துக்குத் தளமாக அமையக் கூடிய சனநாயக முதிர்ச்சிக்கு இது மிக அவசியமானதாகும். இவ்விணைவானது உள்ளார்ந்த ரீதியில் உறுதியாகவும் நீண்ட காலத்துக்கு நிலைக்கக் கூடிய ஆற்றலையும் கொண்டிருந்தாலும், சனநாயக ரீதியற்ற அரசியல் முறைமைகளுக்கிடையிற் சந்தைப் பொருளாதாரம் செயற்பட்டு நின்றதற்குப் பல உதாரணங்களை நாம் கொண்டுள்ளோம். இத்தகைய விடயங்களிற் சிலவற்றைச் சனநாயகம் பற்றிய நூல் வரிசைத் தொடரில் மிக ஆழமாக ஆராயப்படுகின்றது. சந்தைப் பொருளாதாரத்துடனான அவற்றின் முக்கியத்துவம் எடுத்துக் கூறப்படுகின்றது.

இத்தொகுதியின், முதலாவது வெளியீடானது சந்தைப் பொருளாதாரம் எந்த வழிகளிற் செயற்படுகின்றது என்பது பற்றிய தெளிவான விளக்கத்தையும் ஏனைய பொருளாதார முறைமைகளுடன் ஒப்பிடும்போது ஏன் அது சிறந்ததாக உள்ளது என்பதற்குமான விளக்கத்தையும் கொண்டிருந்தது. சந்தைப் பொருளாதாரம் பற்றி அதற்குச் சார்பாகவும் எதிராகவும் பல தவறான எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன. இலங்கையில் நீண்ட மரபினைக் கொண்ட சோசலிசக் கருத்தியலானது சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமைகள் பற்றிய சந்தேகத்தை வளர்க்கும் மனோபாவங்களைத் தோற்றுவித்துள்ளது. முதலாளித்துவம், சோசலிசம், திட்டமிட்ட பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம் ஆகிய கருத்தாழம் மிக்க சொற்கள் பல காணப்படுவதுடன் ஒவ்வொன்றும் ஒருவரின் கருத்தியல் சார்பு நிலைக்கேற்ப நேர்கணிய, எதிர்கணிய பொருளைத் தருவதாக உள்ளது. இத்தொடரில் வெளிவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நூல்கள் இவற்றினைத் தெளிவுபடுத்தும் வகையிற் காணப்படுகின்றது. ஸ்கண்டிநேவியப் பொருளாதாரங்களும், சந்தைப் பொருளாதாரத்துடனான அவற்றின் கலப்பும், சமூகநலன் மற்றும் பொதுச் சேவை முறைமைகளும் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது மிகவும் வேறுபட்டனவாக உள்ளன. மத்திய திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களைக் கொண்ட கிழக்கு ஐரோப்பாவிற், குறிப்பாக அப் பொருளாதார முறைமையானது உடைந்து போவதற்கு முன்பேயே ஹங்கேரியானது சமூக சந்தை முறைமை அமைப்புக்கான ஒரு பரிசோதனையாக விளங்கியது.

யூகோஸ்செலாவியா, வேறுபட்ட சோசலிசமுறைமையாகச் சோவியத்தினின்றும் வித்தியாசமானதாகப் பரிணமித்தது. எனவே இத்தகைய சொற்களைப் பயன்படுத்தலில், பிரயோகித்தலில் மிகக் கவனமாக இருக்கவேண்டும். அத்துடன் பொருளாதாரப் பரிமாணங்கள் அரசியலிலிருந்து பிரித்தறியப் படவேண்டும். பொருளாதார, அரசியல்ரீதியாகப் பூரணமான மனித ஒழுங்கு காணப்படாததினால் வன்மையான யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவற்றைத் தொடங்க வேண்டிய தேவையுள்ளது. மனிதன் தேடுகின்ற முறைமை பூரணமற்றதொன்று. அது சமுதாயம் முழுவதற்கும், சாத்தியமான உயர் வாழ்க்கைத் தரத்தை அடைவதற்குக் கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்துவதற்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

முதல் (Capital) என்பது முதலாளித்துவம் (Capitalism) என்ற சொல்லுடன் ஒத்த கருத்துடையதல்ல. இது பண்டைய பிரபுத்துவ, சோசலிச அல்லது முதலாளித்துவ முறைமையின் பிரதான கூறாக இருந்தது. முதல் என்பது ஒரு சமுதாயத்தின் உற்பத்திக்கான செல்வத்தைக் கொண்டிருக்கின்றதுடன் பயிர்செய்யக்கூடிய நிலம், கட்டிடங்கள், ஆலைகள், கருவிகள் போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட பல்வேறுபட்ட பௌதீக முதலையும் குறித்து நிற்கின்றது. தொழிலாளர், அறிவு, தொழிற்றிறன், நுட்பத்திறன் என்பன மனித முதல். இயற்கையினால் அளிக்கப்பட்ட கொடையாக உள்ள பௌதீகச் சூழல் அதிற் காணப்படுகின்ற வாழ்க்கை ஆதாரத்துக்கும், பொருளாதாரப் பயன்பாட்டுக்கும் பயன்படுகின்ற வளங்கள் இயற்கை முதல் எனப்படும். ஒரு பொருளாதார முறைமை இம் முதலைப் பயன்படுத்தக் கூடியதாகவும் மக்களின் நலனை முற்றாக அடைந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்பதுடன் எதிர்காலத்துக்கு அவற்றைப் பேணிப் பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பேண்-தகு மனித அபிவிருத்தியானது Sustainable human development) அபிவிருத்திச் செயல்முறையை விளக்குவதற்குத் தற்போது பயன்படுத்தப்படுகின்ற செயலாகும். இத்தகைய அபிவிருத்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்முறைகளுடன் தொடர்பாக முதலாளித்துவம், சோசலிசம் ஆகிய எண்ணக் கருக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மீள் வரையறை செய்யப்படவேண்டும். பேண்-தகு மனித அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு எவ்வாறு இந்த முறைமைகள் தகுதி பெற்றுள்ளன என்பதை ஆராய வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

சந்தைப் பொருளாதாரம் ஒருமுறைமையாகவே காணப்படுகின்றதுடன் அது செல்வந்தர்களுக்குச் சார்பாகவும், ஒப்புரவின்மையைத் தூண்டுவதாகவுமே கருதப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு முறைமைக்குள் இயங்குகின்ற சந்தையில் வளங்களின் உரிமையும் அதற்கான அடைவும் ஒப்புரவற்ற முறையிலேயே பரம்பியுள்ளது. சந்தையும் இவ் ஒப்புரவற்ற தன்மைகளை அதிகரிக்கக் கூடும். ஏனெனில் வளங்களைக் கொண்டிருப்போர் செல்வத்தின் மீதும் மேலாண்மையைக் கொண்டிருப்பர். சந்தையின் உள்ளார்ந்த அம்சமானது உற்பத்தியாளர், விற்பனையாளர்களிடையே போட்டியைக் கொண்டிருப்பது எனக் கருதப்படுகின்றது. ஆனால் இப்போட்டியானது சமனற்ற அடிப்படையில் ஆரம்பிக்கின்றது என சோசலிச வாதிகள் சார்பான விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது.

சந்தைப் பொருளாதாரத்தின் மீதான விமர்சனமானது அம்முறைமையின் எதிர்கணியப் பண்பினையே முன்னிலைப் படுத்துவதாக உள்ளது. சந்தையைப் பொறுத்தவரை அவை சமூக, பொருளாதார அமைப்புக்களினாற் சூழப்பட்டுள்ளதினால் ஒப்புரவின்மைகளைச் சரிப்படுத்துவதற்குப் போதுமானதாக அவை காணப்படவில்லை. உண்மையானதும், திறமையானதுமான அரசியற் பொருளாதாரத்திலேயே பெருமளவு தங்கியுள்ளது. இக்காரணத்துக்காகத் தான் சனநாயக முறைமையானது, சந்தையைப் பேணிப்பாதுகாக்கின்ற, மேன்மைப்படுத்துகின்ற அரசியற் பொருளதாதாரத்தை உருவாக்குகின்ற சிறந்த வழியாக மாறுகின்றதுடன் அத்தகைய ஓர் அரசில் பல்வேறு வகையான பொருளாதாரப் பிரிவுகளுக்கிடையில் ஒன்றுடன் ஒன்று பேரம் பேசவும், இணக்கத்துக்கு வரவும் சுதந்திரம் காணப்படுகின்றது. இம் முறைமை ஓர் இயக்கச் செயல் முறையைக் கொண்டதாக இருப்பதுடன், தொழிலாளர் வேலையாட்கள், பங்கு முதலீட்டாளர்கள், நுகர்வோர் ஆகியோரின் முரண்படும் நலன்களைச் சமப்படுத்திச், சமரசத்துக்கும் முயற்சிக்கின்றது.

சந்தைப் பொருளாதாரம் திறமையாகச் செயற்படுவதுடன் ஏனைய சோசலிசக் கருத்தியலிலிருந்து வரும் திட்டமிட்ட பொருளாதாரத்திலும் பார்க்க மிக ஒப்புரவுத் தன்மையுடையதாகவும் இருக்கின்றது. கைத்தொழில்ரீதியாக முன்னேறிய சனநாயகங்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைந்த மத்திய திட்டமிடற் பொருளாதாரம் ஆகிய இரு பொருளாதாரங்களின் பிரதான அம்சங்கள் இத்தொகுதியில் ஆராயப்படுகின்றது. சந்தைப் பொருளாதாரத்தை வேறுபடுத்திக் காட்டும் பிரதான காரணி நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் சந்தைச் செயல் முறையே. இதனூடாகவே பொருட்கள் சேவைகளின் பரம்பலும் உற்பத்தியும் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. நுகர்வோரின் முன் பல தெரிவுகளுக்கான வீச்சுக் காணப்படுவதுபோன்று உற்பத்தியாளர்கள், பங்கீட்டாளர்களுக்கிடையில் சந்தர்ப்பத்துக்கான சுதந்திரமும் காணப்படுகின்றது. இதனாற் சந்தைப் பொருளாதாரம் மிகவும் நெகிழ்ச்சித்தன்மையுடையதாகவும், நுகர்வு மற்றும் உற்பத்திச் சாத்தியங்களை விரிவாக்குவதற்கான பயனுறுதிவாய்ந்த கருவியாகவும் இருக்கின்றது.

மத்திய திட்டமிடற் பொருளாதாரம் இத்தகைய திறனாற்றலைக் கொண்டிருக்கவில்லை என்று "சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன" என்ற கட்டுரையின் ஆசிரியர்கள் விவாதிக்கின்றனர். ஏனெனில் பொருட்கள் சேவைகளின் நிரம்பலானது திட்டமிடல் நுட்பங்கள் மற்றும் முறையியல்களினூடாகத் தீர்மானிக்கப்படுகின்றதுடன் அவை மத்திய திட்டமிடல் முகவரகத்திற் பணிபுரியும் தொழில்நுணுக்க அறிஞர்களினாற் (Technocrates) பிரயோகிக்கப்படுகின்றது. அடிப்படைத்தேவைகளைத் திருப்தி செய்யும் சில பொருட்கள் சேவைகளைப் பொறுத்தவரையில் இந்நுட்பங்கள் அளவறியும் முறையில் நிர்ணயிக்கப்படுவதற்குப் போதுமானது. ஆனால் அவை பரந்தளவான தெரிவுகளுடன் அல்லது வளர்ச்சியடைந்து வரும் நுகர்வோர் சமுதாயத்தினால் வேண்டப்படுகின்ற பல வகையான தரங்களின் வீச்சைக் கொண்ட தெரிவுகளுடன் ஒத்துப்போக மாட்டாது. மத்திய திட்டமிட்ட பொருளாதாரங்கள், அவை வளர்ச்சி அடையும்போதும், நுகர்வுப் போக்குகள் மாறுபடும்போதும் பொருளாதார முகாமைத்துவத்தின் பாரிய பிரச்சினைகளுக்குள் ஏன் தள்ளப்படுகின்றதென்பதற்கு இது ஒரு விளக்கமாக அமைகின்றது.

சந்தைப் பொருளாதாரம் பற்றிய பிரதான விமர்சனமானது அது முதலாளித்துவ முறைமையின் கருவியாகவும், எல்லாவகையான ஒப்புரவின்மைகளையும், சமூக நீதியின்மையையும் அதிகரிக்கின்றது எனக் குறிப்பிடுகின்றது. சோசலிச அமைப்பின் மூலதத்துவத்தினை முன் மொழிபவர்கள் இத்தகைய பிரச்சினையானது உண்மையில் வளங்களின் தனியார் உடைமையில் தனது மூலவேர்களைக் கொண்டிருக்கின்றது என்றும் எல்லா உற்பத்திக்குரிய செல்வமும் பொதுமக்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமென்றும் வாதாடலாம். அரசினால் வழிநடாத்தப்படும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலிருந்து பெறப்பட்ட அனுபவத்தின்படி அரசுடைமையானது தன்னளவில் ஒப்புரவிற்கு உத்தரவாதம் அளிக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை வெளிப்படுத்தின. இங்கு பிரதானமானது வளங்களின் மீதான அதிக உரிமை என்ற விடயம் அல்ல அவற்றின் மீதான கட்டுப்பாடும் முகாமைத்துவமே முக்கியம்.

அரச கட்டுப்பாட்டுப் பொருளாதாரங்களிற் கட்டுப்பாடானது எப்பொழுதும் சுயநல நோக்குடைய அரசியல் அதிகார வர்க்கத்தினதும் அவர்களின் ஆதரவாளர்களினதும் கைகளிலேயே காணப்படுகின்றது. சனநாயக சமூகங்களிற் காணப்படும் அரசியல் அதிகாரவர்க்கத்தினர் மக்களுக்குப் பொறுப்புள்ளவர்களாக இருப்பதுபோன்று இவர்கள் காணப்பட மாட்டார்கள். இத்தகைய நிலைமைகளிற் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரவர்க்கத்தினர் விகிதாசாரமற்ற முறையில் இலாபத்தைக் கைப்பற்றக்கூடும். தனியார் செல்வத்தின் உரிமை மீது காணப்படும் கட்டுப்பாடுகளின் காரணமாக இச்சமூகங்கள் அதீதமான செல்வத்தையும் நுகர்வுத்தன்மையையும் வெளிக்காட்ட விரும்புவதில்லை. யப்பான், தாய்வான், தென்கொரியா போன்ற தனியார்துறைச் சந்தைப் பொருளாதாரங்கள் ஒப்புரவுத்தன்மையுடைய வருமானப் பரம்பல் அமைப்புக்களைக் கொண்டுள்ளன. அத்துடன் அந்நாடுகளிற் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையிலான வருமானத்திற் காணப்படும் வேறுபாடுகள் ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகக் காணப்படுகின்றன.

ஒப்புரவின்மை பற்றிக் கூறும்போது ஒன்றை மனதிற் கொள்ள வேண்டும். ஒப்புரவின்மை மட்டமானது (degree of inequality) மக்களின் நலன்பற்றிய நிலைமையை வெளிக்காட்டும் குறிகாட்டி அல்ல. வருமான ஒப்புரவின்மையானது சமூகங்கள் குறைவான வருமானத்தைக் கொண்டிருக்கும்போது தாழ்ந்த நிலையிலும், பொருளாதாரங்கள் வளர்ச்சியடையும்போது அதிகரித்தும், உயர்மட்ட அபிவிருத்தியை அடையும்போது மீண்டும் குறைவடைந்தும் செல்லுகின்றதெனப் பொருளியலாளர் கூறியுள்ளனர். அபிவிருத்திச் செயல் முறையானது பொருத்தமாக நிர்வகிக்கப்படின் வருமான ஒப்புரவின்மைகளில் ஏற்படும் சில அதிகரிப்பு வறுமையானவர்களின் விருத்திகளுடன் இணைந்து செல்லும் என்பதை இது உணர்த்துகின்றது. பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு சந்தர்ப்பங்களில் இது தெளிவாகியது. தென் கொரியா விரைவாக வளர்ச்சியடைந்த போது வருமான ஒப்புரவின்மை அகன்று செல்லும்போக்குக் காணப்பட்டது. ஆனால், சிலர் ஏனையவர்களிலும் பார்க்க அதிக நன்மையைப் பெற்றாலும் எல்லா வருமானப் பிரிவினரும் குறிப்பிடத்தக்களவு நன்மையடைந்தனர். இவ்வாறு நிகழ்ந்தமைக்குக் காரணம், தென் கொரியாவின் அபிவிருத்தியானது பரந்த அடிப்படையில் அமைந்திருந்ததுடன் பொருளாதார அபிவிருத்தியும் மனித வள அபிவிருத்தியுடன் இணைந்திருந்தது. இதற்குமாறான முறைமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேச்சாதிகாரத் தன்மையுடையதாக இருப்பதுடன் அபிவிருத்திக்கான தூண்டுதல்களை எப்பொழுதும் குறைப்பனவாகவே உள்ளதுடன் பொருளாதாரத் தேக்கத்தை உருவாக்குகின்றதினால் எல்லா வருமானப் பிரிவினரும் குறைந்த மட்டத்திலான நலனில் சிக்கிவிடுகின்றனர்.

தனியார் சொத்துரிமை எண்ணக்கருவானது சனநாயகத்திலும், சந்தையிலும் ஓர் உள்ளார்ந்த அம்சமாகும். தனிப்பட்டவர்களின் சுதந்திரமானது ஒருவர் வளங்களை அனுபவிக்கவும், கட்டுப்படுத்தவும் கொண்டிருக்கக் கூடிய இயலளவுடன் தொடர்புபடுகின்றது. அதன்மீது ஏனையோர் உரிமை கொண்டாடவோ, ஆக்கிரமிக்கவோ முடியாதவாறு அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. இந்நோக்கில் அறிந்து கொள்ளப்படும் தனியார் சொத்து என்பது தனிப்பட்டவர்களின் உத்தரவாதம் என்பதுடன், தனிப்பட்டவர்களின் அந்தரங்கமாகவும் உள்ளது. அரச அதிகாரத்தில் இது வரையறைகளை ஏற்படுத்துகின்றது. தனியார் சொத்து, பயனுறுதி வாய்ந்த சந்தைப் பொருளாதாரம் செயற்படுவதற்கு இன்றியமையாதது. ஏனெனில் அது ஒன்றுதான் வேலை, சேமிப்பு, சொத்துக்களைப் பெறல் ஆகியவற்றுக்கான சிறந்த தூண்டுதல்களை அளிக்கின்றது. சீனாவில் இடம்பெற்ற விவசாயச் சீர்திருத்தங்கள் இவற்றினைத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன. கூட்டுப் பண்ணைகளிலிருந்து குடியிருப்பாளரின் பண்ணைகளாக மாற்றம் அடைந்தபோது விவசாயக் குடியிருப்பாளரின் சராசரி தேறிய வருமானமானது 1978 - 1985க்கு இடையில் மூன்று மடங்காக அதிகரித்தது. தனியார் தூண்டுதலின்மை எவ்வாறு ஒரு சமுதாயத்தின் தீர்மானத்தில் பரந்தளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதனைச் சூழற் பாதுகாப்பு மற்றும் சேதங்களிலிருந்து தெளிவாக விளக்கப்பட்டது.

எல்லோருக்கும் சொந்தமாக உள்ள சொத்துக்கள் எப்பொழுதும் தவறாகப் பயன்படுத்தப்படும் அல்லது அளவுக்கதிமாகச் சுரண்டப்படும் என்பதற்கு உதாரணமாகக் காடுகளிலும், மேச்சல் நிலங்களிலும் ஏற்படும் பாதிப்புக்களைக் குறிப்பிடலாம். தனிப்பட்ட பிரிவினர் இதனைச் சொந்தமாகக் கொண்டிருப்பின் அதனைப் பாதுகாப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்பாக இருக்கவேண்டும். இதனைப் பயன்படுத்துவதற்கான தனிப்பட்டவர்களின் உரிமைகள், தனியார் உரிமைகள் என்ற அடிப்படையிற் தெளிவாக வரையறை செய்யவேண்டும். அத்துடன் வளங்களைப் பாதுகாப்பதற்கும் அதன் பேண்-தகு தன்மையை உறுதி செய்வதற்கும் பாரிய தூண்டுதல் இருக்கவேண்டும். அரசுடைமையும், பொதுசனச் சொத்தும் இதனையொத்த பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றன. இதனைக் கவனமாகப் பயன்படுத்தவும், எதிர்காலப் பயன்பாட்டுக்காக இதனை நிர்வகிப்பதற்குமான தூண்டுதல்கள் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றன. ஏனெனில் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரினதும் சொத்து என்பதால் எவரும் தனிப்பட்ட முறையிற் சொந்தம் கொண்டாட முடியாது. இத்தகைய காரணங்களினால்தான் பொதுவான அரசுடமை நிறுவனங்கள் பயனுறுதி வாய்ந்ததாகவும் இலாபநோக்குடையதாகவும் இருப்பதில்லை. உற்பத்தி மற்றும் வியாபாரம் போன்ற துறைகளிற் சந்தைப் பொருளாதாரம் ஏன் தனியார் நிறுவனங்களிற் பெரிதும் தங்கியுள்ளதென்பதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

அரசமுறைமையானது இலாபத்தை அடைவதற்குச் சுதந்திரமாக இயங்கக் கூடியவர்களைக் கொண்டுள்ளதேயன்றி அவர்களின் முயற்சிக்கு எதுவும் வழங்கப்படுவதில்லை. அரசுடைமையைப் பெரிதும் கொண்ட ஒரு முறைமையில் அல்லது பொருட்களை அல்லது வருமான ஆதரவினை இலவசமாக அளிக்கின்ற பாரிய சமூக நல நிகழ்ச்சித் திட்டத்தினைக் கொண்ட முறைமைகள், சந்தைப் பொருளாதாரத்திலும் பார்க்க அதிகமான "இலவசமாகச் சவாரி" செய்வோரைக் (free - riders) கொண்டுள்ளது. இதே வகையான பிரச்சினைகளினால்தான் இலங்கைப் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இலங்கையிற் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் பொதுப்பணம் தொடர்பாக மிகவும் தாராளப் போக்கைக் கொண்டிருந்தன. பொதுமக்களும் சேவைகளையும் வருமானப் பரிமாற்றங்களையும் பரஸ்பரக் கொடுப்பனவு அல்லது முயற்சி இன்றி எதிர்பார்க்கின்ற போக்கினையும் கொண்டுள்ளனர்.

மரபுரீதியான சமூகங்களிற் தனிப்பட்டோர், சமுதாயங்களின் உரிமைகள், கடப்பாடுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அங்கு சமூக நடைமுறை, அதிகார அமைப்புக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவை சிலவேளைகளிற் தனியார் சொத்துரிமை முறைமையின்றி இன்று சந்தைப் பொருளாதாரத்திற் காணப்படுவது போன்று மிகவும் தாக்கமுடையதாக இருந்தது. இத்தகைய சமூகக் கட்டுப்பாட்டு அமைப்புக்களைச், சமூக, பொருளாதார மாற்றத்தின் சக்திகள் தவிர்க்க முடியாதபடி அழித்துவிட்டன. எனவே புதிய அமைப்புக்கள், அபிவிருத்தி மற்றும் நவீனத்துவமான செயல்முறைகளில் மீளவும் கொண்டுவரப்பட வேண்டும். சுதந்திரமான, தடையற்ற வாங்கவும் விற்கவும் கூடிய தனியார் சொத்துரிமை அமைப்புக்கள், சொத்துக்கள், இத்தகைய பரிமாற்றங்களைக் காண்பதற்கான சட்டங்கள் மற்றும் ஒப்பந்தரீதியான தொடர்புகள் சந்தைப் பொருளாதாரத்தில் இடம் பெறுகின்றன.

தனியார் சொத்துரிமை மற்றும் சந்தை அமைப்புக்கள் இவற்றுக்கே உரியது என்பது கருத்தல்ல. ஒவ்வொன்றிலும் பூரணத்துவமற்ற தன்மை காணப்படுகின்றதுடன் அவற்றினைத் திருத்துவதற்குத் தலையீடு மிக அவசியமானது. சுதந்திர சந்தை அல்லது நிறைபோட்டிச் சந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் ஒரு முறைமை மிகச் சிறந்தது. ஆனால் யாதார்த்த உலகில் அது காணப்படவில்லை. அரசியற் பொருளியலாளர்கள் "சந்தைப் பொருளாதாரம் என்பது அரசின் பங்கினைக் குறைத்தல் என்பதன் கருத்தல்ல" என்று வாதாடுகின்றனர். "அரசானது வர்த்தக முயற்சிகள் போன்ற நடவடிக்கைகளிலிருந்து பின்வாங்குவதானது புதிய பங்காற்றலை மேற்கொள்வதற்காகவே இருக்கவேண்டும்" என்ற கருத்தினை மட்டுமே குறிக்கின்றது. பொருளியலாளர்களினாற் "சந்தைகளின் செயலொழிவு" என்று விபரிக்கப்பட்டவற்றிற் பிரதான பங்கினை அரசு கொண்டுள்ளது. சந்தைச் சக்திகள் விதிமுறைகளை மீறிச் சுயமாகச் செயற்படும்பொழுது இடம்பெறும் சூழல் மாசுபடலை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். போட்டியானது நெறிமுறையானதாக இருக்கவேண்டுமென்பதை உறுதிப்படுத்தவும், தனியுரிமை வளர்ச்சிகளைத் தடைசெய்தல், பயனுறுதி வாய்ந்த பொருளாதாரத்திற்கும், நுகர்வோரின் விருப்புக்கள் ஆகிய இரண்டிற்கும் ஊறு விளைவிக்கக் கூடிய சொத்துரிமை மற்றும் முகாமைத்துவ விடயங்களில் அரசு தலையீடு செய்தல் வேண்டும்.

அரசானது பரந்த வீச்சுக் கொண்ட பொதுசன சேவை குறிப்பாகச் சட்டம் ஒழுங்கு என்பதிலிருந்து பொதுச்சுகாதாரம், பொதுசனக் கல்வி, வீதிகள், துறைமுகங்கள், சக்தி ஆலைகள், தொலைத்தொடர்பு போன்ற பொருளாதாரக் கட்டுமானத்தின் பெரும் பங்கினுக்குப் பொறுப்புடையது எனக் கருதுதல் வேண்டும். இவற்றுக்கு மேலாக, எதிர்காலச் சமுதாயத்தின் நோக்கினை விருத்தி செய்வதற்கும், அபிவிருத்திக்காக மக்களைத் தயார்படுத்துவதற்குமான பொருளாதாரத்துக்கும் அரசு உதவ வேண்டும். இதனால்தான் மேற்குச் சனநாயகங்களில் உள்ள சோசலிசக் கட்சிகள் "மத்திய திட்டமிட்ட முறைமையின் உடைவானது எவ்வகையிலும் கூட்டுப் பொறுப்பு மற்றும் பொதுமக்களின் பொறுப்புடைமை மீது அழுத்தங்களை முன்வைக்கின்ற சோசலிசக் கருத்தியலின் அடிப்படைகளைப் பலீனமடையச் செய்யவில்லை" என வாதிடுகின்றனர். எனவே சந்தைப் பொருளாதாரம் என்ற கட்டமைப்பினுள் புதிய சோசலிச நிகழ்ச்சி நிரலை அவர்கள் முன்வைக்கலாம். சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன என்ற முதலாவது தொகுதி இதனை விளக்குகின்றது.

இத்தொகுதியில் வெளிவந்த முன்னைய நான்கு வெளியீடுகளில் இத்தகைய பல விடயங்கள் ஆராயப்பட்டன. இரண்டாவது தொகுதியான அபிவிருத்தி மாதிரிகள் என்ற நூலில் தேர்ந்த சில நாடுகளின் அனுபவங்கள், அவற்றிலிருந்து பெறப்பட்ட அபிவிருத்திப் படிப்பினைகள் பற்றி ஆராயப்பட்டது. இந்நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள், செயலாற்றங்கள் என்பன சந்தையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளையுடைய நாடுகளுடனும் அரச கட்டுப்பாட்டு முறையைக் கொண்ட நாடுகளுடனும் ஒப்பீடு செய்யப்படுகின்றது. பொருளாதாரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தங்களையும், சீரமைப்பையும் கொண்ட நாடுகள் பயனுறுதி வாய்ந்த முறையில் உலகப் பொருளாதாரத்துடன் தம்மை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளன. இந்நாடுகள் விரைவாக வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால், மக்களின் வாழ்க்கைத் தர நிலைமைகளை விருத்தி செய்யவேண்டுமாக இருந்தால் இந்நாடுகள் சர்வதேசரீதியாகப் போட்டியை உருவாக்க வேண்டியனவாகவும், தாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை உலக சந்தையில் விற்பனை செய்யக்கூடிய தகுதியுடையனவாகவும் மாறவேண்டும். வேறு மாற்று வழிகள் இல்லை. இதனை மேற்கொள்ளுவதற்கு இந்நாடுகளின் பொருளாதாரங்கள் திறந்த அமைப்புடையனவாக இருத்தல் வேண்டும். அதிற் சந்தையானது பொருளாதார முகாமைத்துவம் மற்றும் வள ஒதுக்கீட்டுக்கான பிரதான ஊக்கியாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். இத் தொகுதியிற் காணப்படும் சில நாடுகளைப் பற்றிய சிறப்பான ஆய்வுகள் எவ்வாறு இவை மேற்கொள்ளப்பட்டன என்பதை விபரிக்கின்றன.

அரசும் சந்தையும் பற்றிப் பொருளாதாரக் கொள்கை என்னும் மூன்றாவது தொகுதியில் ஆராயப்படுகின்ற சில விடயங்கள் இவ் அறிமுகத்தில் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரக் கொள்கை பற்றிய சில படிப்பினைகள், அரசு மற்றும் சந்தைகளின் பங்குபற்றிய விடயங்கள் இதில் ஆராயப்படுகின்றன. நான்காவது தொகுதியில் கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரச் செயலாற்றங்கள் மற்றும் போருக்குப் பின்னரான யப்பானின் பொருளாதார உருமாற்றத்திற் பொருளாதாரத் திட்டங்களின் பங்களிப்பு ஆகிய விடயங்கள் ஆராயப்படுகின்றன. சந்தைப் பொருளாதாரம் பற்றிய 5 நூல் தொகுதிகளிற் பொருளியற் சிந்தனைகள் என்ற இந்நூல் இறுதியானதாகும்.

**கொட்பிரே குணதிலக**
**மார்கா நிறுவனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I

# அரசாங்கங்களையும் சந்தைகளையும் சிறப்பாகச் செயலாற்றச் செய்தல்

## றொபேட் கிளிட்காட்

அண்மைக் காலங்களில் கட்டில்லாச் சந்தைச் சீர்திருத்தங்களுக்கான போக்குகள் உலகெங்கும் பரந்து காணப்படுகின்றன. சிலர் இதனை ஒரு புரட்சி எனவும் அழைக்கின்றனர். கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பா, முன்னைய சோவியத் யூனியன் என்பன இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். ஆனால் ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள பல வளர்முக நாடுகள் இதற்கு முன்னோடிகளாகத் திகழ்கின்றன. 1991இல் 50க்கு மேற்பட்ட வளர்முக நாடுகள் சில வகையான அமைப்பு ரீதியான சீரமைப்புக்களை (Structural adjustment) மேற்கொண்டிருந்தன. இவ்வாறான செய்முறையானது பொருளாதார விருத்தியில் சந்தைச் சக்திகளில் தங்கியிருக்கின்றதுடன் அரசின் பங்கினையும் குறைத்து விடுகின்றது. இதற்குச் சிறந்த உதாரணமாக செனீகல் விளங்குகின்றது. 1980இல் இங்கு அமைப்பு ரீதியான சீரமைப்புக்கள் ஆரம்பமாகியிருந்தன. கட்டற்ற சந்தைகளை நோக்கிய இந்த நகர்வு வறுமையையும், கீழுழைப்புப் பிரச்சினைகளையும் சடுதியாகத் தீர்த்து விடமாட்டாது. உதாரணமாக, பொலீவியாவில் குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்கள் 1985இல் ஏற்பட்டன. அப்பொழுது அங்கு பணவீக்கமானது 25,000 சத வீதத்துக்கு மேலாக இருந்தது. 1991ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஆரம்பித்து ஐந்தரை வருடங்களின் பின்னரும் பொலீவியாவின் பொருளாதாரம் உயிரற்றதாகவே விளங்குகின்றது. பணவீக்கமானது விரைவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஆனால் தலா நுகர்வு தொடர்ச்சியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. தனியார் முதலீடுகள் அதிகரிப்பைப் பெறவில்லை. வறியவர்களிற் பெரும்பாலானோர் சீர்திருத்தங்களுக்கு முன்பு இருந்ததிலும் பார்க்க மோசமான நிலையை அடைந்தனர்.

பொலீவியா மட்டுமன்றி, சந்தையை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கிய பல நாடுகளில் இச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட விளைவுகள் ஏமாற்றம் தருபவையாக இருந்தன. பொதுத்துறைச் செலவினங்களில் மேற்கொள்ளப்பட்ட வெட்டுக்கள் வறுமையை அதிகரித்தன. மிக அடிப்படையான பிரச்சினை என்னவெனில் சந்தைகள் எதிர்பார்த்தபடி செயற்படவில்லை. வறியவர்களுக்குச் சேவையாற்றும் எனக் கருதப்பட்டிருந்த பெரும்பாலான சந்தைகள் குறைபாடுகளைக் கொண்டு காணப்பட்டன. இத்தகைய நிலைமைகளில் அரசாங்கக் கொள்கைகளானது சந்தைகளைச் சிறந்த முறையிற் செயற்பட வைப்பதற்கான முக்கிய பங்கினைக் கொண்டிருக்கின்றது.

அரசின் உண்மையான பங்கு அதற்கப்பாலும் காணப்படுகின்றது. எந்த மட்டத்துக்கு அரசாங்கங்களும், சந்தைகளும் விலைகளைத் தீர்மானிக்க வேண்டும். உற்பத்திக்குரிய வளங்களை எந்தளவுக்கு நிர்வகிக்க வேண்டும். அரச உடைமைகளிலும் மேலாகத் தனியார் துறை எந்தளவுக்குக் காணப்படவேண்டும் என்ற விடயங்கள் இதில் முக்கியமானவை. நடைமுறையில் அரசானது பயன்பாடுடைய சந்தைகளை உருவாக்குவதில் பல உதவிகளைச் செய்கின்றது. திறனுடைய சந்தைகள் சடுதியாகத் தோன்றிவிட மாட்டாது. உற்பத்திகளும், புத்திசாதுரியமான சட்டங்களும், அரசாங்கக் கொள்கைகளும், தகவல்களுக்கான சிறந்த சூழலும் காணப்பட வேண்டும். சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்படும் பொழுதும், அதன் விளைவுகள் பலனளிக்கும் போதும் குறிப்பிட்ட நாட்டிற் காணப்படும் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையிலேயே அரசாங்க, தனியார் துறை ஆகிய இரண்டினதும் உண்மையான பொருளாதாரப் பங்காற்றல் தங்கியிருக்கின்றது.

வளர்முக நாடுகளில் இத்தகைய கடினமான சூழ்நிலைகள் காணப்படுகின்றன. வர்த்தக சந்தைகளை உருவாக்குவதில் அரசாங்கங்கள் பயனுறுதிவாய்ந்த முறையிற் செயற்படுவதில்லை. ஏனெனில் பெரும் பாலான அரசாங்கங்கள் அளவுக்கதிகமான அதிகாரக் குவிப்பினாலும், உழைப்பினாலும், திறனின்மைகளினாலும் முறிவடைந்த நிலையிற் காணப்படுகின்றன. அமைப்புரீதியான சீரமைப்புக்களின் பின்னரும் அரசு பல முக்கியமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. ஆனால் பல வறிய நாடுகளில் பொதுத்துறை நிர்வாகத்திற் காணப்படும் நெருக்கடிகளினால் மக்கள் தமது அரசாங்கங்களின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். சந்தையை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தங்கள் தனியார் மயப்படுத்தலைத் தூண்டியிருந்தாலும் பொதுத்துறை ஊழியர்களுக்குச் சிறந்த சலுகைகளை அளிப்பது அவசியமாகும். ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதிகாரம் பன்முகப் படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில், பெரும்பாலான வளர்முக நாடுகளிற் சந்தைகளும், அரசாங்கங்களும், தோல்வியிற் காணப்படுகின்றன. பொருளாதாரச் சீர்திருத்தங்கள் நிலைத்திருந்தால் வளர்முக நாடுகள் சந்தைகளைத் திறந்து விடுவதற்கு அப்பாலும் ஆழமாகச் செல்ல வேண்டும். அமைப்புரீதியான இச் சீரமைப்புக்கள் இந்நடை முறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரசும், சந்தைகளும் சிறந்த முறையில் செயற்படச் செய்தல் வேண்டும்.

## அரசாங்கத்தினைச் சிறப்பாகச் செயற்படச் செய்தல்

அரசாங்கமானது பொதுத்துறை பொருட்களின் 'நியமம்' பற்றியோ, வெளியார்ந்த சூழல் பற்றியோ முக்கிய பங்கினை மட்டும் கொண்டிருக்காது சந்தைகள் போட்டித் தன்மையுடையனவாகவும், திறனுடையதாகவும் இருப்பதற்கும் உதவ வேண்டும். வளர்முக நாடுகளில் ஏற்பட்டு வரும் சனநாயகத்துக்கான புதிய முக்கியத்துவமும், சிறந்த அரசாங்க முகாமைத்துவமும் கட்டற்ற சந்தைச் சீர்திருத்தங்களின் வெற்றியிலேயே பெரிதும் தங்கியுள்ளதினாலும் அரசாங்கம் முக்கிய பிரச்சினைகளைக் கொண்டதாக மாறியுள்ளது.

பொருளாதார முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்ட பல விடயங்களிலிருந்து அரசின் ஈடுபாட்டினை அகற்றுதலை வரவேற்ற சில அவதானிப்பாளர்களுக்கு இந்நிலைமை ஆச்சரியந் தருவதாக இருந்தது. ஆனால் கோட்பாட்டினையும், நடை முறையையும் இது விளக்குகின்றது. பெரும்பாலான சந்த்தகள் சிறப்பாக இயங்கவில்லை. பொலீவியாவில், பொருளாதாரமானது பிரதானமாக சுரங்கமறுத்தல், கைதரோகாபன்கள் என்பவற்றில் தங்கியிருந்தாலும் அதன் பொருளியலானது ஒழுங்கு படுத்தப்படாத தனியார் துறைச் சரண்டலுக்கு முற்றும் சாதகமாக இருக்கவில்லை. சூழலியற் பிரச்சினைகள் மிக முக்கியமானதாக இருந்தமையால் அரசாங்கக் கொள்கை மிக முக்கிய பங்கினை வகிக்க வேண்டியிருந்தது. கொக்கேய்ன் போன்ற சட்டரீதியற்ற கைத்தொழிற் பரம்பல்களும் , கடத்தல் போன்ற சட்டரீதியற்ற நடவடிக்கைகளும் பொருளாதார வாழ்வின் பல விடயங்களுடனும் இணைந்திருந்தமையினால் அரசாங்கத்தின் எதிர்ச்செயற்பாடு அவசியமாக இருந்தது.

ஏனைய ஒவ்வொரு நாடுகளிலும் உள்ளது போன்று, பொலீவியாவின் பேரினப் பொருளாதாரக் கொள்கை உருவாக்கத்திலும், கட்டுமான, சமூக நிகழ்ச்சித் திட்டங்களிலும் அரசாங்கம் பிரதான பங்கினைக் கொண்டிருக்க வேண்டும். பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கையைக் குறிப்பிடத் தேவையில்லை. வெற்றிகரமான தாராள மயப்படுத்தலானது உயர் திறன் கொண்ட அரசாங்க முகாமைத்துவத்தையும் அது தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளையும் வேண்டி நிற்கின்றது. சூழலைப் பாதுகாப்பதற்கான புதிய முயற்சிகள், புதிதாகத் திறந்து விடப்பட்ட முதல் சந்தைகளின் பொருத்தமான ஒழுங்கமைப்புக்களும், வங்கியல் முறைமைகளும் அவசியமானவை. கட்டற்ற சந்தையானது சட்ட முறைமைகளையும், தரங்களையும், நியமங்களையும், சொத்துரிமைகளையும் வேண்டி நிற்கின்றது. இவை முழுவதையும் வழங்குவதற்கு அரசாங்கம் உதவுதல் வேண்டும். ஆனால் பெரும்பாலான வளர்முக நாடுகளில் அரசாங்கங்கள் இத்தகைய முக்கிய செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதிற் தோல்வியையே தழுவியுள்ளன.

## பொதுத்துறையில் ஊக்குவிப்புக்களை மேம்படுத்தல்

அரசாங்கச் சலுகைகளினால் ஏற்பட்ட நெருக்கடிகள் பல வறிய நாடுகளைச் சீரழித்துள்ளன. அரசியல், வழக்காறுகள், வறுமை என்பன அரசாங்கத் துறை ஊக்குவிப்புக்களைக் கட்டாயப்படுத்துவதுடன் அவை கொள்கை வகுப்பாளர்களினால் நன்கு விளங்கிக் கொள்ளப்படுவதுமில்லை. அனுபவரீதியாக, அரசாங்கத்துறை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னேற்றங்கள் சாத்தியமானதாகவே இருக்கின்றன. முன்னேற்றங் களுக்கான செயற்பாடுகள் இரு அடிப்படை அம்சங்களில் தங்கியுள்ளது.

1. முதலாவது படியானது அரசாங்கத்துறை நிகழ்ச்சித்திட்டங்களின் சமூக நோக்கங்களை விளக்கமாகக் குறிப்பிடுதலும் அந்நோக்கங்களுக்கான பொருளாதாரப் பெறுமதிகளைக் கணிப்பீடு செய்தலுமாகும். இந்நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது அரசாங்கத்துறை அலுவலகர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் அதன் ஒரு பகுதியாக அமைய வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

2. அமைப்பு ரீதியான சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் நியமக் கோட்பாட்டின் மீது கவனம் செலுத்துதல் முக்கிய அம்சமாகும். விலைகளைச் சரியாகக் கொண்டிருத்தல் எனக் கூறப்படுகின்றது. இலகுபடுத்திக் கூறுவதாயின் வேதனங்கள் தான் விலைகள். அநேக வளர்முக நாடுகளில் கடுமையான வரவு செலவுத்திட்ட நெருக்கடிகளினால் ஏற்படும் பாதிப்புக்களினால் அரசாங்கத்துறைச் சம்பளங்கள் கடுமையாக வெட்டப்படுகின்றன. அரசாங்கத்துறையிற் தகுதியான நபர்களைக் கவர்வதற்கான போதுமான, கவர்ச்சிகரமான சம்பள மட்டங்கள் நிலைநிறுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்முக நாடுகளிற் பரந்தளவில் காணப்படும் ஊழல்களின் பாதிப்பைத் தமது அரசாங்கத்துறைகளிற் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் ஊழலைக் குறைப்பதற்கான சிறந்த அணுகு முறையானது இதனை ஒரு கொள்கை மற்றும் முகாமைத்துவப் பிரச்சினையாக நோக்குகின்றது. தகவல்களும், ஊக்குவிப்புக்களும் இதற்கான உள்ளார்ந்த மைய ஊக்குவிப்புக்களாக விளங்குகின்றன.

இந்த வகையான அணுகுமுறையைப் பயன்படுத்தி எவ்வாறு ஊழலை இல்லாதொழிப்பது என்பதற்குச் சிறந்த உதாரணம் உள்ளது. 1975இல் நீதிபதி எவ்ரன் பிளானா என்பவர் பிலிப்பைன்சின் உள்நாட்டு வருமானப் பணியகத்தைப் (Bureau of Internal Revenue - BIR) பொறுப்பேற்றபோது எதிர்கொண்ட பிரச்சினைகளைக் கவனிக்கவும். அக்காலத்தில் வாங்குதல், விற்றல் அடிப்படையிலேயே சட்டரீதியற்ற வருமானங்களை ஊழலின் ஊடாக உருவாக்குவதற்கான உள்ளார்ந்த தன்மை காணப்பட்டது. மோசடி, ஏமாற்றுதல், போலியாகக் காட்டுதல், வரிகட்டுவோரிடம் பணம் அறவிடல் , அலுவலக வேலைகளைச் செய்வதற்குப் பணம் வழங்கல், வரிவிதிப்பில் குறைப்பைச் செய்வதற்கான கொடுப்பனவுகள், உள்ளார்ந்த விசாரணைகளில் ஊழல் போன்ற அம்சங்களைப் பிளானா கண்டுபிடித்தார்.

இவ் ஊழலுக்கான காரணங்களிற் கவனம் செலுத்தத் தொடங்கினார். குறிப்பாக, உள்நாட்டு வருமானப் பணியக முகவர்களுக்கான வாய்ப்புக்களையும் உள் நோக்கங்களையும் கவனத்திற் கொண்டு தகவல்கள் மற்றும் ஊக்குவிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஊழலுக்கு எதிரான மூன்று பகுதியைக் கொண்ட உபாயங்களை விருத்தி செய்தார்.

1. உள்நாட்டு வருமானப் பணியக ஊழியர்களின் உதவியுடன் புதிய செயலாற்ற மதிப்பீட்டு முறையை ஸ்தாபித்ததுடன் ஊக்குவிப்புக்களை இதனுடன் இணைத்துக் கொண்டார்.

2. ஊழல் தொடர்பான நடவடிக்கைகளைப் பற்றிப் பல்வேறு தகவல் மூலாதாரங்களைச் சேகரித்தார்.

3. உயர்மட்ட ஊழல் புரிபவர்களைத் தண்டித்தார். இது பணியக ஆளணியினருக்கும் பொது மக்களுக்கும் விதிகள் மாற்றமடைந்து விட்டன என்ற எச்சரிக்கையை அளித்தது.

மூன்று வருடங்களுக்கிடையில் சட்டரீதியற்ற பண வசூலிப்புக்கான உள்நாட்டுச் சந்தை ஒழிக்கப்பட்டது. வரிப்பொறுப்புக்களைக் குறைப்பதற்கான பக்கக் கொடுப்பனவுகள் பெருமளவு குறைக்கப்பட்டது. உள்ளார்ந்த ரீதியிற் காணப்பட்ட ஊழல்கள் குறிப்பிடத்தக்களவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சியடைந்தது. அலுவலக வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கான கொடுப்பனவுகளும் வீழ்ச்சியடைந்தன. வரி வருமானம் அதிகரித்தது.

அரச ஆதிக்கமுடைய பொருளாதார அபிவிருத்தி உபாயங்களினாலேயே அரசாங்கத்தில் அளவுக்கதிகமான மத்தியமயப்படுத்தப்பட்ட தன்மை காணப்படுகின்றது. இதுவே வெளிமுக நாடுகளிற் சந்தையடிப்படையிலான சீர்திருத்தங்களுக்குப் பொதுவான தடையாக விளங்குகின்றது. எடுத்துக்காட்டாக, ஆபிரிக்காவில் வேறுபாடான சமூக, பொருளாதாரச் சூழல்களைக் கொண்ட நாடுகளில் - கானா, கெனியா, ஐவரிக்கோஸ்ட், மாலி போன்றவை இதே போன்ற மத்திய மயப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு காணப்படுகின்றன. சனநாயகமானது தனிக்கட்சி அல்லது கட்சியற்ற முறைகளினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. தேசியத்திட்டமிடலும் நிர்வாகமும் எல்லா அரசாங்கப் பொருட்கள், சேவைகளையும் கட்டுப்படுத்துகின்றது. உள்ளூராட்சி அரசாங்கத்துக்குச் சுதந்திரமான நீதித்துறை அதிகாரம் வழங்கப்பட வில்லை.

பன்முகப்படுத்தலானது திறனின்மைகளையும் ஏற்படுத்தக் கூடும். தன்சானியாவின் "உஜாமா" (Ujamma) எனப்படும் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அனுபவம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கமானது மத்திய அரசாங்க நடவடிக்கைகளையும், திட்டமிடலையும், உள்ளூராட்சியின் முயற்சிகளையும் ஒருங்கிணைப்பதற்குப் பிரதேச, மாவட்ட, கிராம மட்டங்களில் அபிவிருத்தி அதிகார சபைகளை ஸ்தாபித்தது. ஆனால் இதன் விளைவுகள் அழிவைக் கொண்டிருந்தன. 1969-1983 காலத்தில் தன்சானியாவின் மெய்கிராம வாழ்க்கைத் தரமானது வருடச் சராசரி 2.5 வீதமாக வீழ்ச்சியடைந்து. புதிய ஸ்தாபனங்கள் பணப்பொறிகளாக மாறின. மத்திய அரசாங்கத்தைப் பாதித்த திறனின்மை, ஊழல்கள் ஆகியவற்றை இவையும் கொண்டிருந்தன.

மரபுரீதியாகப் பன்முகப்படுத்தலானது உள்ளூர் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ இயலளவுகளினதும், அரசியல் விருப்புக்கள் ஆகியவற்றின் பற்றாக் குறையினாலேயே தோல்வியடைந்திருக்கின்றன. பொதுத்துறைச் சீர்திருத்தங்களின் ஏனைய சில பகுதிகளைப் போலவே பற்றாக்குறையான தகவல்கள், ஊக்குவிப்புக்களுடனும் இத் தோல்விகள் தொடர்புடையன. அரசாங்கத்தின் எந்தப் பகுதிகளைப் பன்முகப்படுத்தலாம் அல்லது ஒருங்கிணைக்கலாம் என்ற கேள்வியும், தகவல்களின் போதுமான தன்மையும், ஊக்குவிப்புக்களினைக் கொண்டிருக்கும் சூழலில் எவ்வாறு தங்கியிருக்கலாம் என்பதும் முக்கியமானது. செயலாற்றுகை பற்றிய வெளிப்படையான தகவல்களின் முன்னேற்பாடுகளும் ஊக்குவிப்புக்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புபடுத்தும் புதிய வழிகளின் விருத்தியும் மிக முக்கியமானது. இவை உள்ளூர்த் திறமைகளின் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கான பயிற்சிகளிலும் பார்க்க மிக முக்கியமானவை.

இந்தோனேசியாவின் மக்கள் வங்கியினால் எவ்வாறு பன்முகப்படுத்தல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதென்பது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். 1984இல் தொடர்ச்சியான பல சீர்திருத்தங்கள் அமுல்படுத்தப்பட்டன. கிராமிய வங்கியில் பிரிவுகளுக்குக் கடன் வழங்குதலில் அதிகாரம் வழங்கப்பட்டமையைக் குறிப்பிட முடியும். அத்துடன் யதார்த்த ரீதியான தகவல்களை உருவாக்குவதற்கான கணக்கியற் சீர்திருத்தங்கள், தாராளமயப்படுத்தப்பட்ட பண முகாமைத்துவ விதிகள், கிராமியப் பிரிவு அலுவலக அங்கத்தவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் (அவர்கள் திறனையும், புதிய வாடிக்கையாளர்களையும் அதிகரித்தல்) என்பனவும் இவற்றில் அடங்கும். மூன்று வருடங்களில் இவ் அளவானது மூன்று மடங்காக அதிகரித்தது. முதலாவது வருடத்தில் பணத்தை இழந்தபின், நிகழ்ச்சித்திட்டமானது லாபகரமானதாக மாறியது. ஏறக்குறைய 82 சத வீதமான கிராமியப் பிரிவுகள் 1988இல் இலாபத்தில் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

முன்னேற்றகரமான தகவல்கள் மற்றும் ஊக்குவிப்புக்களின் அடிப்படையிலான பொதுவான சீர்திருத்தங்கள் எதிர்வரும் வருடங்களில் நிலையான பொதுக் கொள்கையைக் கொண்டிருக்கும். தகவல்களின் முக்கியத்துவமும், தகவற் செயற்பாடுகளும் வெளிக்காட்டுவதன்படி, புதிய மீள் கருத்தியலாக்க வழிகளானது அரசாங்கத்தின் பங்கினை மட்டுமன்றிப் பொருளாதார அபிவிருத்தியின் இயல்பினையும் எடுத்துக் காட்டியது. குறிப்பாக அபிவிருத்தியிற் சந்தைகளின் பங்கினையும், சிறப்பாகச் சந்தைகள் எப்படி இயங்க வேண்டும் என்பதையும் கூறுவதாக இருந்தது.

## சந்தைகளைச் சிறப்பாக இயங்கச் செய்தல்

வளர்முக நாடுகளிற் சந்தைகளின் செயற்பாடுகள் செயலற்றதாக உள்ளன. அத்துடன் சந்தைத் தோல்விகளுக்குப் பல காரணங்களும் உள்ளன. பல வகையான சந்தைகளுக்குச் (கடன், விவசாயம், வீடமைப்பு) சில அடிப்படைகள் அவசியமானவை. இவையில்லாமற் செயற்படுபவை திறனற்றவையாக உள்ளன. இங்கு கூறப்படும் செயற்பாடுகள் மிகத்தெளிவான சொத்துடைமை உரிமைகளை வேண்டி நிற்கின்றதுடன் ஒப்பந்தங்களைச் செயற்படுத்தவும் திருட்டுகளைத் தடுக்கவுமான சட்ட விதிகள் மற்றும் சந்தைத் தகவல் முறைமைகளையும் கொண்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவை தொடர்ந்து இருப்பதற்கு கூட்டுச் செயற்பாட்டில் தங்கியுள்ளது. அத்துடன் அரசாங்கத்தினால் அவை மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

பொருட்கள், சேவைகளின் தரம் பற்றிய தகவல்களும் குறிப்பாகத் தொழிலாளர் வீடமைப்புப் பற்றியவை மிக முக்கியமானது. சந்தை நிறுவனங்கள் சரிவரச் செயற்படாதிருந்தால் சந்தைகள் சரிவரச் செயற்படாது தோல்வியை அடையும். இத்தகைய குறைபாடுகள் விவசாய உற்பத்திகள் மற்றும் கடன்களுக்கான சந்தைகளில் அவதானிக்க முடியும். வறிய விவசாயிகள் மற்றும் முறைசாரா தொழில் நிறுவனங்களுக்கு முக்கியமானவை.

1970களின் நடுப்பகுதியில் பாகிஸ்தானின் கராச்சியில் நகர பால் சந்தைகளானது விவசாயச் சந்தையின் குறைந்த செயற்பாட்டைக் கொண்டிருந்தமைக்கு தரம் பற்றிய தகவல் பற்றைக்குறையே காரணமாக இருந்தது. பாலின் தரமானது விற்பனையாளருக்கு விற்பனையாளர் வேறுபாட்டைக் கொண்டிருந்தது. பாலுடன் நீரைக் கலக்கும் விற்பனையாளரின் பொதுவான நடைமுறை நுகர்வோர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் எவ்வளவு நீர் கலக்கப்படுகின்றதென்பதை இலகுவாகத் தீர்மானிக்க முடியாது. தரம் இல்லை. ஒவ்வொரு வகைகளுக்கும் பெயர்கள் இல்லை. தரத்துக்கான ஆகக் குறைந்த மட்டம் இல்லை. ஆனால் பாலுக்கான ஒரு சந்தை விலையே காணப்பட்டது. எனவே பால் சந்தையின் குறைவான செயற்பாடானது பால் உற்பத்தியினதும், நுகர்வினதும் உப உத்தம மட்டத்துக்கு இட்டுச் சென்றது.

இதே வகையான பிரச்சினைகளையே இந்தியா தனது பால் சந்தையில் மிக இலகுவாக வெற்றி கண்டது. கையினால் இயக்கப்படும் இயந்திரத்தின் மூலம் பாலின் கொழுப்பு உள்ளடக்கத்தைப் பரிசோதிப்பதற்கான வழியை ஏற்படுத்தியது. ஒவ்வொரு சந்தை நிலையிலும் பாலின் தரம் பற்றிய தகவல்களை இவ்வியந்திரம் வழங்கியது. விவசாயிகளும் தமது பாலின் தரத்திற்கேற்ற விலைகளைப் பெற்றனர். நீரைக் கலப்பதற்கான ஊக்குவிப்புக்களைப் பெற முடியவில்லை. வர்த்தகக் குறியும் இறுதியில் பயன்படுத்தப்பட்டது. பால் சந்தை மிகத் திறமையாகச் செயற்பட்டதுடன் இந்தியாவில் நுகரப்பட்ட பாலின் தரமும், அளவும் உயர்வடைந்தது.

தகவல்களானது பரந்த நோக்கில், சந்தைகளின் வளர்ச்சியில் அதாவது பொருளாதார விருத்தியில் முக்கிய பங்கினைக் கொண்டிருக்கின்றது. பொருளாதார விரிவாக்கமானது தகவல்களுக்கான புதிய தேவைகளை உருவாக்குகின்றது. மொத்த அளவுகள், சராசரி விலைகள் மாத்திரமின்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமும் அவசியமானது. அதிகரிக்கும் விசேட சிறப்புத் தன்மையானது தகவல்களிலும் விசேட சிறப்புத் தன்மையை அதிகரிக்கின்றது. பொருத்தமான பொது மற்றும் தனியார் கொள்கைகள் இல்லாவிட்டால் சந்தை நிறுவனங்கள் பின்னடையும். அதனாற் பொருளாதார வளர்ச்சி தடைப்படும்.

தகவல்கள் உறுதியானதாக இருந்தால் அரசாங்கத் தலையீடு எல்லாவற்றையும் சிறப்பானதாக மாற்றும். விற்பவர்களும், வாங்குபவர்களும் தகவல்களை விருத்தி செய்வதற்குத் தாங்களாகவே நடவடிக்கைகளை எடுத்தாலும் அச் செயற்பாடுகள் அரசாங்கம் போன்ற மூன்றாவது கட்சிகளின் ஆதரவை வேண்டிநிற்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒப்பந்தங்களுக்கு அமுலாக்கம் தேவைப்படுகின்றதுடன் அரசாங்கத்தின் விதிகளானது விளம்பரங்கள், இலச்சினை பொறித்தல் உண்மையை உறுதிப்படுத்தல் போன்றவற்றுக்குத் தேவையானது.

வளர்முக நாடுகள் சந்தைகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்புரீதியான சீரமைப்புக் கொள்கைகளை எடுத்து வருவதினால், தகவல் மற்றும் நிறுவனரீதியான அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் அரசாங்க, சந்தைகளின் மேம்பாட்டுக்கான பரிகாரங்களாக இவை விளங்குகின்றன. தகவல்களும், அறிவும் அபிவிருத்தியின் மையங்களாகும். தகவல்களையும், தகவற் செயற்பாட்டுக்கான இயலள வையும் மிகக் குறைந்த மட்டத்தில் கொண்டிருக்கும் தனிநபர்களும், சமூகங்களும் உண்மையில் வறியனவாகவே இருக்கும்.

வளர்முக நாடுகளில் காணப்படும் பலவீனமான சந்தைகள், செயலற்ற அரசாங்கங்களின் உண்மை நிலைகளைச் சீர்திருத்துவதற்கு உபாயங்கள் நிச்சயமாக உதவி செய்யும். இந்த யதார்த்த நிலைமைகள் (அவற்றை அடையாளம் செய்வதற்கான தகவல் மற்றும் ஊக்குவிப்பை அடிப்படையாகக் கொண்ட உபாயங்கள்) சந்தையை அடிப்படையாகக் கொண்ட உபாயங்களை நோக்குவதற்கான ஒரு புதிய வழியைத் தருகின்றன. மரபுரீதியான விவாதங்களில் குறிப்பிடப்படுவது போன்று அரசாங்கத்தின் பங்கு எதிர் சந்தையின் பங்கு எவ்வளவுக்கு இருக்க வேண்டும் என்று அழுத்திக் கூறுவதினால் இருந்த யதார்த்த நிலைமைகளை அடையாளம் செய்ய முடியாது. பதிலாக, அரசாங்கம் சந்தைகள் இரண்டும் நன்றாகச் செயற்படச் செய்வதிலேயே சவால் காணப்படுகின்றது. பொருளாதாரச் சீர்திருத்தங்கள் நிலைத்திருக்குமாக இருந்தால் இந்த யதார்த்தங்களை அவை அடையாளம் செய்யக் கூடியதாக இருப்பதுடன் இத்தகைய சவால்களையும் அவை எதிர்நோக்கக் கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

# புதிய முதலாளித்துவம்

## பீற்றர் எம். டிரக்கர்

கடந்த 25 ஆண்டுகளில் அமெரிக்கப் பொருளாதார அமைப்பானது கைத்தொழில் - நிதி- இணைப்புக்களினால் (Mergers) அடிப்படை மாற்றங்களைப் பெற்றுள்ளது. மூன்றாவது அலை எனக் குறிப்பிடக்கூடிய இந்த இணைப்பானது இந்நூற்றாண்டில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வேறு இரு அலைகளையும் விடக் குறிப்பிடத்தக்களவிற்கு வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.

முதலாவது இணைப்பலை 1900-1910ஆம் ஆண்டுகளுக்கிடையில் உச்சத்தை அடைந்தது. இதற்கு, முன்னுதாரணமாக அமைந்தது வர்த்தகப் பெரும்புள்ளிகளாக ஜே.பி. மோர்கனுடைய ஐக்கிய அமெரிக்க இரும்புருக்கு நிறுவனமும், ஜோண் டி. றொக்பெல்லரின் ஸ்ராண்டர்ட் எண்ணெய் கம்பனியும் இணைக்கப்பட்டன. இத்தகைய இணைப்புகள் மூலம் ஒரு கைத்தொழிலதிபர் அல்லது நிதி வழங்குனர் ஒரு பெரும் கைத்தொழிலின் கட்டுப்பாட்டைப் பெறுவதன் மூலம் பாரிய பொருளாதார ஆதிக்கத்தைப் பெற முனைந்தார். எனவே இதனை நாம் 'தாக்குதல் இணைப்பு" (ofensive merger) எனலாம்.

1920களில் ஏற்பட்ட இரண்டாவது இணைப்பலை முதலாவது இணைப்பலையை விட மாறுபட்டிருந்தது. அது "தற்காத்துக் கொள்ளும்" (defensive) பண்பினைப் பெற்றிருந்தது. இதற்கு முன்னுதாரணமாக மத்திய மோட்டார் (General Motors) நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இதில் ஹென்றி போர்ட்டின் தனியுரிமைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சிறு சிறு நிறுவனங்கள் 1910 - 1920 ஆண்டுகளுக்கிடையில் ஒன்றிணைந்தன. இவ்வாறான "தற்காப்பு" இணைப்புகளின் நோக்கம் முதலாவது இணைப்பலையின் காரணமாக உருவாகிய "இராட்சதர்"களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பல்வேறு கைத்தொழில்களிலும் ஓர் "இரண்டாமிடத்தை" உருவாக்குவதேயாகும். இக்காலத்தில் உருவாக்கப்பட்ட பல் இணைப்புகள் பின்னர் பெரிய கம்பனிகளாக மாறின. உதாரணமாக ஜெனரல் மோட்டோர்ஸ் நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இத்தகைய தற்காப்பு இணைப்புகள் நாட்டின் பிரதான கைத்தொழில்களிடையே வலுவாண்மை குவிந்து கிடப்பதைத் தவிர்த்து கூடிய சமத்துவத்தையும் ஆர்வத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட போட்டிச் சந்தையை உருவாக்கியது. இதன்காரணமாக "தனியுரிமை" தகர்க்கப்பட்டு "சிலருரிமை" உருவாகியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உருவாகிய மூன்றாவது அலை வெவ்வேறு திசைகளில் குறிப்பாக 1960 களில் பரவியது. இவற்றில் பன்முகப்படுத்தப்பட்ட இணைப்பு (diversification merger) குறிப்பிடத்தக்கது. இதன்படி தனது துறையில் அதிகளவில் முன்னணி வகிக்காத ஒரு கைத்தொழில் தன்னைப்போன்ற பருமன் கொண்ட ஆனால், வித்தியாசமான இன்னொரு கைத்தொழிலுடன் இணைந்தது. இதற்கு உதாரணம் IT & T (International Telegraph and Telephone) நிறுவனமாகும். உண்மையில் இக்கம்பனி வெளிநாடுகளில் குறிப்பாக ஸ்பானிய மொழிபேசும் நாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தது. இக்கம்பனி டெலிபோன் உபகரணங்கள் தயாரிப்பிலும் ஈடுபட்டிருந்ததுடன் இதனை அமெரிக்கன் ரெலிபோன் மற்றும் ரெலிகிராப் கம்பனியின் வெளிநாட்டு சகோதர கம்பனி என்றும் கூறலாம். கடந்த 40 ஆண்டு காலத்தில் இக்கம்பனி படிப்படியாகத் தனது டெலிபோன் கம்பனியினை இழந்து விட்டது. ஆனால் அதற்குப் பதிலாக இலக்ரோனிக் உபகரணங்களில் உலகளாவிய தயாரிப்பாளராக மாறியுள்ளது. இதனுடைய மொத்த வெளியீடு பாரியதாக இருப்பினும் சந்தை வாய்ப்பு மற்றும் தொழின்முறையியல் ஆகியவற்றில் ஒவ்வொரு வகையான இலக்ரோனிக் தயாரிப்பிலும் பின்தங்கியே உள்ளது. அதை விடக் கடந்த பத்துப் பதினைந்தாண்டுகளில் தனது ஆரம்ப வர்த்தகத்துடன் எத்தகைய சம்பந்தமும் இல்லாத கம்பனிகளை அது இணைத்துள்ளது. Avis-Rent-A-Car, Sheraton Hotel Chain, Levitt (தனியார் வீடுகளைக் கட்டுவோர்) ஆகிய கம்பனிகளை அது தன்னோடு இணைத்துள்ளது.

## "பொறுப்பேற்கும் இணைப்பு"

பன்முகப்படுத்தும் இணைப்பு 1964 அல்லது 1965 இல் அதன் உச்சத்தை அடைந்தது எனலாம். தொடர்ந்து 1969 வரை இன்னொரு வகையான இணைப்புப் பிரபல்யம் பெற்றது. அதுவே "பொறுப்பேற்கும் இணைப்பாகும்" (take over merger) இத்தகைய இணைப்பு பங்குதாரர்களை முகாமைத்துவத்துக்கு எதிராகத் தூண்டிவிடுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பொறுப்பேற்கும் கம்பனி மிகவும் சிறியதாகவே இருக்கும். அதேவேளை இக்கம்பனி பெரும்பாலும் தொழிலுக்குப் புதிதாகவும் இருக்கலாம்.

உண்மையில் இந்தப் "பொறுப்பேற்றலை" ஓர் இணைப்பு என்பதைவிடச் "சதிப்புரட்சி" என்றே கூறலாம். வியாபாரத்துடன் கொஞ்சமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமில்லாத ஒருவர் "தொழில்சார் முகாமைத்துவத்தைப் பங்குதாரர்களின் உதவியுடன் விரட்டிவிட்டுத் தான் எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொள்வதுதான் இந்தப் "பொறுப்பேற்றல்" எனலாம். ஆரம்பிப்பதற்கு எந்த முதலீடும் இல்லாமல் கோடிக்கணக்கான வருமானத்தினைக் காட்டக்கூடிய "கூட்டுகளை" (Conglomerates) அவர்கள் உருவாக்கினார்கள்.

இவ்வாறு பல புதிய தொழின் முயற்சியாளர்கள் உருவாகினார்கள். இவர்கள் கம்பனிகளின் "உரிமையாளர்கள்" (owners) அல்லர். ஆனால் பொதுக் கம்பனிகளின் பங்குதாரர்களினைத் திரட்டி அவர்களைக் கம்பனி முகாமைத்துவத்துக்கெதிராக நகர்த்தும் திறன் கொண்டவர்களாக இருந்தனர். இவர்கள் "பன்முகப்படுத்தலை" ஏற்படுத்தவில்லை. மாறாக நிதிக்கட்டுப்பாடுகளைத் தந்திரத்துடன் கையாள்வதன் மூலம் கூட்டுகளை உருவாக்கினார்கள்.

## புதிய "வளர்ச்சிக்" கம்பனிகள்

எவ்வாறெனினும் இக்கால கட்டத்தில் தோற்றம் பெற்ற புதியதொரு தொழின்முயற்சியாளர் குழுவினர் புதிய "வளர்ச்சி" பெற்றுவரும் வியாபாரங்களைக் கட்டியெழுப்பினார்கள். புதிய வியாபாரம் எல்லாக் காலத்திலும் தோற்றம் பெறுகின்றது. எனினும் இப் புதிய "வளர்ச்சி" வியாபாரம் என்ற பெயரிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் ஆரம்பத்திலிருந்தே இவை மூலதனச் சந்தையிலிருந்து பாரிய மூலதனங்களைப் பெற்றன.

1965-69 காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் சுமார் 9,000 புத்தம்புது "வளர்ச்சி" வியாபாரம் தோன்றின. இவ் வியாபாரங்களை ஆரம்பித்த முயற்சியாளர்கள் அவை துளிர்த்தெழு முன்னரே ஒரு மில்லியன் டொலருக்கு மேற்பட்ட தொகையினை மூலதனச் சந்தையிலிருந்து திரட்டக் கூடியதாக இருந்தது. இவர்கள் ஓரிரு ஆண்டுகளில் திரும்பவும் வியாபாரத்துக்கு மேலதிக முதலீடுகளைத் தேடி மூலதனச் சந்தைக்கு வந்தனர். ஒரு மில்லியன் டொலர் முதல் 10 மில்லியன் டொலர் வரை இவர்கள் கோரினர். இக் கம்பனிகள் சிறியளவின; அத்துடன் அவற்றின் முதலீட்டாளர்களும் சிறிய எண்ணிக்கையினரே. இவர்களும் கூடத் தமது காப்பீடுகளைக் (Securities) காப்பீட்டு நாணயமாற்று ஆணைக்குழுவுடன் (securities Exchange Commission) பதிவு செய்து கொள்ள வேண்டிய அவசியம் சட்டரீதியாக இருக்கவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் இவர்கள் 5 முதல் 10 மில்லியன் டொலர் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960களில் "விஞ்ஞானம் சார்ந்த" கைத்தொழில்கள் (கணணிப் பிரயோகம், "கற்றல்" முதலியவை) புதிய "வளர்ச்சி" முயற்சிகளில் மிகச் சிறிய பகுதியையே கொண்டிருந்தன. ஆனால் பொதுவாக இவற்றில் தான் இவர்கள் கூடிய அக்கறை செலுத்தினார்கள் எனக் கருதப்பட்டதில் எவ்வித உண்மையும் இல்லை. "இந்தக் கவர்ச்சி முதலீட்டாளர்கள்" பொதுவாக உணவகங்கள், சஞ்சிகை, புத்தக வெளியீடு, ஆஸ்பத்திரிகள், முன் தயாரிக்கப்பட்ட வீடமைப்பு, உற்பத்தி, பங்குத்தரகு நிறுவனங்களிலேயே கூடிய கவனம் செலுத்தினர்.

எப்படியிருப்பினும் இவையாவும் ஹெரக்ஸ் (Xerox) கம்பனியுடன் ஒப்பிட முடியாதவைகளாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்கப் பொருளாதாரத்தில் இந்தக் கம்பனியே மிகச் சிறந்த இடத்தை வகித்தது. 1950களில் ஒரு மில்லியன் டொலர் விற்பனையை இக்கம்பனி கொண்டிருந்தது. 1960 களில் 15 மில்லியனாக அதிகரித்து 1969இல் 1.5 பில்லியன் டொலர் விற்பனையை இக்கம்பனி கொண்டிருந்தது. இப் புதிய கம்பனிகள் மிகக் குறுகிய காலத்தில் ஒரு மத்திய பருவ வளர்ச்சியை அடைந்தன. அவைகளின் விற்பனை 50-100 மில்லியன் டொலர்வரை எட்டியது. சில கம்பனிகள் "பொறுப்பேற்கும்" தொழின் முயற்சியாளருக்கு மிகுந்த இலாபத்துடன் விற்கப்படக்கூடிய நிலையை அடைந்திருந்தன. 19ஆம் நூற்றாண்டில் ரயில் பாதையமைப்பு, வங்கித் தொழில் ஆகியவற்றின் பாரிய வளர்ச்சிக்குப் பின்னர் அவற்றுடன் ஒப்பிடக் கூடிய வளர்ச்சியை இங்கு குறிப்பிடப்பட்ட "வளர்ச்சிக்" கைத்தொழில்களே அடையக்கூடியதாக இருந்தது.

## கால்பிறைய்த்தின் மரபுரீதியான அறிவுடைமை

1967இல் "பொறுப்பேற்றலும்", "வளர்ச்சி" வியாபாரங்களும் மூலதனச் சந்தைகளில் பல்கிப்பெருகின. இவ்வருடத்தில்தான் "புதிய கைத்தொழில் அரசு" (The new Industrial State) என்னும் அமெரிக்கப் பொருளியலாளர் கால்பிறைய்த்தின் சிறந்த நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் இரண்டு முக்கிய ஆய்வுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

(1) பாரிய கூட்டுத்தாபனங்களில் தொழில்சார் முகாமைத்துவம் மிகவும் ஆழமாக வேரூன்றிவிட்டது. எனவே, அதனை எதிர்ப்பதோ தூக்கியெறிவதோ இயலாத காரியமாகும். "பொது"ப் பங்குதாரர்கள் முகாமைத்துவத்துக்கு எதிராக ஏதும் செய்வதற்கு முடியாத நிலை தோன்றியது. முகாமைத்துவமானது தனது அதிகாரத்தை நிரந்தரமாகத் தக்க வைத்துக் கொள்ள முயன்றதே தவிர இலாபத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏதுமின்றி வாளாவிருந்தது.

(2) கூட்டுத்தாபனங்கள் பொருட் சந்தையையும், மூலதனச் சந்தையையும் கையாளக் கூடிய ஒரு பொருளாதாரத்தில் புதிய வியாபாரங்கள் உள் நுழைவது முடியாத காரியமாகும். அப்படியே அவை நுழைந்தாலும் பின்னர் வளர்ச்சியடைவது நிச்சயமாக முடியாது.

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் கால்பிறைய்த் இவ்விரு கருத்துக்களையும் தனது நூலில் முன்வைத்தபோது தனது முந்திய நூல்களில் அவர் செய்தது போன்று ஒரு புரட்சியைச் செய்தார் என்று கூறுவதற்கில்லை. அல்லது மரபுரீதியான அறிவுடைமையை (conventional wisdom) வெளிக்கொண்டு வந்தார் என்றும் கூறுவதற்கில்லை. அவர் முன்வைத்த இரு கருத்துக்களும் அமெரிக்கப் பொருளாதாரம் பற்றிய மிகவும் மரபுரீதியானதும் பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையுமான கருத்துக்களேயாகும். இக் கருத்துக்கள் முதலாம் உலகப் போருக்கு முன்னரே பொருளியலாளர் ஜோண் ஆர். கொமன்ஸ் (John R. Commons) என்பவரினால் முன் வைக்கப்பட்டிருந்தன. இக்காலத்தில் வெளியிடப்பட்ட வெப்லனின் (Thorstein Veblen) ஆய்வுகளிலும் இக் கருத்துக்கள் காணப்படுகின்றன. 1932இல் வெளிவந்த The Modern Corporation and Private Property என்னும் நூலிலும் இக்கருத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் அமெரிக்க வியாபாரக் கூட்டுத்தாபனங்களைப் பற்றிய ஆய்வில் ஆர்வத்தைத் தூண்டிய மூன்று நூல்களான The Managerial Revolution (1941), The Concept of Corporation (1946), The new Society (1950) ஆகியவற்றிலும் இக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றில் முதலாவது நூல் ஜேம்ஸ் பேர்னாம் (James Burnam) என்பவராலும் மற்றிரு நூல்கள் இக்கட்டுரையின் ஆசிரியராலும் எழுதப்பட்டன. எனவே கால்பிறைய்த் தன்னுடைய புதிய கைத்தொழில் அரசு என்பதில் முன்வைத்தது மரபுரீதியான அறிவுடைமையின் குரலேயாகும். ஆனால் இக்கருத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் காட்டப்பட அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏதோவொன்று நடந்திருக்க வேண்டும்.

உண்மையில் "பன்முகப்படுத்தல் இணைப்பும்" கூட இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் "முகாமைத்துவவாதத்" (managerialism) துடன் ஒத்துப்போகக் கூடிய கோட்பாடல்ல. முகாமைத்துவவாதம் கூறுவதென்னவெனில் பாரிய பொதுக் கம்பனிகளில் ஆழ்ந்துள்ள முகாமைத்துவத்துக்கு வெளி நிதிச்சந்தை தேவையில்லை என்பதாகும். "ஒதுக்கி வைக்கப்பட்ட வருமானம்" (retained earnings) மூலம் அவை தம்மைத் தாமே நிதியீட்டம் செய்து கொள்ள முடியும் என வாதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த வாதம் ஏற்றுக்கொள்ளப்படலாம் எனில், "பன்முகப்படுத்தல் இணைப்பு" நிச்சயம் ஏற்பட்டிருக்க முடியாது.

இக் கோட்பாடானது இக்கம்பனிகள் முகாமைத்துவத்துக்காகப் போட்டியிடத் தேவையில்லை எனக் கூறுகிறது. முகாமைத்துவமானது தன்னைத் தானே தக்க வைத்துக் கொள்ள முடியும் எனவும் கூறப்படுகிறது. ஆனால் இந்த இணைப்புகளில் ஓர் உயர் முகாமைத்துவமானது தானாகவே நீக்கப்படுகிறது. ஏனெனில் இணைக்கப்பட்ட ஒரு கம்பனிக்கு ஓர் உயர் முகாமைத்துவம் மட்டுமே தேவைப்படுகிறது.

## தெரிவுப் பொருளியல்

கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளானது, புதிதாக உருவாகிய இரு "பாரிய சந்தைகளினால்" (mass markets) ஏற்பட்டவிளைவுகளேயாகும். அவையாவன:

(1) மூலதனத்துக்கும் முதலீட்டுக்குமான ஒரு பாரிய சந்தை.
(2) அறிவுரீதியாகப் பணிபுரியும் கற்றோருக்கான தொழில் வழங்கும் பாரிய சந்தை.

சகல முதலாவது பதிலிறுப்புப் (responses) போலவே இவையும் தவறான பதிலிறுத்தல்கள் அல்லது போதுமான அளவுக்கு இல்லாத பதிலிறுத்தல்களாகும். ஆனால் அவை புதிதாகத் தோன்றிய உண்மையான சவால்களுக்கான பதிலிறுப்பாகும். அத்துடன் அச் சவால்கள் விலகப் போவதுமில்லை.

ஒவ்வொரு பொருளாதாரமும் மூன்று பரிமாணங்களைக் கொண்டுள்ளன. அவற்றின், அமைப்பும் அபிவிருத்தி மட்டமும் எப்படியும் இருக்கலாம். ஒரு பரிமாணம் பொருட்களும் சேவைகளுமாகும். இதில் உற்பத்தி, விநியோகம், நுகர்வு ஆகியவையும் அடங்கும். இரண்டாவது பரிமாணம் எதிர்காலத்துக்கு வளங்களை ஒதுக்கீடு செய்வதாகும். இதில் மூலதனத்தின் உருவாக்கமும், முதலீடும் அடங்கும். மூன்றாவது ஒவ்வொரு பொருளாதாரத்திலும் காணப்படும் வேலைகளும், பணிகளும், உயர்தொழில்களுமாகும். இப்பரிமாணங்கள் ஒவ்வொன்றும், அப்பொருளாதாரம் எந்த மட்டத்தில் இயங்கினாலும் வளங்களின் ஒதுக்கீட்டுத் தேவையைக் கொண்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு பொருளாதாரமும் உற்பத்தி செய்யும் மட்டத்தை அடைந்த பின்னரே தெரிவுகள் முக்கியம் பெறுகின்றன. அதன் பின்னரே "சந்தை" அல்லது "திட்டமிடல்" தோன்றுகிறது. இவ்வாறு பெருந்தொகையானோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமுள்ள தெரிவுகளை மேற்கொள்ளக் கூடிய வழங்கல் இருக்கும் போதுதான் "பாரிய சந்தை" உருவாக முடியும்.

18 ஆம் நூற்றாண்டில் பொருட்களையும் சேவைகளையும் கொண்ட பாரிய சந்தையின் தோற்றம்தான் பொருளியல் என்னும் ஒரு துறை திடீரென தோற்றம் பெற்றதை விளக்குகிறது. அர்த்தமுள்ள தெரிவுகள் இல்லாத வரையில் பொருளாதாரமும் இல்லை. ஆனால் ஆரம்பப் பொருளியலானது பழம் பொருளியலாகவோ அல்லது மாக்சியப் பொருளியலாகவோ இருக்கலாம். பணம், மூலதனம், முதலீடு அல்லது தொழில் பற்றிய கோட்பாடுகளை வழங்கவில்லை. இதற்கு அவசியமும் இருக்கவில்லை. ஏனெனில் வேலைகள், தொழில்கள் போன்றவற்றின் குறிப்பிடக்கூடிய தெரிவுகளுக்கான வழங்கல் இருக்கவில்லை.

அடம்ஸ்மித் முதல் மாக்ஸ் ஊடாக மார்ஷல் வரை ஆரம்பப் பொருளாதாரக் கோட்பாடுகள் தொழிலாளர் வழங்கலை விட தொழில்கள் அரிது எனவே எண்ணினர். "கூலியின் இரும்புச்சட்டம்" அல்லது "எல்லைப்பயன்விதி" (marginal utility) ஆகிய கொள்கைகள் இதனையே விளக்குகின்றன. இவ்வாறு 19ஆம் நூற்றாண்டு முழுவதிலும் பொருளியலானது ஒருபுறம் மூலதனத்தையும் மறுபுறம் உழைப்பையும் பண்டங்கள் சேவைகளைக் கொண்ட உண்மையான பொருளாதாரமே தீர்மானிக்கிறது எனக் கருதியது. இவை இரண்டும் தம்மளவில் தன்னாதிக்கத்தையும் இயங்குவிசையையும் கொண்டவையாகக் கருதவில்லை.

## மூலதன உரிமையைப் பரப்புதல்

1930களின் ஆரம்பத்தில் கெயின்சின் ஆய்வுகள் காரணமாக உருப்பெற்ற பணப் பொருளியலின் (monetary economics) அபிவிருத்தி ஒரு பாரிய அமைப்பு மாற்றத்தை முன்மொழிந்தது. அதன்படி பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீட்டுப் பரிமாணம் பெருந்தொகை மக்கள் தெரிவுகளைக் கொண்டிருக்கக் கூடியதான ஒரு உண்மையான சந்தைமுறை தோற்றம் பெற்றது. கெயின்சுக்கும் அவருக்குப் பின்வந்த மில்ரன் பிறீட்மன் போன்றோருக்கும் மூலதனம் மற்றும் முதலீட்டுப் பரிமாணமே உண்மையான பொருளாதாரமாகும். பொருட்களும் சேவைகளும் அவற்றில் தங்கியிருக்கின்றன. ஆனால் முன்னைய பொருளாதாரத்தில் மூலதனமும் முதலீடும் பொருட்களிலும் சேவைகளிலும் தங்கியிருப்பதாகக் கருதப்பட்டது.

1930களின் ஆரம்பத்தில் கெயின்ஸ் தனது நூலை வெளியிட்ட பொழுது மூலதனமும் முதலீடும் ஒரு சிறுதொகையினரின் "பாரிய சந்தையாகவே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஆனால் அது சில தசாப்தங்களுக்கு முன்னிருந்ததைவிட மிகமிகப் பெரியதாக மாறியிருந்தது. 1945 அளவில் நியூயோர்க் பங்குச் சந்தையானது பங்குகளின் பாரிய உடைமையை (mass ownership of shares) அறிவித்த பொழுது அதனுடைய நோக்கம் அமெரிக்க சனத் தொகையில் ஒரு சத வீதத்திலிருந்து மூன்று அல்லது நான்கு சத வீதமாக அதனை அதிகரிப்பதேயாகும். அதன் தொடர்ச்சியாக மூலதனமானது நாட்டில் தேசியமயமாக்கப்படாமல் சமூகமயமாக்கப்பட்டது. சனத்தொகையின் ஏழிலொரு பகுதி அதாவது 30 மில்லியன் அமெரிக்கர்கள் நேரடியான பங்குடைமையாளர்களாக உள்ளனர்.

ஆனால் இன்று, பெருந்தொகையான அமெரிக்கர்கள் உற்பத்திச் சாதனத்தை பென்ஷன் போன்ற நிதி அமைப்புகள் ஊடாகவே உடைமையாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த அமைப்புகளே இன்று உண்மையான "முதலாளித்துவவாதிகள்" எனலாம். இந்நிறுவனங்கள் பொதுவாகக் கூறினால் பெருந்தொகையான, நிதிவள நுகர்வோரின் தொழில்சார் வாங்குவோராக விளங்குகின்றனர். 1969ஆம் ஆண்டின் இறுதியில் இந்நிறுவனங்கள் அமெரிக்க வர்த்தகத்தின் 35-40 வீதமான மூலதனத்தைக் கொண்டிருந்தன. இதன் விளைவாக இந்த நாட்டில் நிதி வள உடைமையானது அதே அளவான சமத்துவத்தின் அடிப்படையிலேயே (அல்லது அசமத்துவத்தின் அடிப்படையிலேயே) பங்கிடப்பட்டுள்ளது. 1920களில் ஏற்பட்ட முதலாவது "பாரிய நுகர்வு" எழுச்சியின் பொழுது (mass consumption boom) பொருட்கள் சேவைகளின் நுகர்வு பங்கிடப்பட்டது. அமெரிக்க சனத்தொகையில் 20 சத வீதத்தினர் அமெரிக்க வர்த்தகத்தில் 35 வீதத்தை உடைமையாகக் கொண்டுள்ளனர் அல்லது கட்டுப்படுத்துகின்றனர் எனக் கூறலாம். சனத்தொகையில் 10 சத வீதமாக இருக்கும் ஏழைகள் எவ்வித மூலதனத்தையும் கொண்டிருக்கவில்லை. சனத்தொகையின் எழுபது சத வீதமான மத்திய வகுப்பினர் அமெரிக்க வர்த்தகத்தின் நிதிவழங்கலில் அரைவாசியை நேரடியாக அல்லது தமது முகவர்களின் மூலம் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர். மிகுதி 15 சத வீதம் அமெரிக்கர் அல்லாத பொதுவாக ஐரோப்பிய நிறுவன முதலீட்டாளர்களிற்குச் சொந்தமாக உள்ளது.

## பென்ஷன் மற்றும் பிணைப்புறுதி நிதி

இத்தகைய அபிவிருத்திக்கும் அதன் வேகத்துக்கும் உதாரணமாக விளங்குவது அமெரிக்கக் கல்லூரி ஆசிரியர்களின் பென்ஷன் நிதியாகும். இந்நிதியானது Teachers Insurance and Annuity Association எனப்படுகிறது. இந்நிதி நிறுவனம் மூன்று லட்சம் ஆசிரியர்களின் ஓய்வூதிய நிதியை முகாமை செய்கிறது. இவ்வாசிரியர்கள் தனியார் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் உள்ளூராட்சிக் கல்வி நிறுவனங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்தோராவர். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்நிறுவனமானது 2.5 பில்லியன் டொலர்களை அங்கத்துவப் பணமாக வசூலித்துள்ளது. இந்நிதி பல்வேறு முதலீடுகளில் இடப்பட்டுள்ளது. 1952 இல் இந்நிதி நிறுவனமானது இன்னும் ஒரு துணை நிறுவனத்தை உருவாக்கியது. இது கல்லூரி இளைப்பாற்று ஒப்புரவு நிதி (College retirement Equity fund) எனப்படும். இந்நிதியம் அதன் அங்கத்தவர்களான கல்லூரி ஆசிரியர்களுக்குப் பங்குகளை வழங்கியது. இன்று இந்நிதியம் 1 பில்லியன் டொலருக்கு மேலான தொகையை முகாமை செய்கிறது. எனினும் கூட இது ஒரு நடுத்தர அளவு கொண்ட நிறுவனமேயாகும். அத்துடன் பென்ஷன் நிதியத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் இந்த மேலதிக நிதியத்தின் மூலமாகப் பொதுப்பங்கு முதலீட்டாளர்களாகவும் மாறினர்.

இங்கு விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனின் இது ஒரு வெறுமனே எண்ணிக்கையளவிலான உடைமையின் விரிவாக்கமல்ல. இது உண்மையில் உடைமையாளர்களின் நடத்தையில் ஏற்பட்ட பண்புரீதியான மாற்றமாகும். அவர்கள் சாதாரணமான முதலாளித்துவ வாதிகளல்லர்; மாற்றாக அவர்கள் "முதலீட்டாளர்கள்". அவர்களின் பொருளாதார அடிப்படை அவர்களது முதலீடு அல்ல; அவர்களது தொழிலும் அதிலிருந்து கிடைக்கும் வருமானமுமேயாகும். அவர்களது முதலீடு மேலதிகமானது. அவர்கள் இந்த முதலீட்டில் தங்கி இருக்காத காரணத்தினால் அவர்கள் தமது பணத்தைப் பொறுத்தவரையில் ஆபத்தை எதிர்நோக்கலாம். இவர்கள் "எதிர்பார்க்கும்" பொருளாதார நடத்தை கொண்டவர்களாக இருக்கின்றனர். அதாவது தமது முதலீட்டிலிருந்து மூலதன இலாபத்தை எதிர்பார்க்கின்றார்களே தவிர வருமானத்தையும் பாதுகாப்பையும் அல்ல. ஏனெனில் பணவீக்கம், வருமானவரி அதிகரிப்புக்குக் காரணமான முதலீட்டிலிருந்து கிடைக்கும் மேலதிக வருமானம் அவர்களைப் பொறுத்தவரையில் அர்த்தமற்றதாகும்.

## தொழில்களுக்கான பாரிய சந்தை

நீண்டகால நோக்கில் மிகவும் முக்கியமானது என்னவெனில் படித்தவர்களின் தொழில்களுக்கு இன்று தோற்றம் பெற்றுவரும் "பாரிய சந்தை" (mass market) ஆகும். இதனைப் பலர் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. 40 வருடங்களின் முன்னர் பெரும் மந்தநிலை (Great Depression) ஏற்பட்டபோது ஒருவர் தமது அறிவைப் பயன்படுத்துவதன் மூலம் வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய தொழில்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. கற்பித்தல், மருத்துவம், சட்டம் முதலிய இந்த ஒரு சில தொழில்களுடன் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் பொறியியலும் இணைக்கப்பட்டது. 1920களில் யேல் பல்கலைக்கழகப்பட்டதாரிகள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்காகவன்றி அவர்களின் உயர்மட்டத் தொடர்புகளுக்காவே வோல் ஸ்ரீட் நிறுவனங்களில் அவர்களுக்கு தொழில் வழங்கப்பட்டது.

ஆனால் 1920க்குப் பின்னர் அறிவுத் தொழிலாளரின் வழங்கல் 20 மடங்கு அதிகரித்துவிட்டது. அவர்களுக்கான தொழில்களின் வழங்கல் இன்னும் வேகமாக அதிகரித்துள்ளது. கடந்த பத்தாண்டுகள் இத்தகைய வாய்ப்புகள் எல்லையற்றுப் பெருகியுள்ளன. இன்றைய கல்லூரிகளில் நிலவும் மாணவரின் அமைதியின்மைக்கு இதுவும் ஒரு காரணமாகும். இது எவ்வாறெனில் கற்றோருக்கான தெரிவுகள் அளவிட முடியாத அளவுக்குப் பெருகியுள்ளதால் மாணவர்கள் தமது தெரிவுகளில் ஒரு நெருக்கடி நிலையை அடைந்துள்ளனர். உண்மையில் அவர்களாற் தீர்மானிக்க முடியவில்லை. ஏனெனில் தெரிவுகள் இருக்குமளவுக்கு அவைகளைப் பற்றிய தகவல்கள் இல்லை.

தொழில்களைப் பற்றிய உண்மையான தெரிவு இன்று தோற்றம் பெற்றிருந்தாலும் "தொழில் சந்தை" (Job market) பற்றிய ஒரு பொருளாதாரக் கோட்பாடு இதுவரை உருவாகவில்லை. மிக அண்மைக்காலம் வரை அமெரிக்காவில் தொழில் தெரிவு இருக்கவில்லை. அபிவிருத்தி குறைந்த நாடுகளில் இன்றும் கூட இது இல்லை. தொழில்கள் நிறையவே இருந்தபோதும் அதற்கான ஒரு நபரின் தெரிவு அவரது குடும்பத்தின் பொருளாதார நிலை, தந்தையின் தொழில் ஆகியவற்றாலேயே தீர்மானிக்கப்பட்டது. ஒரு சிலராலேயே இது உடைக்கப்பட்டது. இது அமெரிக்க சமூகத்தில் ஓரளவு சாத்தியமானாலும் கூட அதுவும் கூட ஓரளவுதான் இடம்பெற்றது.

இன்று கல்வியில் எவ்வளவு தூரம் சமத்துவமற்ற நிலை நிலவியபோதிலும் இளைஞர்களில் பெரும்பாலோருக்கு கல்லூரிகளுக்கு செல்லும் வாய்ப்பு உள்ளது. அதாவது அதன் மூலம் தொழில் தெரிவுக்கான வாய்ப்பும் உள்ளது. இதுவும் கூட ஓர் அளவு சார்பாக அன்றிப் பண்பு சார்பாக ஏற்பட்ட மாற்றமேயாகும். அதாவது ஏதாவதொரு தொழிலைத் தேடுதல் என்பதிலிருந்து ஒரு தொழிலை எதிர்பார்த்திருத்தல் என்னும் மாற்றம் ஏற்பட்டது. இன்று தொழில்கள் நபர்களைத் தேடுகின்றன. எனவே தொழில்கள் நபர்களின் விழுமியங்கள், எதிர்பார்ப்புகள், அபிலாசைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்யவேண்டும். இத்தகைய தன்மை இல்லாதுவிட்டால் உண்மையில் பன்முகப்படுத்தல் இணைப்பும் பொறுப்பேற்றல் இணைப்பும் ஏற்பட்டிருக்கமாட்டாது. இதன் முழுத்தாக்கத்தையும் விளங்கிக் கொள்ள நாம் யப்பானிய அநுபவத்தை அறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யப்பானிய அனுபவம்

யப்பானில் ஒரு தொழில் என்பது உயர் தொழில் செய்வோரைப் பொறுத்தமட்டில் வாழ்க்கை நீடித்த தொழிலே (Life time employment) ஆகும். அதாவது ஒரு வர்த்தக நிறுவனத்தில் அல்லது அரசாங்க நிறுவனத்தில் அல்லது கல்லூரிகளில் தொழிலைப் பெறும் ஒருவர் தனது வாழ்நாள் முழுவதும் அதிலேயே கழிக்கிறார். ஒருவர் இதனையிட்டு விலகிச் செல்ல இரு காரணங்கள் மட்டுமே இருந்தன. ஒன்று அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும் தந்தையின் தொழிலைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை. மற்றது தண்டனைக்குரிய குற்றம் சுமத்தப்பட்டிருத்தல். இன்றும் கூட இந்தச் சட்ட திட்டங்கள் உள்ளன. ஆனால் படித்த யப்பானிய இளைஞர்கள் இவற்றைப் பின்பற்றுவதில்லை. தமது தகுதிக்கும் திறனுக்கும் ஏற்ற பதவிகளை அவர்கள் தேடிச் சென்று விடுகின்றனர். சேவை முதிர்ச்சியின் மூலம் பெறும் பதவி உயர்வுகளுக்காக அவர்கள் காத்திருப்பதில்லை.

இதனை முதன் முதலாக விளங்கிக் கொண்ட நிறுவனம் "சொனி" (Sony) ஆகும். அவர்கள் யப்பானிய மரபுரிமைகளையும் இளைய தலைமுறையினரின் விழுமியங்களையும் சிறப்பாக ஒன்றிணைத்து 'வாழ்க்கை நீடித்த வேலைவாய்ப்பை' வழங்கிய அதே நேரத்தில் வேலை வழங்குவதில் ஒரு திறந்த கொள்கையையும் உருவாக்கினர். இதன் மூலம் புதிதாக ஒரு நிறுவனத்தில் நுழையும் ஒருவருக்கு இருக்கக் கூடிய எதிர்ப்பையும் தொடர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பவர்க்கு வரக் கூடிய சலிப்பையும் நீக்கியது. அதுவே அந் நிறுவனத்தின் வெற்றிக்குக் காரணம். இது மேற்குலகம் ஒரு பாடமாகக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

## பல்தேசியக் கம்பெனிகளுக்கு உதாரணங்கள்

அமெரிக்காவில் பல்தேசியக் கூட்டுத்தாபனமும் கடல்கடந்த முதலீட்டு நிதியமும் (Trust) அமெரிக்காவுக்கு மட்டுமன்றி சகல அபிவிருத்தியடைந்த நாடுகளையும் தழுவி நிற்கின்றன. அமெரிக்காவில் அமைந்துள்ள பல்தேசியக் கூட்டுத்தாபனமானது ஐரோப்பிய வியாபாரங்களை வாங்குவதற்கு ஐரோப்பிய முதலீட்டைப் பயன்படுத்துகிறது. அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகிறது. ஐரோப்பிய முதலீட்டாளருக்கு மூலதன இலாபத்தையும், முதலீட்டுக்கான சந்தை வாய்ப்புகளையும் வழங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பல அம்சங்கள் இருந்த போதும் இவற்றில் மிகவும் முக்கியமானது உலகளாவிய "தொழில்" சந்தைகளை அது பயன்படுத்தியமையே. ஐரோப்பாவில் மரபுரீதியான வியாபாரம், முகாமைத்துவத் தொழில்களை இரண்டாந்தரமாகக் கருதியபோது இக் கூட்டுத்தாபனம் உயர்ந்த கல்வித்தரம் கொண்ட நபர்களுக்குக் கூடிய தெரிவுகளை வழங்க முன்வந்தது. இவற்றின் வெற்றியில் இது மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. பல நாடுகளில் பல் தேசிய கூட்டுத்தாபனங்கள் கைத்தொழில் முதன்மையை இலகுவிற் பெற்றன. இதற்குக் காரணம் பல வியாபார முயற்சிகளை அவை அடித்தளத்திலிருந்து கட்டியெழுப்பின. திறமையுள்ள இளைஞர்களை ஒரு நிறுவனம் கவர்ந்திழுத்து, அவர்களைத் தக்கவைத்து உற்பத்தித் திறன் கொண்டவர்களாக மாற்றிப் பயன்படுத்திய சாதனை இன்று தொழில்நுட்ப, நிதிசார் சாதனை எனக் கருத முற்படுவதில்லை. மாறாக அது ஒரு முகாமைத்துவ சாதனையாகவே கருதப்படுகிறது.

## 1970 களின் நிலைமைகள்

1970களில் மூலதன, தொழில்சார் சந்தைகள் மீள்பொருத்தப்பாட்டுச் செயன்முறையில் உள்ளன என்பது தெளிவாகியது. ஒரு சரிவடைந்து செல்லும் பங்குச் சந்தையில் எந்தவொரு வியாபாரமும் உயர்ந்தளவு வளர்ச்சி பெறமுடியாது என்பதும் அத்துடன் எவ்வளவு வேகமாக வளர்ச்சியடைகின்றனவோ அதே அளவு அவை வீழ்ச்சியும் அடையும் என்பதை "வளர்ச்சி" முதலீட்டாளர்கள் விளங்கிக் கொண்டனர்.

எனினும் 1960களில் நிதிசார் சந்தைகளில் காணப்பட்ட போக்குகள் சிலமாற்றங்களுடன் தொடரும் வாய்ப்புகளே இருந்தன. இச் சந்தைகளில் செல்வாக்குச் செலுத்தப் போகிறவர்கள் "முதலீட்டாளர்களே" அன்றி "முதலாளித்துவவாதிகள்" அல்லர். அதாவது வருமானத்தை விட "சொத்து வளர்ச்சியில்" (Asset growth) நாட்டம் கொண்டவர்களே இதில் முதன்மை பெறுவர். அத்துடன் இங்கு போட்டியும் பெருகும். ஏனெனில் வாங்குபவர்கள் விடயமறிந்தவர்களாக இருப்பர். எனவே பணம் தேவைப்படும் கம்பெனிகள் தம்மைச் சந்தைப்படுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அடுத்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் நிதிசார் சாதனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் குறைந்து விடும் எனக் கூறுவதற்கில்லை. உறுதியான டொலரும், பணவீக்கக் கட்டுப்பாடும் பொறுப்பாளர்களின் தேவையைக் குறைக்கக் கூடும். இப்புதிய சந்தைகள் பொதுக் கொள்கையில் புதிய பிரச்சினைகளை உருவாக்கக் கூடும். மூன்று பிரச்சினைகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால் அவற்றில் ஒன்றிற்கும் இதுவரை தீர்வுகள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைமையும் கட்டுப்பாடும்

இப்பிரச்சினைகளில் முதலாவதும் வித்தியாசமானதுமான பிரச்சினை புதிய நிதி வலுவாண்மையாளர்களின் பங்கும் அவர்களின் பொறுப்புடையுமாகும். இன்றைய "உடைமையாளர்கள்" உண்மையில் பாரிய நிதி நுகர்வோரின் பொறுப்பாளர்களேயாவர். அமெரிக்காவின் (ஐரோப்பா உட்பட) வியாபாரங்களின் பெரும்பான்மையான உடைமையானது இனி உடைமை யாளர்களினாலோ அல்லது முகாமையாளர்களினாலோ கட்டுப்படுத்தப் படப் போவதில்லை. மாறாக நம்பிக்கைப் பொறுப்பாளர்களே இவற்றைக் கட்டுப்படுத்துவர். அவர்களுடைய பங்கு யாது? அவர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக உள்ள காரணத்தினால் அவர்கள் முதலீடு செய்யும் கம்பெனிகளின் முகாமைத்துவத்தில் தலையீடு செய்ய முடியாது. இவர்களுக்கு முகாமைத்துவம் மீது அதிருப்தி ஏற்பட்டால் தமது பங்குகளை விற்க முடியும். ஆனால் அவர்கள் முகாமைத்துவத்தைக் கட்டுப்படுத்த முயலக் கூடாது. இவர்களால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் யார்? முகாமைத்துவமானது கட்டுப்படுத்தக் கூடியது அல்லது கட்டுப்படுத்த முடியாததாக இருக்கலாம். அல்லது இச் செயற்பாடு "பொறுப்பேற்ற" தொழின் முயற்சியாளரின் பொறுப்பாகும். இந்தத் தீர்வுகள் ஏற்க முடியாதவை. ஆனால் வேறு ஏதேனும் தீர்வு இருப்பதாகவும் தெரியவில்லை.

## பல் தேசியக் கூட்டுத்தாபனம்

பல்தேசிய வர்த்தகம் தொடர்பான பிரச்சினை இரண்டாவது முக்கியமான பிரச்சினையாகும். இன்றிலிருந்து சுமார் 20 வருடங்களின் பின்னர் கம்யூனிஸ்ட் அல்லாத வளர்ச்சியடைந்த நாடுகளில் மொத்த உற்பத்தி வெளியீட்டில் ஐந்திலொரு பகுதி "பல் தேசியக் கம்பனிகளாலேயே உற்பத்தி செய்யப்படும் என எதிர்வு கூறுவது மிகையாகாது. பத்து அபிவிருத்தியடைந்த நாடுகளில் இது ஏற்கெனவே உண்மையாகியுள்ளது. (ஐ.அமெரிக்கா, ஐ. இராச்சியம், கனடா, ஜேர்மனி, இத்தாலி, ஒல்லாந்து, பெல்ஜியம், சுவிற்சலாந்து, நோர்வே, சுவீடன். யப்பானில் உண்மையாகிக் கொண்டு வருகிறது. பிரான்ஸிலும், பிரேசிலிலும் இது சீக்கிரமே உண்மையாகி விடும்.

இதனுடைய பொருள் என்னவெனில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொருளாதாரமானது தேசிய அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு அப்பால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதாகும். அதே நேரத்தில் அரசாங்கத்தின் தீர்மானங்கள் தத்தமது நாடுகளில் தலைமைஅலுவலகங்களைக் கொண்டுள்ள பல்தேசியக் கம்பெனிகளின் இயக்கங்களையும் பாதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் உண்மையாகும். இங்குள்ள முக்கிய பிரச்சினை என்னவெனில் பல அரசாங்கங்கள் "தமது" பல்தேசியக் கம்பனிகளைத் தமது உலகப் பொருளாதாரக் கொள்கைகளின் கருவிகளாகக் கருதும் அதே நேரத்தில் தமது நாட்டிலுள்ள "அந்நிய" பல்தேசிய கம்பெனிகள் தமது கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தினால் அவற்றை வெறுக்கின்றன என்பதாகும்.

இது முதலாளித்துவத்தின் பிரச்சினை என்று கூறுவதற்கில்லை. சோவியத் கூட்டிலும் கூட பொருளாதார உறவுகள் தொடர்பாக இதே வகையான முரண்பட்ட நிலைமை இல்லாமலில்லை. ரஷ்யர்கள் கிழக்கு ஐரோப்பா முழுவதும் பல் தேசியக் கம்பனிகளைக் கட்டியெழுப்ப முயன்ற போது அரசியற் காரணங்களுக்காக அம் முயற்சி எதிர்க்கப்பட்டது. அக் கம்பனிகள் போலந்து, செக், கிழக்கு ஜேர்மனி முதலிய நாடுகளின் பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியை அவ்வவ் அரசாங்கங்களிடமிருந்து அகற்றின. பல் தேசியக் கம்பெனிகள், "முதலாளித்துவமோ" கம்யூனிஸ்டோ என நோக்காது அவை அரசியல் இறைமையை விட பொருளியல் பகுத்தறிவுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன.

இன்று பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் தான் எமது மிகக் கூடிய பயனுறுதி வாய்ந்த பொருளாதாரக் கருவியாகும். அதுமட்டுமல்லாமல் பொருளாதார அபிவிருத்தியில் இதுவே அபிவிருத்தியடைந்துவரும் ஓர் அம்சமுமாகும். தேசியவாதம் தலைவிரித்தாடும் உலகில் இது ஒன்றுதான் தேசியவாதம் அற்ற நிறுவனமாக விளங்குகின்றது. பொருளாதாரத் தீர்மானங்களைத் தேசிய அரசுகளின் தலையீடுகளிலிருந்து பாதுகாக்கவும் அதனால் முடியும். தேசியவாதத்தின் நச்சுப் பற்களைப் பிடுங்குவதற்கு இதுதான் ஒரேவழி. ஆனால் தேசிய அரசாங்கங்கள் இதனைப் புரிந்து கொள்வதில்லை. எதிர்காலத்திற் பொருளாதார அறிவுபூர்வத்தன்மைக்கும் அரசியல் இறைமைக்கும் இடையிலுள்ள நெருக்கடியினை நாம் எவ்வாறு இசைவுபடுத்தப் போகிறோம் என்பது பொருளாதாரத்திலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

## மையப்படுத்தலும் போட்டியும்

மிகவும் கஷ்டமான மூன்றாவது பிரச்சினை மையப்படுத்தலும் போட்டியுமாகும். முன்னர் குறிப்பிட்ட மற்றொரு பிரச்சினைக்கும் நாம் தீர்வுகளைத் தேட வேண்டும். இப்பிரச்சினையில் நாம் ஏற்கனவே கற்றவற்றை மறக்க வேண்டும். இது மிகவும் கஷ்டமானது. ஏனெனில் ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்ட பழையவைகள் பெருந்தொகையான பொருளியலாளர்கள், அரசியல்வாதிகள், சட்ட அறிஞர்கள், வர்த்தகர்களாற் புனிதமானவைகளாகக் கருதிப் போற்றிப் பின்பற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு எண்ணக்கருக்கள் கடந்த பல ஆண்டுகளாக மையப்படுத்தல் மற்றும் போட்டிகள் பற்றிய பிரச்சினைகள் தொடர்பான எமது அணுகு முறைகளை வழிப்படுத்தியுள்ளன. (1) 'தயாரிப்பு உடைமையினை மையப்படுத்தல்', (2) 'சந்தை வலுவை மையப்படுத்தல்'. பொருளாதார மையப்படுத்தலின் இவ்விரண்டு அம்சங்களுக்கும் உருவாக்கப்பட்ட அளவீடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவை எமது பொருளாதாரத்தின் அமைப்புப் பற்றிய 'எக்ஸ்ரே' படமாகவும் பிரச்சினைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்வதற்கான வழிகாட்டியாகவும் கருதப்படுகின்றன. ஆனால் முதலாவது அளவீடு இன்று நம்பத்தக்கதல்ல; இரண்டாவது தவறாக எம்மை வழிநடத்துகிறது.

"உற்பத்தி உடமைகளை மையப்படுத்தல்" (Concentration of manufacturing assets) என்பது நீண்ட காலமாக நிலைத்திருந்தது. ஆனால் கடந்த 20 ஆண்டுகளில் இது பெரிதாக முன்னோக்கிப் பாய்ந்து விட்டது எனக் கருதப்படுகிறது. 1950இல் 200 தயாரிப்புக் கம்பெனிகள் நாட்டின் தயாரிப்பு உடமைகளின் 40 வீதத்தைக் கட்டுப்படுத்தின. 1970இல் இது 60 வீதமாகியது. இது இந்நாட்டிலும் அல்லது வேறெந்த நாட்டிலும் பதிவு செய்யப்பட்ட மிகப் பெரிய பொருளாதார மையப்படுத்தலில் ஏற்பட்ட அதிகரிப்பாகும்.

இதில் விநோதமான அம்சம் என்னவெனில் மையப்படுத்தலில் ஏற்பட்ட அதிகரிப்பானது பண்டங்களுக்கான எந்தவொரு சந்தையிலும் பொருளாதார வலுவை ஏற்படுத்தவில்லை. இச்சந்தைகளிற் பெரும்பாலானவற்றில் கடந்த 20 ஆண்டுகளில் மையப்படுத்தலானது குறைந்துவிட்டது எனலாம். ஒவ்வொரு சந்தையிலும் புதிதாகத் தோன்றிய கம்பனிகள் பழைய கம்பனிகளுக்குச் சவால் விடுத்ததுடன் அவற்றின் பாரம்பரிய வர்த்தகத்தின் ஒரு பகுதியையும் பிடுங்கிக் கொண்டன.

தயாரிப்பு உடைமைகள் அமெரிக்க உற்பத்திப் பொருளாதாரத்தில் மையப்படுத்தலை இனிமேலும் வரையறை செய்யாது. 1950இல் இச் சொத்துக்கள் யாவுமே ஐக்கிய அமெரிக்காவினுள் காணப்பட்டன. ஆனால் இன்று பெரும்பாலான அமெரிக்கக் கம்பனிகள் பல்தேசியத் தன்மையைக் கொண்டுள்ளன. அவற்றின் சொத்துக்களிலும் உற்பத்தியிலும் 20-30 வீதம் வரை அமெரிக்காவுக்கு வெளியிலே காணப்படுகின்றன. உண்மையில் அமெரிக்கத் தயாரிப்பில் சுமார் 40 வீதமானவை மட்டுமே அமெரிக்காவில் மையப்படுத்தப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் 1950இல் தயாரிப்புக் கம்பனிகள் எனப்பட்டவை உண்மையிலேயே உற்பத்தி செய்து கொண்டிருந்தன. ஆனால் இன்று பன்முகப்படுத்தல் மற்றும் "பொறுப்பேற்கும்" இணைப்புகள் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்புக் கம்பனிகள் எனப்படும் கம்பனிகளில் பெரும்பாலானவை தமது சொத்துக்களின் பெரும்பகுதியை வேறு வியாபாரங்களிலும் நிதித்துறையிலும் கொண்டிருக்கின்றன. வேறு வார்த்தையில் கூறிவதானால் இந்நாட்டில் உள்ள 200 பெரிய கம்பனிகளில் இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட இன்று குறைந்த பங்கினையே தயாரிப்புக் கைத்தொழில்கள் கொண்டுள்ளன. ஆனால் அமெரிக்கத் தயாரிப்பு உடைமைகளும், சந்தையும் இணைப்புகளும் பல்தேசிய விரிவாக்கமும் பாரிய மையப்படுத்தலைக் கொண்டிருக்கவில்லை. எனினும் அவை யாவும் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு மையப்படுத்தியுள்ளன. அவைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல பாரிய வியாபாரங்களை நடத்தினாலும் அவை யாவும் ஒரேயொரு சட்டபூர்வ நிறுவனமாக இணைக்கப்பட்டு ஓர் உயர் முகாமைத்திவத்தினால் நெறிப்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாகப் போட்டி அதிகரித்துள்ளது. பொருட்கள் சேவைகள் பொருள் தரத்திலும் கூட இவ் அதிகரித்த போட்டியைக் காணலாம். அதிகரித்த போட்டியென்பது உண்மையில் மையப்படுத்தலில் இருந்து விலகிச் செல்வதாகும். இது மூலதனம் மற்றும் முதலீட்டுப் பொருளாதாரத்திற்கும் வேலைகள் மற்றும் தொழிற் பொருளாதாரத்தற்கும் ஏற்புடையதாகும்.

## யதார்த்தத்துக்குப் பொருத்தமான கோட்பாடு

இவ்வாறான கூட்டுகள் மற்றும் பல் தேசியத் தன்மை வாய்ந்த செயற்பாடுகள் ஆகியவற்றை நோக்கிய அழுத்தங்கள் அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை. தொழில் முறையியல் இத்திசையை நோக்கியே இக்கைத்தொழில்களை உந்துகிறது. மையப்படுத்தலை நோக்கி வியாபாரங்களை நகர்த்தும். இன்னும் ஒரு சக்தி சூழல் தொடர்பானது. காற்று, நீர், வெளியிடங்கள், நகரங்கள் தொடர்பான சூழலைச் சுத்திகரித்தல் என்பது ஒவ்வொரு பிரதேசத்திலும் பாரிய முறைமை சார்ந்த முயற்சிகளை வேண்டி நிற்கிறது. அதாவது திறன்கள், தொழில் நுட்பம், சந்தைகள் தொடர்பான பிரதான பொருளாதார வளங்களை ஒன்று சேர்க்கக் கூடிய நிறுவனங்கள் வேண்டப்படுகின்றன. அதைவிட மூலதனம், தொழில்கள் ஆகியவற்றுக்கான புதிய பாரிய சந்தையின் அழுத்தங்கள் தொடர்ந்து புதிய வழிகளில் மையப்படுத்தலை நோக்கித் தள்ளுகின்றன. கைத்தொழிற் பன்முகப்படுத்தல், புவியியல் பன்முகப்படுத்தல் என்பவை இப்புதிய வழிகளாகும்.

எனவே எவ்வகையான "பன்முகப்படுத்தல்" விரும்பத்தக்கது எனச் சிந்திக்க வேண்டும். எத்தகைய பன்முகப்படுத்தல்கள் உற்பத்தித் திறன்மிக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் எவை வெறுமனே ஆதிபத்தியங்களைக் கட்டி எழுப்புகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். எவை பொருளாதாரத்தைத் திறந்த தன்மையும் நெகிழ்ச்சியும் போட்டியும் உள்ளவைகளாக்குகின்றன. எவை தனியுரிமையை உருவாக்குகிறது எனவும் சிந்திக்க வேண்டும்.

எமக்கு எது தேவை என்பது தெளிவாகத் தெரிகிறது. எமக்குத் தேவையானது பன்முகப்படுத்தலே தவிர பரம்பல் அல்ல. எமக்குத் தேவையானது கூட்டாட்சியே (சமஷ்டி) தவிர மத்திய மயப்படுத்தப்பட்ட எதேச்சாதிகாரமல்ல. எமக்குத் தேவையானது "உடைமைகளின் முகாமைத்துவமே" தவிர நிதி சார்ந்த சூழ்ச்சிகள் அல்ல. அதேநேரத்தில் எமக்குப் பொருளாதாரத்தின் ஒரு பரிமாணத்தை மையப்படுத்தவும் அதே நேரத்தில் இன்னொன்றுடன் போட்டியிடச்செய்து சமநிலைப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்திகள் ஒரு நிறுவனக் கட்டமைப்பில் மாற்றம் என்பதைவிட விரிவானதாகும். அவைகள் பொருளாதார யதார்த்தத்தின் அடிப்படையையே மாற்றியமைத்துள்ளன. இதற்கு ஏதுவாகப் புதிய சிந்தனை தேவைப்படுகிறது. அத்துடன் "தனிஉரிமை", "மையப்படுத்தல்", "போட்டி" ஆகியவை தொடர்பான மரபு சார்ந்த எண்ணக்கருக்கள், கருத்துக்கள், கொள்கைகள் போன்ற வற்றை மாற்றியமைக்க வேண்டியும் உள்ளது. உலகப் பொருளா தாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்தும் புதிய சிந்தனை அவசியமாகின்றது. புதிய கோட்பாட்டு ரீதியான விளக்கம் மற்றும் புதிய கொள்கை, எண்ணக்கருக்கள் போன்றவற்றின் அபிவிருத்தியும் வேண்டப்படுகிறது. பொருளாதாரத்தின் மூன்று பரிமாணங்களையும் ஒன்றிணைத்து அதன் மூலம் புதிய மூலதனம் மற்றும் தொழில்கள் சார்ந்த புதிய "பாரிய சந்தையையும்" பொருட்கள், சேவைகள், விலைகள் மற்றும் உற்பத்தித்திறன் பற்றிய பழைய பாரிய சந்தையையும் ஒன்றிணைக்கக் கூடிய ஒரு பொருளாதாரக் கோட்பாடு இதுவரை தோன்றவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

# தலைசிறந்த பொருளியலாளர்களின் கருத்துக்கள்

## ஜோர்ஜ் சவுல்

## 1. பொருளாதாரம் என்றால் என்ன?

பொருளாதாரக் கோட்பாடுகள் தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் மனித வாழ்வில் பொருளாதாரச் செய்முறைகள் தோன்றிவிட்டன. இத்தகைய செய்முறைகளைக் கண்டறிந்தவர் யார் என்பது தெரியாது. அவைகள் நன்கு சிந்திக்கப்பட்டு உருவாக்கப்படவும் இல்லை. எப்படியோ நடைமுறைசார்ந்த தேவைகளுக்கு முகம் கொடுப்பதற்காக இத்தகைய பொருளாதாரச் செய்முறைகள் தோன்றின. சூழ்நிலைகளுக்கேற்ற முறையில் இவைகள் பல்வேறு விதமாக முயற்சி செய்யப்பட்டுத், தேவையான மாற்றங்களைப் பெற்று வந்ததுடன் தொடர்ந்தும் கைக்கொள்ளப்பட்டன அல்லது நிராகரிக்கப்பட்டன.

பணம், விலைகள், சந்தைகள், வட்டி, கூலி, முதலீடு, வரிகள் மற்றும் எமக்குத் தெரிந்த பொருளாதாரப் பதங்கள் யாவும் உண்மையில் பல்வேறு மனித சமூகங்களில் காணப்படும் நடத்தைகள் அல்லது நிறுவனங்களின் பெயர்களேயாகும். ஆடைகள், கருவிகள், ஆயுதங்கள், கலை, கல்வி, திருமணம், அரசாங்கம், மதம் போன்றவை யாவும் மனிதனது நீண்டகால அநுபவங்களின் பெறுபேறுகளே. இவற்றைப் பொருளாதாரத்தின் பகுதிகளாக நாம் சிந்திப்பதில்லை. அதைப்போல இவையும் கூட மனிதனது அநுபவத்தின் விளைவுகளாகவே காணப்படுகின்றன.

பொருளாதார நடத்தை என நாம் பொதுவாகக் கருதுவது மனிதனது உழைப்புடன் நெருக்கமாகத் தொடர்புபட்டிருக்கும் செயற்பாடுகளேயாகும். ஒரு குடும்பம், அல்லது ஒரு நாடு அல்லது நாடுகளின் குழு எவ்வாறு மனிதருக்குத் தேவைப்படும் உணவு, உடை, உறையுள், சேவைகள் மற்றும் ஏனையவற்றை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றன? பொருட் செல்வம் எவ்வாறு சேர்க்கப்படுகிறது அல்லது செலவழிக்கப்படுகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கேள்விகளுக்கான விடைகள் பல்வேறு விதமானவை. ஏனெனில் உலகில் வாழும் பல்வேறு மனிதக் குழுக்களின் பொருளாதார நடத்தைகளும் வெவ்வேறு விதமானவை. கடந்த பல நூற்றாண்டுகளில் மனிதர்களின் பொருளாதார நடத்தைகள் பெருமளவுக்கு மாறிவிட்டன. இதற்கு ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஏனைய கண்டங்களும் சான்று பகர்கின்றன.

## அரசு மற்றும் குடும்பங்களின் மூலமான வீட்டுப் பராமரிப்பு

பொருளியல் பற்றிய முறையான ஆய்வு நவீனகாலம் வரை ஏனைய துறைகளிலிருந்து தெளிவான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறுவதற்கில்லை. எனினும் பொருளியலைக் குறிக்கும் ஆங்கில வார்த்தை (Oikonomos) பண்டைய கிரேக்க மொழியிலிருந்தே உருவாகியது. இவ்வார்த்தையின் பொருள் வீட்டுரிமையாளர் (Household) என்பதாகும். குடும்பத்தவர் அல்லது வீட்டுரிமையாளர் என்பவர் போதிய உணவு, உடை முதலியன உள்ளனவா எனக் கவனிக்க வேண்டும். வீடு ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டிருக்கின்றதா எனவும், வீட்டிலுள்ளோர் தமக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்கிறார்களா எனவும் வீட்டுத் தலைவர் கவனிக்க வேண்டும்.

ஒரு குடும்பம் தானாக வளர்ச்சியடைவதில்லை. வீட்டுத் தலைவனின் திறனாலும் வீட்டு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பு மற்றும் திறமையாலுமே அக்குடும்பம் அபிவிருத்தியடைய முடியும். இவ்வாறாகப் பொருளியற் சிந்தனை என்பது ஆண்டாண்டு காலமாகத் தீர்ப்புகளைக் கொண்டுள்ளது. இத்தீர்ப்புகள் விடயங்களைச் செய்யும் நல்வழிகளாகவோ அல்லது மோசமான வழிகளாகவோ இருக்கலாம். வழிமுறைகளை அனுமதிப்பதாகவோ அல்லது நிராகரிப்பதாகவோ இருக்கலாம். ஒழுங்கு முறை அல்லது வினைத்திறன் பற்றியதாகவோ இருக்கலாம். ஆனால் அது ஒரு சமூகத்தின் (அது சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருக்கலாம்) நலன் கருதிச் செய்யும் சிறந்த முகாமைத்துவம் பற்றியதாக இருக்கிறது, அத்துடன் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் தெரிவுகள் பற்றியதாக இருக்கிறது. பொருளாதார அபிப்பிராயங்கள் என்பவை வேலைகளைச் செய்யும் வழிகள் மற்றும் உற்பத்திப் பிரிவுகள் பற்றிய ஒழுக்க நியதிகளுடன் எப்போதும் தொடர்பு கொண்டிருந்துள்ளன.

பொருளாதார எண்ணங்கள் பற்றிய புராதனகாலப் பதிவுகளானது சமயப் போதனைகள், சட்டங்கள், ஒழுக்க நியதிகள் ஆகியவற்றிற் பின்னிப் பிணைந்துள்ளன. பபிலோனிய மன்னனான ஹமுராபியின் ஒழுக்கக் கோவைகளிற் பொருளாதார நடைமுறைகள் இருந்ததாகத் தொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். புராதன யூதர்களின் தேசத்தில் பேராசை, சுரண்டல், லோகாயத செல்வத்துக்கும் கூடிய அழுத்தம் கொடுத்தல் போன்றவற்றுக்கு எதிரான சட்டங்கள் இருந்ததாகப் புனித பைபில் நூல் கூறுகிறது. மனிதர்களின் பொருளாதாரத் தொடர்புகளில் நீதியும், கருணையும் முன்னுரிமைப் படுத்தப்பட்டிருந்தன. பழங் குடியினரான யூதர்கள் ஓர் உயரிய வாணிக சமூகமாக வளர்ச்சியடைந்த போது விரிசல்களும் ஊழல்களும் ஏற்பட்டன என்பதைத் தீர்க்கதரிசிகளின் கூற்றுக்கள் விளக்குகின்றன.

கிரேக்க சமுதாயமும் யூதர்களைப் போலவே ஒரு பரிணாமத்துக்கு உள்ளானது. ஆரம்பத்தில் குழுக்களாகச் செயற்பட்ட கிரேக்க சமுதாயம் பெருமளவுக்குத் தன்னிறைவான குடும்பங்களைக் கொண்டிருந்தது. அரசர்களும், மதகுருமார்களும் ஆட்சி செய்தனர். படிப்படியாக விவசாயிகளும் உழைப்பாளர்களும் மண்ணோடு கொண்டிருந்த தொடர்பு குறைந்து நிலம் படைத்த பிரபுக்கள் தோன்றினர். போர்களின் காரணமாகத் தோன்றிய அடிமைகள் உடலுழைப்பைத் தரும் ஒரு வகுப்பினராக மாறினர். கடற் பயணங்களும், வர்த்தகமும் செல்வந்த வர்த்தகர்களைத் தோற்றுவித்தன. அவர்கள் அரசுரிமையை மரபுரீதியாகக் கொண்டிருந்த நிலப்பிரபுக்களுடன் முரண்பட்டனர். மாறுகின்ற சமுதாயத்தில் தோன்றிய நெருக்குதல்கள் காரணமாகச் சட்ட நிபுணர்களும், அரசியல்வாதிகளும், மெய்யியலாளர்களும் பொருளாதார உறவுகளையும் ஏனைய நடத்தைகளையும் அரசின் கூட்டமைப்பையும் ஒழுங்குபடுத்துவதற்காகக் கோட்பாடுகளை உருவாக்க முயன்றனர்.

ஏதென்ஸின் கலாசாரத்தின் உச்சக்கட்டமான கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ "ஓர் அரசின் அடிப்படை என்பது உற்பத்தி" எனக் குறிப்பிட்டார். எவரும் தன்னிறைவு கொண்டவர்களல்லர், ஆனால் எமது தேவைகள் பலவாகும். எனவே ஒரு மனிதன் தனக்கு இயல்பான ஒன்றைத் தெரிவு செய்து சரியான நேரத்தில் உற்பத்தியில் ஈடுபடுவானேயாகில் பண்டங்கள் இலகுவாகவும் மிகையாகவும் உற்பத்தி செய்யப்படும். சிறப்புத் தேர்ச்சி பற்றிய இக் கோட்பாடுதான் பின்னர் அடம் ஸ்மித்தினால் விருத்தி செய்யப்பட்டது.

பிளேட்டோவுக்குப் பின்னர் வாழ்ந்த அரிஸ்டோட்டில் ஒரு சிறந்த அவதானியாக இருந்தார். அவர் தனது பொருளாதாரக் கருத்துக்களை ஒரு குடும்பத்தின் சிறந்த முகாமைத்துவத்தின் அடிப்படையின் மீது கொண்டிருந்தார். வாழ்க்கையின் தேவைகளே உண்மையான செல்வத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் பயன்படுத்த முடியாத எதுவும் செல்வமாகி விடாது. அதே போல தேவைக்கு அதிகமாக இருப்பதுவும் செல்வமாகிவிடாது. (குடும்பங்களின் முகாமையாளர்கள் மற்றும் அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகளினால் இயல்பாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பேற்றலை) அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால் இலாபத்துக்காக நடத்தப்படும் வணிகத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பண்டங்களைப் பரிமாறிக் கொள்வதையும் அவர் ஏற்றுக் கொண்டார். 'இது மிகவும் இயல்பான முறையிலேயே ஏற்படுகிறது. ஏனெனில் சிலர் அதிகமாகக் கொண்டிருக்கும் ஒரு பண்டத்தைச் சிலர் மிகவும் அரிதாகக் கொண்டுள்ளனர்'. ஆனால் சில்லறை வியாபாரம் பணம் சம்பாதிக்கும் கலையின் ஒரு பகுதியல்ல. அப்படியிருந்திருப்பின் மனிதர்கள் தாம் மிகையாகக் கொண்டிருக்கும் போது பரிமாறிக் கொள்வதை நிறுத்தியிருப்பர்.

இந்த அடிப்படையில் அரிஸ்டோட்டில் பணத்தையும், பணத்தை வட்டிக்குக் கொடுப்பதையும் முழுமையாக எதிர்த்தார். பரிமாற்றத்தில் பணம் ஒரு முக்கியமான கருவி என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால் அது "இலாபத்தைச் சேகரித்து வைக்கவும் பணத்தை வட்டிக்குக் கொடுத்துச் செல்வத்தைப் பெருக்கவும் மனிதர்களைத் தூண்டும் போது அது உற்பத்தித் திறன் அற்றதாகிறது. அத்துடன் நிதி ஒழுங்கீனங்களுக்கும், நிதிசார் ஒழுங்கின்மைகளுக்கும் காரணமாகிறது" என அவர் கருதினார்.

ரோமர்களின் பொருளாதாரச் சிந்தனை பெருமளவுக்குக் கிரேக்கர்களின் சிந்தனையை ஒட்டியதாகவே அமைந்தது. ரோமர்களின் பொருளாதாரக் கருத்துக்கள். கிரேக்கர்களையும், யூதர்களையும் போலவே விவசாய இராணுவ சமுதாயத்தின் விழுமியங்களையே பிரதிபலித்தது. வணிகவாதம் உருவாக்கிய ஊழல்கள் மற்றும் செல்வத்தினால் ஏற்பட்ட பாகுபாடுகள் முதலியவற்றுக்கு எதிரான கருத்துக்களாக அவை இருந்தன. ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஐரோப்பாவில் மானியமுறை விருத்தியடைந்தது. ஏனைய பொருளாதார உறவுகளும் சமூக அமைப்புக்கு ஏற்ற வண்ணம் மாறுதல் அடைந்தன. நிலப்பிரபுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். விவசாயம் மிகவும் முக்கிய தொழிலாக வளர்ந்தது. நிலப் பிரபுக்களின் வேலையாட்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டனர். உற்பத்தி விநியோகத்தில் வாங்குதல், விற்பனையை விட மரபுரீதியான விதிகளே பின்பற்றப்பட்டன. பிரபுக்களும் கூட படிமுறையான அந்தஸ்த்தினைக் கொண்டிருந்தனர். மக்கள் வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு வகுப்பினருக்கும் விதிக்கப்பட்ட அந்தஸ்த்தும், உரிமைகளும், கடமைகளும் இருந்தன.

அன்றைய நிலையில் காணப்பட்ட பணப்புழக்கமும், சந்தைகளும் இன்று போல் இல்லை. எனினும் வர்த்தகர்களும், பணம் மாற்றுபவர்களும் சுதந்திரமான கைவினைஞர்களும் இருக்கவே செய்தனர். அவர்கள் தமக்கெனக் கழகங்களைக் (Guilds) கொண்டிருந்தனர். இக்கழகங்கள் திறன்களின் நியமங்கள், வாங்குதல் விற்றல் ஆகியவற்றின் விலைகள் ஆகியவற்றைத் தீர்மானித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் கிறிஸ்தவ மதம் ஐரோப்பா முழுதும் பரவி விட்டது. மத அதிகாரங்களைக் கொண்டிருந்தோர் ஒழுக்க நியதிகளைப் பரப்புவதற்கு முயன்றனர். இதன் காரணமாகப் பொருளாதார ஒழுக்கங்களும் உருவாகின. ஆனால் இவை தனித்துவமானவைகளாக இல்லாமல் ஒரு பொது ஒழுக்கக் கோவையில் உள்ளடக்கப்பட்டன. அக்கால கட்டத்திற் பொதுவாக சகல எழுத்தாளர்களும் அறிஞர்களும் கிறிஸ்தவ மத நடவடிக்கைகளுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களாக விளங்கினர். அவர்கள் அரிஸ்டோட்டிலை விஞ்ஞானத்திலும், ஒழுக்கவியல் உட்பட நாளாந்த வாழ்க்கை பற்றிய விடயங்களில் ஒரு விற்பன்னராகக் கருதினர்.

அக்கால கட்டத்தின் சிந்தனைப் போக்குகளிற் தமது செல்வாக்கைப் பதித்தவரான தோமஸ் அக்கியுனாஸ் (St. Thomas Acquinas) நீதியைப் பற்றிய அரிஸ்டோட்டிலின் கருத்தினை ஏற்றிருந்தார் அதன்படி நீதி இரு வகைப்படும். (1) பங்கீட்டுக்குரிய நீதி (distributive justice) (2) இழப்பீட்டு நீதி (compensatory justice). முதலாவது வகையானது குடும்பம், பண்ணை அல்லது ஏதேனும் பொருளாதார அமைப்பின் உற்பத்திப் பொருட்களின் விநியோகம் பற்றியது. இரண்டாவது பண்டங்களையும், சேவைகளையும் பரிமாறிக் கொள்வது சம்பந்தமானது. முதலாவது நீதியில் வருமானம் மரபு சார்ந்ததாகவும் அதனைப் பெறுபவரின் சமூக அந்தஸ்துக்கு ஏற்புடைத்தாகவும் இருத்தல் வேண்டும். இதற்குப் பதிலாகப் பண்டங்கள், சேவைகளின் விலைகள் இருசாராருக்கும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். நியாயமான கூலியும், நியாயமான விலையும் மிகவும் பழமை வாய்ந்த பொருளாதார எண்ணப் பாங்குகளாகும்.

ஏனைய மத குருமார்களைப் போலவே தோமஸ் அக்யுனாஸ் அவர்களும் கடனாகப் பெற்ற பணத்துக்கு வட்டி வசூலிப்பதைக் கண்டித்தார். அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி பணம் ஒரு பண்டமாற்று ஊடகமே தவிர தானாக எதையும் உற்பத்தி செய்வதில்லை. இப் பொதுவான கோட்பாட்டுக்குத் தோமஸ் அக்யுனாஸ் சில விதிவிலக்குகளையும் செய்தார். கைமாறாமல் நீண்ட காலம் சேர்த்து வைக்கப்படும் வாடகை போன்ற பணத்துக்கு அவர் விதிவிலக்களித்தார்.

புராதன உலகத்தினதும் பின்வந்த மத்திய கால ஐரோப்பாவினதும் பதிவு செய்யப்பட்ட பொருளாதாரக் கருத்துக்கள் இன்றைய நவீன பொருளாதாரச் சிந்தனைகளிற் திரும்பத் திரும்பத் தாக்கம் விளைவித்துள்ளன. அத்தகைய சில கருத்துக்கள் பின்வருமாறு :

* வாழ்க்கையின் அடித்தளமாக விவசாயத்தை முதன்மைப்படுத்தல்.
* பொருளாதார நடைமுறைகளானது குடும்பம், நகர அரசு, மானிய அமைப்பு, வர்த்தகர் அல்லது கைவினைஞர் குழு போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவதொரு சமூக அலகுடன் தொடர்புபட்டுள்ளது. இந்த அலகின் மீது முகாமைத்துவத்தைப் பிரயோகிக்க முடியும்.

* பொருளாதாரச் செயன்முறைகள் மீது புத்திபூர்வமான, அறிவார்ந்த முகாமைத்துவத்தை அவாவுதல்.
* ஓர் உற்பத்தியானது பயன்பாட்டில் இருக்கும் வரைக்கும் அதன் உற்பத்திக்கும் பரிமாற்றத்துக்கும் சட்டபூர்வ அந்தஸ்து உள்ளது.
* பணத்தாசை தான் சகல தீமைகளினதும் ஆணிவேர்' என்னும் பைபிள் வாசகம்.
* சிற்சில தொழில்கள் பொது வாழ்க்கையில் அல்லது அரசாங்கத்தில் இழிவானவை என்னும் உணர்வு. இவற்றில் ஓய்வில்லாத அல்லது கல்விக்கு வழிவகுக்காத உடலுழைப்பும், இலாபத்தைப் பெறுவதற்காகமட்டும் ஈடுபடும் தொழில்களும் அடங்கும்.

பண்டங்கள் சேவைகளது விநியோகம் நீதியான முறையில் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். இதனை அடைவதற்காகப் பண்டங்கள், சேவைகள் அவற்றைப் பெறுவதற்குத் தகுதியானவர்களுக்கே வழங்கப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக வழங்கியவருக்கு மரபுரீதியான 'நியாயமான' விலை வழங்கப்படல் வேண்டும். இத்தகைய கோட்பாடுகள் தனித்துவமான ஒரு துறையாகக் கருதப்படவில்லை. மாறாக ஒரு பொது ஒழுக்கக் கோவையின் பகுதிகளாக இருந்தன. இவ்வொழுக்கக் கோவை மனித அநுபவங்களின் முழுமையையும் அடக்கியிருந்தது.

பாரிய பல பொருளாதாரக் கோட்பாடுகள் மனித சமூகத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட வேளைகளிலேயே தோன்றியுள்ளன. இத்தகைய மாற்றங்கள் பல ஒழுங்கின்மைகளையும் ஏற்படுத்தியுள்ளன; கட்டிக் காத்து வந்த மரபுகளுக்கு அவை சவால் விட்டுமுள்ளன. இக்கோட்பாடுகள் பெரும்பாலும் ஒரு சமூகத் தேவையை நிறைவேற்ற முயன்றன. வீழ்ச்சியடையும் குருமார்களையோ அல்லது நிலச் சுவாந்தார்களையோ மீண்டும் நிலைநிறுத்த அவை முயன்றுள்ளன. கீழ்வகுப்பு மக்களின் நலன்களைப் பேணும், மாற்றங்களைக் கோரும் கோட்பாடுகள் பெரிதாகப் பதிவு செய்யப்படவில்லை. எனினும் காலத்துக்குக் காலம் அவை தோன்றியே உள்ளன. இவர்களது தலைவர்கள் கூடிய கல்வியறிவு நிறைந்தவர்களாக இருந்திருப்பின் இன்னும் நிறையப் பதிவுகள் தோன்றியிருக்கலாம்.

## பொருளாதாரம் என்றால் என்ன?

புராதன மற்றும் மத்தியகாலப் பொருளாதாரப் பதிவுகளின் அடிப்படையில் அக்காலத்திற் பொருளாதாரம் என்பது : "ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இருந்த உண்மையான பொருளாதார நடைமுறைகள் அல்ல; ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய நடைமுறைகளிலிருந்து எழுந்த எண்ணங்களும் கோட்பாடுகளாகும்." பொருளாதாரக் கோட்பாடுகள் வித்தியாசமான வழக்கங்கள், மற்றும் அபிவிருத்தியின் வேறுபட்ட கட்டங்களின் அடிப்படையில் மாறுபடக்கூடியவை, அவை பௌதிக அல்லது இரசாயன விதிகளைப் போன்று எக்காலத்துக்கும் பொருத்தமான, வெளிப்படுத்திக் காட்டக் கூடிய "இயற்கை விதிகளின்" (natural laws) முறைமை அல்ல.

பொருளாதாரத் தோற்றப்பாடுகளை முழுக்கவும் புறவியமான விளக்கம் எனக் கூறவும் முடியாது. ஏனெனில் சகல பொருளியற் கோட்பாடுகளும் துல்லியமான பகுப்பாய்வு ஒன்றினை விட வேறு நோக்கங்களைக் கொண்டுள்ளன; ஒழுக்கம், குடியியல், கலாசாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கங்கள் அவற்றிற் சிலவாகும். அரசியல், சமூகம், அழகியல், சமயம், ஒழுக்கம் முதலிய மனிதனின் ஏனைய நடத்தைகள் பற்றிய பிரித்துப்பார்க்கக் கூடிய ஒரு தனித்துவமான அறிவுத் தொகுதி எனவும் கூறுவதற்கில்லை.

ஒரு கொள்கை உருவாக்கும் கருவி என்னும் அடிப்படையில் விஞ்ஞான முறைமையின் பிரயோகம் பொருளியலின் பயன்பாட்டை மாற்றிவிடவும் இல்லை. மாறாக விஞ்ஞானத்தின் சிறப்புக்கு ஏற்ப கொள்கையும் சிறப்படையும். மரபுகளும் தேவைகளும் மாறுவதற்கேற்ப பொருளாதாரக் கோட்பாடுகளும் மாற்றமடையும்; அத்துடன் கொள்கைகள், முறைகள் ஆகியவை தொடர்பான பிரச்சினைகளில் இன்னும் பயன் படுத்தப்படுகின்றன.

பொருளியலை நாம் ஒரு வெற்றிடத்தில் வைத்து நோக்க முடியாது. பொருளியற் கோட்பாடுகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் அதனை ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வகையின் அடிப்படையிலும் அச்சமூகத்தின் நடத்தைப் பாங்குகளின் அடிப்படையிலும் நோக்குதல் வேண்டும். பொருளியலாளர் மனித கௌரவத்துக்கு மாசு கற்பிக்கக் கூடிய முட்டாள்தனமான உழைப்பை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் இவ்வுழைப்பில் ஈடுபட்டுள்ளோரைக் குறைவாகப் பார்ப்பதும் இல்லை. மாறாக அவர்கள் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவிக்கின்றனர். இம் முறையின் மூலம் மனித அடிமைகளுக்கும், சுமக்கும் மிருகங்களுக்கும் பதிலாக யந்திரங்களையும், யந்திர வலுவையும் பயன்படுத்த முடியும்.

பொருளியலாளர்களும் நீதி நியாயத்தையும் ஒழுக்க நியமங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளனர். பொருளியலாளர்கள் விரயத்தையும், வினைத்திறனின்மையையும் வெறுக்கின்றனர். உற்பத்தி என்பது பயன்பாட்டுக்கே அன்றிச் சேர்த்து வைப்பதற்கல்ல என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். உற்பத்தியாளருக்கு இவ்விடயத்தில் உள்ள ஊக்கி இங்கு முக்கியமல்ல. பணம் தன்னளவிற் செல்வமாகிறது என்பதையோ அல்லது மிகவும் பயனுள்ளது என்பதையோ பொருளியலாளர்கள் இன்னும் ஏற்றுக் கொள்வதில்லை. பணம் உற்பத்தி அல்லது பரிமாற்றத்துக்கான ஒரு கருவி மாத்திரமே.

சுருக்கமாகச் சொல்வதெனில் பொருளியல் என்பது குடியிருப்பாளரின் முகாமைத்துவ ஆய்வாகவே உள்ளது. ஆனால் இக்குடியிருப்பாளர் (household) என்பது ஒரு குடும்பமாகவோ, நகரமாகவோ, விவசாய சமூகமாகவோ, கூட்டுத்தாபனமாகவோ, நாடாகவோ, உலகமாகவோ இருக்கலாம்.

மானியமுறை என்பது விவசாயிகள் தமது பயிரைக் காத்துக் கொள்வதற்கான தேவையின் அடிப்படையிலேயே தங்கியிருந்தது. இந்தப் பாதுகாப்பினைப் பிரபுக்கள் தமது விவசாயிகளுக்கும், குத்தகைக் காரர்களுக்கும் வழங்கினர். ஒவ்வொரு பண்ணையும் தனக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களிற் பெரும்பாலானவற்றை உற்பத்தி செய்தது. ஐரோப்பா வளர்ச்சியடைந்து கடல்வழியாகவும், நில வழியாகவும் வர்த்தகம் பாதுகாப்புக் கொண்டதாக மாறிய போது பயிர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையும் வழக்கொழிந்தது. மேலதிகப் பயிர் விளைச்சலை அவர்கள் விலைக்கு விற்க முடிந்தது; அல்லது தமக்குத் தேவைான பண்டங்களுக்காக மாற்றிக் கொள்ள முடிந்தது. நகரங்கள் வளர்ச்சியுற்றன; வியாபாரிகள் செல்வம் சேர்த்தனர். சிறிது சிறிதாகச் சந்தைகளைக் கொண்ட வர்த்தக முறைமை உள்ளூர் உற்பத்தி மரபுகளைச் சிதைத்துவிட்டது.

நகரங்களிற் சனத்தொகைப் பெருக்கம், விற்பனைக்காகப் பொருளை உற்பத்தி செய்தல், நீண்டதூர வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவையே அதிகாரத்தின் மையமாகத் தேசிய அரசுகள் வளர்ச்சியடைய வழிசமைத்தன. ஸ்பெயின் போர்த்துக்கல், பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் ஜேர்மனிய சிற்றரசுகள் ஆகியவற்றில் இறைமையின் வெளிப்பாட்டு அடையாளமாக மட்டுமே அரசர்கள் வீற்றிருந்தனர். மானிய முறைப் பிரபுக்களைப் போல் அல்லாத இந்த அரசுகள் சம்பளம் கொடுத்து ஒரு பயிற்றப்பட்ட இராணுவத்தைத் தமது அதிகாரத்தைக் காக்கும் பொருட்டு வைத்திருந்தன. தமது நிர்வாகத்தைச் சம்பளம் பெறும் அலுவலர்களைக் கொண்டு நடாத்தின. அத்துடன் தமது செலவினங்களைச் சமாளிப்பதற்காக வரிகளையும் வசூலித்தன. வர்த்தகர்களைப் போலவே அரசுக்கும் பணம் தேவைப்பட்டது. மக்களிடம் எந்தளவுக்குப் பணம் உள்ளதோ அந்தளவுக்கு அரசும் பணத்தை வரியாக வசூலித்துச் செலவழிக்கவும் முடியும். எனவே அரசானது உற்பத்தி, வர்த்தகம், வங்கி முதலிய பணம் பண்ணும் தொழில்களை ஊக்குவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்கள், மற்றும் உற்பத்தியாளர்களுக்கு அரசு தேவைப்பட்டதைப் போல அரசுக்கும் இவர்கள் தேவைப்பட்டனர். அரசு பெருவீதியையும், நீர்வழிகளையும் கட்டி, நிர்வகித்துப் பாதுகாத்தது. அவற்றைப் பயன்படுத்துவதற்கான தனிப்பட்ட வரியை ஒழித்தது. வர்த்தகர்களுக்குச் சலுகைகளையும் சிலருக்குத் தனியுரிமையையும் வழங்கியது. அந்நியப் போட்டியாளர் களிடமிருந்து புதிதாக வளர்ச்சியடைந்து வரும் கைத்தொழில்களைப் பாதுகாத்தது. மூலப் பொருட்களின் ஏற்றுமதியைத் தடை செய்தது. மானிய முறை அம்சங்களை உடைத்து தொழிலில் போட்டித் தன்மையை ஊக்குவித்தது. சுருக்கமாகக் கூறுவதெனில் உத்வேகமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்துக்குத் தேசிய அரசுகள் ஊட்டமான உணவை வழங்கின. மானிய முறை அழியத் தொடங்கியது. புதிய நடைமுறைகள் ஒரு முறைமையாக அமைக்கப்படவில்லை. புதிதாகச் சுத்தம் செய்யப்பட்ட ஒரு காட்டில் புல் முளைப்பது போன்று அவை வளர்ச்சியடைந்தன.

ஐரோப்பாவில் மட்டும் வர்த்தகம் வளர்ச்சியடையவில்லை. நீண்ட தூரங்களுக்கும் அது விரிவடைந்தது. மத்திய காலத்தில் சிலுவையுத்த வீரர்கள் தாமாகவே மத்திய தரைக்கடலின் கிழக்குப் பிராந்தியங்களுக்கு வர்த்தகத்தைப் பெருக்கினர். ஆனால் இந்தியாவுக்கான தரைப்பாதை பயங்கரமும் செலவும் மிக்கதாக இருந்தது. ஆனால் வஸ்கொடகாமா (Vasco'da Gama) இந்தியாவுக்கான கடற்பாதையைக் கண்டறிந்த பின்னர் அத்திலாந்திக் நாடுகள் ஆகிய கரையோர நாடுகளிலும் தீவுகளிலும் தமது வர்த்தக அடித்தளத்தை வலுப்படுத்திக் கொள்ள முயன்றனர்.

இந்தியாவுக்கான குறுகிய வழியைக் கண்டு பிடிக்கும் முயற்சியின் காரணமாக அமெரிக்கா கண்டறியப்பட்டது. இதனால் செல்வத்தைத் தேடும் வேகத்துக்கு இன்னுமொரு பரிமாணமும் ஏற்பட்டது. கொலம்பஸ் இப்பாதையைக் கண்டறிய உதவி செய்த ஸ்பெயின் தான் முதலில் இந்தப் பந்தயத்திற் பிரவேசித்தது. மெக்சிக்கோ மற்றும் பேருவிலிருந்தும் ஸ்பெயின் கொள்ளையடித்துக் கொண்டு வந்த தங்கம், வெள்ளி முதலிய திரவியங்களின் காரணமாக ஐரோப்பாவின் ஏனைய நாடுகள் பொறாமை கொண்டன. இத்தகைய செல்வம் அரிஸ்டோட்டில் அல்லது தோமஸ் அக்யுனாஸின் பார்வையில் பயனற்றது தான். எனினும் ஸ்பானியர்கள் இச் செல்வத்தின் மூலம் ஆடம்பரமாகச் செல்வச் செழிப்பில் வாழத் தலைப்பட்டனர்.

இவ்வாறாக ஐரோப்பா முழுவதும் பணமானது தேவைக்கு அதிகமாகவே புழங்கியது. வளர்ச்சியடைந்து வந்த வர்த்தகத்துக்கு ஒரு பரிமாற்ற ஊடகமும், புதிய தொழின் முயற்சிகளுடன் கூடிய முதலீடும் தேவைப்பட்ட அந்த நேரத்தில் பணம் அத்தேவையை நிறைவு செய்தது. தேவைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சிப் பணம் இருந்த காரணத்தால் விலைகள் பன்மடங்கு அதிகரித்தன. பணவீக்கம் என இன்று நாம் அழைப்பதை ஐரோப்பா அப்போது கண்டது. இதனால் உற்பத்தியாளர்களுக்கு அதிக இலாபமும், சிறுவருமானம் கொண்டோருக்குச் சிரமங்களும் ஏற்பட்டன. ஆனால் இந்த இலாபங்கள் வர்த்தகத்தையும் முதலீடுகளையும் அதிகரிக்கச் செய்தன. இந்தப் பணவீக்கமானது பழைய "இயற்கை" பொருளாதார ஒழுங்குக்கு இன்னுமொரு மரண அடியை வழங்கியது.

அக்காலத்தில் வர்த்தகர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் பணத்தைச் சேர்த்தல் அல்லது தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களைச் சேர்த்தல் தான் பிரதான தேசியக் கொள்கையாக இருக்கவேண்டுமென அனுமானித்தனர். இவ்வகையான அனுமானம் மிகவும் இயற்கையானதே. உண்மையில் பணத்தைக் கொண்டு எதையும் வாங்க முடியும். உலகம் முழுவதும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீண்ட காலம் அதனைச் சேமித்து வைத்துத் தேவையான போது பயன்படுத்த முடியும். தங்கத்தையும் வெள்ளியையும் சேர்ப்பதன் மூலம் செல்வந்த நாடாகும் வழியை முதலில் ஸ்பெயின் காட்டியபோது ஏனைய நாடுகளும் அந்த வழியைப் பின்பற்றின.

இத்தகைய கொள்கையை முதன்முதலாக ஆதரித்தோர் 'Bullionists' என அழைக்கப்பட்டனர். இதுதான் ஒரு நாட்டின் இறுதிக் குறிக்கோள் எனில் அதனை அடைவதற்காக அரசானது தங்கம், வெள்ளியை ஏற்றுமதி செய்வதை முற்றாகத் தடை செய்வதோடு அவற்றை இறக்குமதி செய்வதற்கு முயல வேண்டும் என்பது தான் நாம் மேற்கொள்ளக் கூடிய தர்க்கரீதியான முடிவாகும். இதிலிருந்து இன்னும் நாம் அனுமானிக்கக் கூடியது என்னவெனில் தனது பொருட்களை விலையுயர்ந்த உலோகங்களுக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதாகும். வெறுமனே பண்டமாற்று வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் தமது கடமையைச் செய்யவில்லை. இங்கிலாந்து இத்தகைய உலோகங்களின் ஏற்றுமதியைத் தடை செய்ததோடு வர்த்தகர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் முயன்றது.

1601 இல் அரசாங்கமானது கிழக்கு நாடுகளுடன் வர்த்தகம் புரிவதற்குக் கிழக்கிந்தியக் கம்பனிக்கு ஆணை வழங்கியது. இந்நடவடிக்கை மூலதனத்துக்கு இலாபத்தை ஈட்டுதலை மட்டும் கருதாது தேசியக் கொள்கை அமுலாக்க சாதனமாகவும் கருதப்பட்டது. ஆனால் 1613 இல் இக்கம்பனியின் ஒரு கப்பல் கடலில் மூழ்கியபோது பெரும் பிரச்சினை தோன்றியது. ஏனெனில் இக்கப்பல் பெருந்தொகையான தங்கம், வெள்ளியை இங்கிலாந்திலிருந்து வெளியே கொண்டு சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களில் கிழக்கிந்தியக் கம்பனிக்கு ஆதரவாக "தோமஸ் மூன்" (Thomas Mun) (1571 - 1641) வாதாடினார். கல்வியிலும் செல்வத்திலும் உயர்ந்திருந்த இவர் லண்டன் வர்த்தகர் ஒருவரின் புதல்வராவார். 1615 இல் இவர் கிழக்கிந்தியக் கம்பனியில் சேர்ந்து ஒரு பொதுசன உறவு அலுவலராகக் கடமையாற்றினார். இவர் வெளிநாட்டு வர்த்தகக் கோட்பாட்டுக்கு வழங்கிய பங்களிப்பு மிகவும் உயர்தரமானது. "வெளிநாட்டு வர்த்தகம் மூலமான இங்கிலாந்தின் செல்வம்" (England's Treasure by Foreign Trade) என்னும் நூலை இவர் 1630 இல் எழுதினார். இவரது இறப்புக்குப் பின்னர் வெளியிடப்பட்ட நூல் பொருளியலில் "எமது செல்வத்தை வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் கூட்டிக் கொள்ள வேண்டுமெனில் நாம் ஒரு விதியைப் பின்பற்ற வேண்டும். அதாவது ஒவ்வொரு வருடமும் அந்நியர்களுக்கு நாம் நிறைய விற்க வேண்டும். ஆனால் அவர்களிடமிருந்து பெறுவனவற்றில் குறைவாகவே நுகர வேண்டும்." மூன் இவ்வாறு தமது நூலில் வாதாடுகிறார். பெரும் பணத்தை நாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமெனில் அதற்காக வெளிநாடுகளிற் கொஞ்சம் தங்கத்தையும், வெள்ளியையும் செலவழிக்கவும் வேண்டி வரும் எனவும் அவர் கூறுகிறார்.

மூன் வெளிநாட்டு வர்த்தகத்தில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார். அவர் அனுபவத்தின் மூலம் பெற்ற பல விடயங்கள் பொருளியல் மாணவர்களால் அன்று முதல் இன்று வரை பயன்படுத்தப்படுகின்றன. அவரது பங்களிப்புகளில் ஒன்று "சர்வதேச சென்மதி நிலுவை" (International Balance of Payment) என்னும் ஓர் எளிய கணக்கீடாகும். அக்காலத்தில் இக்கணக்கீட்டைத் துல்லியமாக அளவிட முடியாமல் இருந்தது. இன்று கூட முக்கிய சில தரவுகள் கிடைப்பதில்லை. ஆனால் மூன் அது தொடர்பான கோட்பாடுகளை மிகவும் சரியாக முன் வைத்திருந்தார்.

இக்கணக்கில் ஒருபுறம் ஏற்றுமதிப் பண்டங்களின் மதிப்பும், இன்று மறைமுக ஏற்றுமதி (invisible exports) எனப்படும் கப்பல் கட்டணம், காப்புறுதி, வியாபாரிகளின் இலாபம் முதலியவையும் பதியப்பட்டன. மறுபுறத்தில் இறக்குமதிக்காக வெளிநாட்டில் செலுத்தப்பட்ட பணம் பதியப்பட்டது. இதில் இங்கிலாந்தில் விற்பனை மூலம் பெற்ற இலாபம், கப்பற் கட்டணம், காப்புறுதி, இறக்குமதித் தீர்வைகள் முதலியவை உள்ளடக்கப்படக் கூடாது. ஏனெனில் இவை ஆங்கிலேயரால் ஆங்கிலேயருக்குச் செலுத்தப்பட்டவையாகும். ஆனால் பண்டங்களின் இறக்குமதியுடன் சேர்க்கப்பட வேண்டிய 'மறைமுக' இறக்குமதிகள் இருந்தன. இவை வெளிநாட்டவர்க்கு இறுக்கப்பட வேண்டிய கப்பல் கட்டணம், காப்புறுதி, தீர்வைகள் முதலியவைகளாகும்.

இறுதியாக ஏனைய "மறைமுகமானவைகளு"க்கும் கணக்கீடு செய்யப்படவேண்டும். பயணிகளுக்கான செலவுகள், பெறப்பட்ட அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தப்பட்ட வட்டிகள் முதலியவை இதில் அடங்கும். இவ்வகையான கொடுப்பனவுகள் இறக்குமதிக்கான கொடுப்பனவுகள் அல்லது ஏற்றுமதிகளின் விற்பனைகள் ஆகியவற்றுடன் சமநிலைப்படுத்தப்பட்டன. உதாரணமாக இங்கிலாந்துக்கு வருகை தந்த பயணிகள் செலவுகள் ஆங்கிலேயர் இறக்குமதிகளை வாங்க உதவின. இதன் மூலம் ஆங்கிலேயர் வெளிநாடுகளில் செலவழிக்க வேண்டிய நிகரத் தொகையினைக் குறைத்தன. சகல பொருத்தமான அம்சங்களும் கணக்கீடு செய்யப்பட்ட பின்னர் இறுதியான மீதி வெளியேறும் கொடுப்பனவுகளை உள்வரும் வருமதிகளிலிருந்து கழிப்பதன் மூலம் பெறப்படுகிறது. இது இங்கிலாந்து பெற்ற வருமானமாகும்.

இன்றைய பொருளியலாளர் சென்மதி நிலுவை பற்றிய மேற்படி பகுப்பாய்வுக்கு இன்னும் சிலவற்றை சேர்க்க முடியும். அதாவது அப்போது முக்கியமல்லாத நீண்ட கால சர்வதேசக் கடன் அல்லது இதே காரணியின் மறுவிதமான சர்வதேச முதலீடு என்பதையும் சேர்க்க முடியும். ஒரு நாடனது தனது ஏற்றுமதியை விட மேலதிகமாக இறக்குமதி செய்து கொண்டிருக்க முடியும். வெளிநாட்டுக் கடன்கள் அல்லது முதலீடுகள் இருக்கும் போது ஏற்றுமதி இறக்குமதி வித்தியாசத்தை தங்கத்தின் மூலம் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

ஒரு நாட்டினை ஒரு தனிப்பட்ட வியாபாரிக்கு ஒப்பிட முயற்சி செய்வோர் தமது வாதத்துக்குச் சார்பாக தோமஸ் மூனின் கருத்துக்களை மேற்கோள் காட்ட முடியும். பிரான்சில் வர்த்தக வாதத்தின் (mercantilism) முக்கியமான ஆதரவாளராகத் திகழ்ந்தவர் அரசியல்வாதியான ஜீன் பப்ரிஸ்ட் கோல்பேட் (Jean Baptiste Colbert) (1619 - 1683) ஆவார். கோல்பேர்ட் ஒரு கம்பளி வியாபாரியின் மகன். பொதுச் சேவையில் சேர்ந்த அவர் தனது 32 ஆவது வயதில் கார்டினல் மசாரின் (Cardinal Mazarin) என்பவரது சொத்துக்களைப் பரிபாலனம் செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டார். மிகவும் திறமையான முறையில் தமது கடமைகளைச் செய்ததமையினால் மசாரினின் நன்மதிப்பைப் பெற்று அவரது விதந்துரையின் பேரில் அவர் 14ஆம் லூயியின் நிதி அமைச்சரானார். 14 ஆம் லூயியின் அமைச்சரவையில் கோல்பேர்ட் வர்த்தகத்தையும் உற்பத்திக் கைத்தொழிலையும் வளர்த்தார். இதற்கு வசதியாக இறக்குமதிகளின் மீது தீர்வைகளை அதிகரித்தார்; பிரெஞ்சுக் கப்பல் சேவையை ஊக்குவித்தார்; பிரெஞ்சுக் குடியேற்றங்களை விரிவாக்கினார், அத்துடன் உள்நாட்டில் போக்குவரத்துச் சேவைகளை விருத்தி செய்தார். தனது செயற்பாடுகளுக்கு மலிவான ஊழியம் தேவைப்பட்டதால் பிரெஞ்சு உழைப்பாளர்கள் நாட்டை விட்டு வெளியேறாமற் தடை செய்யப்பட்டனர்; வெளிநாட்டுக் குடியேற்றவாசிகள் பிரான்சுக்கு வருவதற்குக் கவரப்பட்டனர். கோல்பேர்ட் தனியுரிமைகளைக் குறிப்பாக வெளிநாட்டு வர்த்தகத் துறையில் வழங்கினார். புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிப்புகளையும், புதிய தொழின் முயற்சிகளையும் ஊக்குவித்தார். ஒரு தசாப்த காலத்துக்குள் பிரான்சின் வருமானத்தை இரண்டு மடங்காக அதிகரித்ததோடு அவர் சிறந்த கடற்படையைக் கொண்ட வல்லரசாக ஐரோப்பாவில் பிரான்சின் நிலையை உயர்த்தினார். அதுமட்டுமல்லாமல் வாசிகசாலைகளையும், கற்கை நிலையங்களையும் ஸ்தாபித்து விஞ்ஞானம் மற்றும் அறிவு வளர்ச்சிக்கு உதவினார்.

இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பொதுச் செலவினம் தேவைப்பட்டது. இதனால் வரிகள் உயர்ந்தன, ஆனால் அரசன் தனது வருமானம் பன்மடங்கு அதிகரித்த போதும் அதற்கு மேலதிகமாகச் செலவழித்தான். அதனால் தேசம் பணமற்ற நிலையை அண்மித்தது. இதனால் மக்கள் பிரான்சின் அதிகாரத்தையும் பெருமையையும் பாராட்டும் நிலையில் இருக்கவில்லை. இதன் காரணமாக பிரான்சின் உயர்வுக்குத் தனது கடுமையான உழைப்பால் வழிவகுத்த கோல்பேர்ட் தனக்குரிய கௌரவத்தைப் பெறமுடியாமலேயே மரணமடைந்தார். இவ்வகையான அதிகார நிலைக்கு அடம் ஸ்மித் போன்ற பொருளிலாளர்கள் 'வர்த்தக வாதம்' என நாமம் சூட்டினர். ஆனால் வர்த்தக வாதத்தை நடைமுறைப்படுத்தியோர் அவ்வார்த்தையைப் பயன் படுத்தவில்லை.

ஒரு வகையில் இவ்வார்த்தை பொருத்தமானதுடன் எந்தவொரு நாட்டுக்கும் சிறந்த கொள்கையாக அமையக் கூடியது. ஒரு வர்த்தகன் கையாளும் கொள்கையே எனலாம். அதாவது ஒரு வர்த்தகன் தனது செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமெனில் தனது கொடுப்பனவுகளை விட அதிகமான தொகைக்கு விற்பனை செய்ய வேண்டும். இதைப் போலவே வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நாடுகள் மற்ற நாடுகளைப் போட்டியாளர்களாகக் கருதியதோடு தாம் தனியுரிமையைப் பெறுவதற்காகத் தமது போட்டியாளர்களை எப்படியும் வெளியேற்றவே முயன்றன. ஒரு வியாபாரி தான் கொள்வனவு செய்யும் பொருட்களின் விலைகளைக் குறைந்தளவு மட்டத்தில் வைத்திருக்க விரும்புவதோடு மிகவும் மலிவான ஊழியத்தைப் பெறவே விரும்புவான். அதேபோல வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நாடுகளும் தமது குடியேற்ற நாடுகளின் வளங்களை மலிவான விலைக்குச் சுரண்டியதோடு உள்நாட்டில் ஊழியத்தை மலிவான விலைக்குப் பெறமுயன்றன.

எனினும் அக்காலத்தில் வர்த்தக வாதமானது பயனுள்ள செயற்பாடு களைக் கொண்டிருந்தன. அத்துடன் பல பரந்த கொள்கைகளையும் கொண்டிருந்தன. முதலாவதாக Bullionists ஒரு நாடானது தனது செல்வத்தை தங்கம், வெள்ளி முதலான உலோகங்களில் சேர்த்து வைக்க வேண்டுமென கூறினர். இதில் சில நியாயங்களும் உண்டு. ஏனெனில் நீண்டதூர வர்த்தகங்கள் பண்டமாற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத்தை வேகமாக மாற்றியமைத்தன. ஒரு பணரீதியான சந்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம் வளர்ச்சியடைந்த போது பரிமாற்ற ஊடகமாக விளங்குவதற்கு நிறையப் பணம் தேவைப்பட்டது.

தேசிய அரசுகளின் அதிகார எழுச்சியானது உள்நாட்டுச் சிற்றரசுகளின் பிணக்குகளுக்கு எதிராகப் பாதுகாப்பு வழங்கியதோடு ஓர் உள்நாட்டுச் சந்தைக்கான சட்டகத்தையும் வழங்கியது. வர்த்தகவாதத்தை எதிர்த்தவர்களும் இந்த யதார்த்த நிலைமையை ஏற்றுக் கொண்டனர்; திரும்பவும் மானிய முறைக்குத் திரும்ப வேண்டுமென அவர்களில் எவரும் கூறவில்லை. அத்துடன் நவீன தனியார் தொழின் முயற்சிகள் அரச உதவி இல்லாமல் ஊன்றியிருக்க முடியாது என்பதையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். பாதைகளையும், கால்வாய்களையும் அமைப்பதற்கு அரச உதவி தேவைப்பட்டது. தனியுரிமைகளும் மானியங்களும் புதிய கைத்தொழில்கள் எழுச்சி பெற உதவின. ஆரம்பத்தில் பாதுகாப்பு வரிகள் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக இருந்தன. இன்றைய வளர்ச்சியடைந்த கைத்தொழில் உலகிற் பாதுகாப்புத் தீர்வுகளின் நன்மைகள் சந்தேகமானவை என்பது வேறு விடயம். நவீன நாகரீகத்தின் பிறப்பு பல சமூக எழுச்சிகளைப் போலவே வேதனை நிறைந்தது தான். கைத்தொழில் ஊழியத்துக்கும், விவசாயத்தில் ஈடுபட்டிருந்தோருக்கும், சுரண்டலுக்கு ஆளாகியிருந்த குடியேற்றங் களுக்கும் அது பெரு வேதனையை அளித்தது.

ஊழியம் (Labor) என்பது மானியமுறைக் காலத்தில் ஓர் அங்கத்தினைப் பெற்றிருந்தது. எவ்வளவு கீழ்மட்ட ஊதியமாயினும் கடமைகளுடன் உரிமைகளும் இணைந்திருந்தன. ஆனால் பின்னர் பிறரின் இலாபத்துக்கான ஒரு கருவியாக ஊழியம் மாறியது. ஒரு நாட்டின் செல்வம் என்பது அதன் குடிமக்களுடன் தொடர்புள்ளதாக அடையாளம் காணப்படவில்லை. உள்நாட்டில் நுகர்வு செய்யாது எவ்வளவுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதே நோக்கமாக இருந்தது. மலினமாக ஊழியத்தைப் பெறவேண்டுமெனவும் வெளிநாட்டில் விற்பனையை அதிகரித்து இலாபத்தைப் பெருக்க வேண்டுமென்பதுமே அவாவாக இருந்தது. ஊழிய வழங்கலுக்கு ஆதரவாகப் பெரிய சனத்தொகை ஊக்குவிக்கப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவது வரவேற்கப்பட்டது. ஏனெனில் அது ஊழியத்தை இன்னும் மலினப்படுத்தியது. ரியூடர் (Tudors) ஆட்சியின் போது பெண்களும் பிள்ளைகளும் கந்தல் துணிகளுடன் இங்கிலாந்தின் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்தனர். ஊழியர்களின் சிறு கிளர்ச்சியும் கொடூரமாக முறியடிக்கப்பட்டது. வேலை நேரம் வரையறைக்கு உட்படவில்லை. சோம்பியிருத்தல் ஒரு குற்றமாகக் கருதப்பட்டது. தனது அந்தஸ்தைக் குறைத்துக் கொள்ளாமல் எலிஸபெத் கால ஏழைச் சட்டங்களின் மூலம் எவராலும் எத்தகைய நிவாரணத்தையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் விவசாயமானது கைத்தொழிலுடன் ஒப்பிடும் போது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. பல நூற்றாண்டுகளாக உணவு உற்பத்திப் பொறுப்பு விவசாயத் துறையிலேயே இருந்தது. அத்துடன் ஐரோப்பாவிற் பெரும் பகுதியினரின் வாழ்வாதாரமாக விவசாயமே விளங்கியது. எனினும் இப்போது விவசாயம் மலிவாக உணவு வழங்க வேண்டுமெனவும் அதன் மூலம் ஊதியத்தைக் குறைந்த நிலையில் வைத்திருக்க முடியுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. பல நாடுகளில் விவசாயப் பொருட்களுக்கான பாதுகாப்பு வரி நீக்கப்பட்டது. ஆனால் உற்பத்திப் பொருட்களின் மீதான பாதுகாப்பு வரி நீடிக்கப்பட்டது. நிலப்பிரபுக்களும் விவசாயிகளும் கூடிய விலை கொடுத்து வாங்கினர்; மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர். கோல்பேர்ட் முதலியோர் தானியங்களின் ஏற்றுமதியை அதிக வரிவிதிப்பின் மூலமோ அல்லது தடை விதிப்பு மூலமோ முற்றாகத் தடை செய்தனர். அத்துடன் நிலப்பிரபுக்கள் அரசாங்கச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக மிகவும் உயரிய வரிவிதிப்புகளுக்கு உள்ளாகினர்.

## வர்த்தக வாதத்தின் மீதான இயலாட்சி வாதிகளின் எதிர்ப்பு

புரட்சிக்குச் சிறிது காலத்திற்கு முன்னர் பிரான்சில் உருவாகிய நவீன பொருளியற் சிந்தனாவாதிகள் தமது கோட்பாடு விஞ்ஞான பூர்வமானதெனக் கூறினர். பொருளியல் ஒழுங்கு பற்றிய ஒரு முழுமையான நோக்கினையும் அவர்கள் விருத்தி செய்தனர். இவர்கள் இயலாட்சி வாதிகள் (இயலாட்சி - இயற்கையின் ஆட்சி - Physiocracy - the rule of nature) என அழைக்கப்பட்டனர். அந்நேரத்தில் ஏனைய துறைகளைப் பாதித்திருந்த இயற்கைச் சட்டம் இதனையும் பாதித்தது. இயற்கைவாதிகள் (physiocrats) இரண்டு காரணங்களுக்காகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

(1) அவர்கள் கண்டறிந்த தலையிடாமை (Laissez Faire) என்னும் பதமும் கொள்கையுமாகும். இவ்விடயமானது பின்வந்த பொருளாதார விவாதங்களில் மிகவும் முக்கியமானதாக இருந்து வந்துள்ளது.

(2) செல்வத்தின் சுற்றோட்டம் பற்றிய அவர்களது பகுப்பாய்வு. இப்பகுப்பாய்வானது தேசிய வருமானத்தின் உருவாக்கம் மற்றும் பகிர்வு தொடர்பான அடிப்படைகளை முன்வைத்தது.

இச்சிந்தனாவாதிகள் வர்த்தகவாதிகளின் மீது காரசாரமான தாக்குதலை மேற்கொண்டனர். இச்சிந்தனைப் போக்கின் தந்தையான "பிரான்சிஸ் கெஸ்னே" (Francois Quesnay) 25 வயதில் மருத்துவப்பட்டம் பெற்ற ஒரு கிராமவாசி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக் கோட்பாடான சகலவிதமான செல்வமும் அடிப்படையில் நிலத்திலிருந்தே உருவாகின்றன என்பதை இச்சிந்தனாவாதிகள் வலியுறுத்தினர். உணவு, மரம், கனிப்பொருள், கற்கள் முதலியவை இல்லாமல் மனிதனால் நிலைக்கவே முடியாது. எனவே உடமைகளைச் சேர்க்கவும் முடியாது. எனவே உண்மையான உற்பத்தியாளன் விவசாயிதான். கைத்தொழிலாளன், வர்த்தகன், கைவினைஞன் ஆகியோர் அடிப்படையான உற்பத்தியாளர்கள் அல்லர். மண்ணிலிருந்து செல்வத்தைப்பெற்று அதனை விநியோகம்செய்யும் நிலவுடமையாளர்களே உண்மையில் செல்வத்தை உடைய வகுப்பினராவர். மிகையான நிலத்தைக் காக்கின்ற காரணத்தினால் ஓர் இயற்கை ஒழுங்கில் அவர்களின் பொறுப்புகள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

வர்த்தகம், கைத்தொழில் ஆகியவற்றின் மீது அழுத்தம் தருகின்ற வர்த்தக வாதத்தினாற் பாதிக்கப்பட்ட விவசாய வர்க்கத்தின் மீது இக்கோட்பாடு உண்மையில் அனுதாபத்தைக் காட்டுகிறது. நகரத்தின் தொழிலாளி உற்பத்தித்திறன் மிக்கவன் அல்ல என்னும் வினோதமான நம்பிக்கைக்கு ஆதரவாகப் பின்வரும் வாதம் முன்வைக்கப்பட்டது. அதாவது நிலம் மட்டுமே பெற்றதை விடக் கூடுதலாகத் தரமுடியும். சில விதைகள் பயிர்களைத் தரமுடியும். மிருகங்கள் தாமாகவே இனத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். ஓர் இயற்கைச்சமூகத்தில் நில உடைமையாளன் தனக்குத் தேவையானவற்றைத் தானே ஆக்கிக் கொள்ள முடியும். வர்த்தகர்களின் அல்லது கைவினைஞர்களின் தேவை அவனுக்கு இல்லை. ஆனால் காலப்போக்கில் தனது வசதி கருதி அவன் பல கைவினைஞர்களைத் தனக்குச் சேவை செய்வதற்கு அமர்த்திக் கொண்டான்.

நிலத்திலிருந்து அவனுக்கு கிடைத்த மிகையை இவ்வாறு தனது சேவைக்கு அமர்த்திக் கொண்டவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவன் வழங்கினான். ஆனால் கைவினைஞர்கள் செல்வத்தைச் சேர்க்க முடியாது. அப்படி அவர்கள் செல்வத்தைச் சேர்க்க வேண்டுமெனில் அரசு போன்ற 'செயற்கையான' நிறுவனம் அவர்கள் சார்பாகத் தலையிட வேண்டும். ஊதியம் பெறுவோர் தொழிலுக்கான போட்டி காரணமாகத் தமது அடிப்படைத் தேவைகளையே பூர்த்தி செய்துகொள்ள முடியும். இது ஒரு மனிதத் தன்மையற்ற கோட்பாடாகத் தோன்றினும் அந்நேரத்தில் அது பொருத்தமானதாகவும் இருந்தது.

'இயற்கை ஒழுங்குகளுக்கு' எதிராகச் செயற்படும் யாவும் திருப்தியின்மை மற்றும் குழப்பம் காரணமாக உருவாகியது எனவும் அவைகள் ஒழிக்கப்படவேண்டுமெனவும் இயற்கை வாதிகள் நம்பினர். 'ஒரு சாதகமான வர்த்தக மீதி' எனப்படும் ஏற்றுமதி மிகையை ஏற்படுத்துவதற்கு ஏன் தேசியக் கொள்கை பாடுபடுகிறது. இது உண்மையான செல்வத்தைச் சேர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவமாட்டாது. இயற்கை வளங்களைத் திறமையாகக் கையாள்வதன் மூலமாகவே செல்வத்தை உருவாக்க முடியும். ஏற்றுமதி மிகை என்பது உண்மையில் தான் பெறுவதை விடக் கூடிய பண்டங்களை ஏற்றுமதி செய்வதைக் குறிக்கும். இத்தகைய செயன்முறை ஒரு குடும்பத்தை வறுமையில் தள்ளி விடக்கூடியது. ஏற்றுமதி செய்யத்தக்க பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக உழைப்பாளர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதானது ஒரு நாடானது தனது இரத்தத்தைத் தானே உறிஞ்சுவதற்குச் சமமாகும்.

தனியுரிமை மூலமாகக் கைத்தொழில்களுக்கு ஆதரவு தருவது என்பது உற்பத்தியில் ஈடுபடாதவர்களுக்குச் செல்வத்தை இயற்கையாகவே கொண்டிருக்கும் உற்பத்தியாளரை கூடிய விலை மூலம் சுரண்டுவதற்கு வாய்ப்பளிப்பதாகும். அரசமானியம் என்பதும் கொள்ளையடிப்பது தான். ஊழல், சலுகை வழங்குதல், அரச வங்குரோத்து போன்றவை இத்தகைய நடத்தைகள் மூலம் பல்கிப் பெருகுகின்றன. ஓர் இயற்கை ஒழுங்கின் படி கைத்தொழிற் பொருட்களின் விலை அவை செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விலையை விட அதிகமாகவே இருக்கும். இதன் காரணம் இதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஊழியத்தின் விலையேயாகும். எனவே விலையானது ஊழியத்தின் செலவினம் ஊடாகவே தீர்மானிக்கப்படல் வேண்டும். பழைய பெறுமதியின் ஊழியக் கோட்பாட்டின் அடிப்படையாக இந்த நோக்கு அமைந்திருந்தது.

தனிநபர்கள் தமது சுய நன்மைகளின் அடிப்படையிலேயே இயங்கும் சுதந்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும். தமது தொழிலைத் தெரிவு செய்வதற்கும், எங்கும் செல்வதற்கும், செல்வத்தைத் திரட்டுவதற்கும், தமது சொத்துக்களை எது வேண்டுமானாலும் செய்வதற்கும் அவர்கள் அனுமதிக்கப்படல் வேண்டும். அரசானது இதற்குத் தடையாகவோ, ஆதரவாகவோ இருக்கக் கூடாது. ஒரு வழியில் இது ஒழுக்கச் சட்டமாகும், தனிமனித உரிமைகள் பற்றிய இயற்கைச் சட்டமாகும். ஏனெனில் ஓர் இயற்கைச் சட்டமாக இருப்பதால் பொதுவான நன்மைகளுக்கு வழிவகுக்கும்.

இக்கோட்பாடுகள் யாவற்றையும் பின்வரும் வசனம் அடக்கியுள்ளது; "தலையிடவேண்டாம், உலகம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்". ("Don't interfere, the world will take care of itself") இது சகலருக்கும் ஆதரவான கோட்பாடாகத் தோன்றியபோதிலும் இதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளக் கூடியோர் மற்றவர்கள் தம்மில் தலையிடாத பட்சத்திற் தாம் சிறப்பாக இருக்க முடியும் என்று நம்புபவர்கள் மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. அடம் ஸ்மித் - பழம் முதன்மை வாதி

பழம் பொருளியலாளர்களில் முதல்வரான அடம் ஸ்மித் (1723-1790) ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய கருத்துக்கள் வேறெவரது கருத்துக்களையும் விட நீண்டகாலம் செல்வாக்குச் செலுத்தி வந்தன.

## ஸ்மித் எவ்வாறு ஒரு பொருளியலாளரானார்?

எடின்பேர்க்குக்கு அண்மையிலுள்ள கிர்க்கல்டி (Kirkcaldy) என்னும் இடத்தில் பிறந்த ஓர் அதிகாரியின் மகன் தான் அடம் ஸ்மித். தனது 14 ஆவது வயதில் அவர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். பண்டைய இலக்கியங்களையும் கணிதம், மெய்யியல் ஆகியவற்றையும் அங்கு அவர் கற்றார். அவரது ஆசிரியராக விளங்கியவர் தாராளவாதியான பிரான்சிஸ் ஹட்ஜ்சஸன் (Francis Hutcheson) என்பவரே. கிளாஸ்கோவில் மூன்று வருடங்கள் கழித்த ஸ்மித் பின்னர் ஆறாண்டு புலமைப்பரிசில் பெற்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அங்கு அவரது வாழ்க்கை சந்தோஷமாகக் கழியவில்லை. எடின்பர்க்குக்குத் திரும்பிய ஸ்மித்துக்குச் சீக்கிரமே ஆங்கில இலக்கிய விரிவுரையாளர் பதவி கிடைத்தது. அவர் தமது விரிவுரைகளின் போது சில முரண்பாடான கருத்துக்களை முன்வைத்தார். எனினும் அவரது விரிவுரைகள் அவருக்குப் புகழைத் தேடித்தந்தன. 1751 இல் தர்க்கவியல் விரிவுரையாளராக அவர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் நியமனம் பெற்றார். அடுத்த வருடமே ஒழுக்க மெய்யியற் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இந்தப் பின்னணியைக் கொண்டுதான் அடம் ஸ்மித் அரசியல் பொருளாதாரத் துறையில் ஈடுபட்டார். ஒழுக்கவியல் தொடர்பான அவரது நூல் "Theory of Moral Sentiments" (1759) அவரது பெருமைக்குச் சான்றாக அமைந்தது. 1764இல் அவர் டுலஸ்சில் "தேசங்களின் செல்வம்" (Wealth of Nations) என்ற நூலினை எழுதத் தொடங்கினார். அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்ட ஆண்டான 1776 இல் பொருளாதாரத் தாரண்மை வாதத்தின் முதல் நூலாக இது வெளிவந்தது. இதனைத் தற்செயலான நிகழ்ச்சியாகக் கருதக் கூடாது. இந்த இரண்டு புகழ் பூத்த ஆவணங்களுக்கும் ஒரேவிதமான சக்திகளே வழிவகுத்தன.

எட்மண்ட் பேர்க் (Edmund Burke) இந்நூலைப் பெற்றுப் பின்வருமாறு எழுதினார். "பின் வந்த விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இதுவரை எழுதப்பட்ட நூல்களிற் தேசங்களின் செல்வம் மிகவும் முக்கியமான நூலாகும்." பேர்க்கின் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அடம் ஸ்மித் சமகாலப் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களைப் பற்றி மிக முக்கியமான அவதானங்களைச் செய்திருந்த போதும் உண்மையில் அவர் வரப்போகும் ஒரு தாராண்மைவாதக் கனவுலகம் பற்றிய பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார் என்றே கூறலாம். அவரது கருத்துக்கள் சில நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் முழுமையாக எங்கும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்று அடம் ஸ்மித்தின் கொள்கைகளிலிருந்து உலகம் வெகுதூரம் சென்று விட்டது.

## ஸ்மித்தின் பொருளியலின் பிரதான அம்சங்கள்

ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு அதிகரிக்கின்றது, எவ்வாறு பகிரப்படுகிறது என்பதைத் தேசங்களின் செல்வம் விளக்க முயல்கிறது. நவீன பொருளியலின் அடிப்படை விடயங்கள் இவையே. செல்வத்தின் ஒரேயொரு மூலம் ஊழியம் மற்றும் வளங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியே என அவர் கூறினார். நாட்டின் செல்வம் ஏற்றுமதி மிகையிலிருந்தே உருவாகிறது என்னும் வர்த்தகவாத நோக்கினை அவர் ஏற்கவில்லை. ஊழியத்தின் திறன், அது பிரயோகப்படுத்தப்படும் வினைத்திறன், மக்கள் தொகையில் ஊழியத்தின் விகிதம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே செல்வம் அதிகரிக்கும் என அவர் கூறினார். ஒரு சராசரி நபருடைய பொருளாதார நலன் மக்கள் தொகைக்கும் மொத்த உற்பத்திக்குமுள்ள தொடர்பிற் தங்கியுள்ளது. இதனையே இன்று நாம் தலா மெய்வருமானம் எனக் கூறுகிறோம்.

இன்று அடம் ஸ்மித்தின் கருத்துக்கள் மரபு சார்ந்த சாதாரண கருத்துக்களாகத் தோன்றினாலும் அவர் அவற்றை எழுதிய அக்காலத்தில் அவை அசாதாரணக் கருத்துக்களாகவே இருந்தன. உற்பத்தி பெருகுவதற்கான அடிப்படை தொழிற் பிரிப்பும், யந்திர பாவனையுமாகும் என ஸ்மித் குறிப்பிட்டார். அவரது பிரசித்தி வாய்ந்த உதாரணமான குண்டூசித் தயாரிப்பில் சிறப்புத் தேர்ச்சி ஒரு தொழிலாளியின் வெளியீட்டைப் பெருக்குவதற்கு ஒரு சிறந்த மாதிரியாகும். ஆனால் சிறப்புத் தேர்ச்சியின் பிரயோகம் சந்தையின் விரிவாக்கத்தில் தங்கியுள்ளது. ஏனெனில் பெருந்தொகை உற்பத்தி முழுவதையும் ஒரு சிறு சமூகத்தில் சந்தைப்படுத்தி விட முடியாது. போக்குவரத்து விருத்தி, சந்தை விரிவு போன்றவை வர்த்தகத்தையும், கைத்தொழிலையும் விருத்தி செய்யும் என ஸ்மித் அன்றே சரியாகக் குறிப்பிட்டார்.

தொழில்களின் பன்முகத் தன்மையானது வித்தியாசமான திறமைகளின் காரணமாக உருவாகிறது என பிளேட்டோ குறிப்பிட்டார். ஆனால் தொழில்களின் பன்முகத்தன்மை காரணமாகவே வித்தியாசமான திறமைகள் உருவாகின்றன என ஸ்மித் குறிப்பிட்டார். இவ்வாறு உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி என்பது மனிதனுக்கு இயற்கையாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டமாற்று வர்த்தக மனப்பான்மை காரணமாகவே ஏற்படுகிறது எனவும் ஸ்மித் குறிப்பிடுகிறார். உயிரினங்களில் மனிதனில் மட்டுமே இக்குணம் காணப்படுகிறது. "ஒரு நாய் இன்னொரு நாயிடம் எலும்புத் துண்டு ஒன்றினைப் பண்டமாற்றுச் செய்வதில்லை", என அவர் விவரித்தார்.

சந்தைகள் எவ்வாறு இயங்குகின்றன எனவும் அவர் சிந்தித்தார். ஒரு பொருளின் உண்மையான அல்லது இயற்கையான பெறுமதி என்பது அதனை உருவாக்குவதற்குச் செலவழிக்கப்பட்ட உழைப்பின் அடிப் படையில் மதிப்பிடப்பட வேண்டும் என அவர் கூறினார். பயனுள்ளது என்று கருதினாலே தவிர எவரும் ஒரு பொருளை உருவாக்கத் துணிய மாட்டார்கள். ஒருவர் எதனையும் வாங்க விரும்பினால் அப்பொருளின் விலையானது தான் அதனை உருவாக்குவதற்கு ஏற்படும் செலவினைவிடக் குறைந்திருந்தால் மட்டுமே அதனைக் கொள்வனவு செய்வார். அதனை வாங்குவதற்குப் பதிலாக அவர் ஏதேனும் விற்பவருக்கு வழங்குதல் வேண்டும். அதனைப் பெறுபவர் தானே அதனை உருவாக்குவதற்கு ஏற்படும் செலவைவிட (உழைப்பின் அடிப்படையில்) குறைவாக இருந்தால் மாத்திரமே அதனை பெற்றுக் கொள்வார். இந்நிலைமை சிறப்புத் தேர்ச்சி மற்றும் வர்த்தகத்தின் மூலம் ஏற்படும் பரஸ்பர நன்மைக்கு வழிவிட்டது. ஒன்றின் இயற்கையான பெறுமதி அதனை உருவாக்குவதற்குத் தேவைப்படும் நேரத்தின் அளவில் மாத்திரம் அல்லாது உழைப்பின் அளவு, உழைப்புத்திறனைப் பெறுவதற்கான கல்வி அல்லது பயிற்சி என்பவற்றிலும் தங்கியுள்ளது.

ஆனால் பணப்புழக்கத்தைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தில் பண்டங்களின் சந்தை விலை (அல்லது பெயரளவு பெறுமதி) எப்போதும் அதன் உண்மையான பெறுமதிக்குச் சமமாக இருப்பதில்லை. ஒரு பொருளின் காத்திரமான கேள்வி என்பது (அதாவது அதனைக் கொள்வனவு செய்வதற்குள்ள அவா மட்டுமல்ல ஆனால் அந்த அவாவை நிறைவேற்றுவதற்கான விருப்பம், பணம் கொடுப்பதற்கான ஆற்றலும்) சில சமயங்களில் அதனுடைய வழங்கலை விட அதிகமாக இருக்கும். இந்நிலைமையானது விலைகளை உயர்த்துவதால் உற்பத்தியாளருக்குக் கூடிய நன்மைகள் கிடைக்கும். ஆனால் இத் தொழிலில் ஏற்படும் நன்மையானது பிறரையும் இந்தத் தொழிலில் ஈடுபடவைக்கும். ஏனைய தொழில்களில் உள்ள உழைப்பும் மூலதனமும் இத்தொழிலை நோக்கி நகரும். இந்நிலைமை அப்பொருளின் விலையைக் குறைக்கும், சிலவேளை அதன் உண்மையான பெறுமதியைவிடக் குறைக்கும். ஒரு குறிப்பிட்ட விலையில் கேள்வியும் நிரம்பலும் சமநிலை அடையும் போது அவ்விலை இயற்கையானதாகும். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒரு திறந்த சந்தையில் நன்மை அடைவர். ஆகக் குறைந்த முடியுமான விலையில் ஒவ்வொருவரும் தமக்கு மிகவும் விருப்பமானதைப் பெறமுடிவதால் இது முடிகிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் தமக்குச் சிறப்பாக முடியுமானதையே செய்வர்; உற்பத்தி வளங்கள் நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்தப்படும்.

ஒரு உற்பத்திப் பொருள் ஆகக் கூடிய பெறுமதி உள்ளதாக இருக்கும் வகையிலேயே ஒரு கைத்தொழிலாளன் தனது தொழிலை இயக்குகிறான். "அவன் தனது சொந்த நன்மையையே நோக்குகிறான். ஆனால் தனது நோக்கத்துடன் தொடர்பற்ற ஒன்றை மேம்படுத்த அவன் ஒரு மறைகரத்தினால் வழிநடத்தப்படுகிறான். தனது நன்மையை மேம்படுத்த முயலும் போது அவன் சமூகத்தின் நன்மையையும் காத்திரமாக மேம்படுத்துகிறான். உண்மையில் சமூகத்தின் நன்மையைக் கருதிச் செயற்படுவதை விட இது காத்திரமானதாகும்."

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஸ்மித் பின்வருமாறு எழுதுகிறார். "சகல முறைமைகளும் விரும்பியோ விரும்பாமலோ நீங்கி விட எளிய முறைமையான இயற்கைச் சுதந்திரம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்கிறது." ஸ்மித் குறிப்பிட்ட சமூக நன்மையை அடிப்படையாகக் கொண்ட சுய முயற்சி, நன்மைதரும் மறைகரம் மற்றும் எளிய முறைமையான இயற்கைச் சுதந்திரம் (System of Natural Liberty) ஆகியவையே 1776 முதல் இன்றுவரை தனியார் துறையின் ஆதரவாளர் முன்வைக்கும் கருத்துக்களாகும்.

## உற்பத்தியின் பங்கீடு

ஸ்மித்தின் கருத்துப்படி உற்பத்திக்கும் பங்கீட்டிற்கும் பணம் வழங்கப்படும் பிரதான வழிகள் ஊதியம், பணம் வாடகை என்பவைகளாகும். இவற்றில் உண்மையில் என்ன நடக்கின்றது என்பது பற்றிய அவரது அவதானங்கள் ஒரு புறத்தில் முதலாளித்துவத்தை ஆதரித்த பொழுதிலும் 'இயற்கைச் சுதந்திரம்' என்னும் "எளிய முறைமையின்" பாரதூரமான குறைபாடுகள் சிலவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தின.

செல்வத்தை அதிகரிக்கும் இயந்திரங்களிலிருந்து நன்மையைப் பெறவேண்டுமெனின் ஒருவர் தனது பணத்தைச் சேமித்து முதலீடு செய்ய வேண்டும். இதனை நாம் மூலதனம் என்கிறோம். இதற்கு நுகர்வோர் பயனைத் தரவேண்டும். இவ்வாறு ஊதியம் பெறும் தொழிலாளி தான் உற்பத்தி செய்யும் பொருளில் முழுமையான இயற்கைப் பெறுமதியை அடைய முடியாது. ஏனெனில் விலையின் ஒரு பகுதி இலாபத்துக்காக ஒதுக்கப்பட வேண்டும். இலாபம் என்பது ஓர் அத்தியாவசியமான உற்பத்திச் செலவாகும். ஒரு நாட்டில் கூடிய மூலதனம் இருக்கும் பொழுது அதன் ஊதியமும் கூடுதலாகக் காணப்படும். மூலதனத் திரட்சியின் காரணமாக ஒரு நாட்டின் உற்பத்தித் திறன் கூடும். பல உண்மைகள் இக்கூற்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக இருந்தன. இங்கிலாந்தில் கைத்தொழில் வளர்ச்சியடைந்த காரணத்தினால் மெய் ஊதியம் அதிகரித்ததை ஸ்மித் கண்டறிந்தார். அதேபோல இந்தியா அல்லது சீனாவில் குறைந்த வாழ்க்கைத் தரத்துக்கும் கைத்தொழில் வளர்ச்சியின்மைக்கும் ஒரு தொடர்பு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஆனால் தொழில்களைப் பெறுவதற்காகத் தொழிலாளரிடையே ஏற்படும் போட்டி காரணமாக ஊதியம் எப்போதுமே உயர்வாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஸ்மித்தின் கருத்துப்படி ஊதியத்தின் கீழ் எல்லை ஆகக் குறைந்த வாழ்க்கைச் செலவுக்கு ஈடானதாக இருக்க வேண்டும். ஏனெனில் ஊதியமானது இதற்குக் கீழ் குறைந்தால் தொழிலாளர் மடிந்து விடுவர். வட அமெரிக்கக் குடியேற்றங்களில் அதற்குக் காரணங்களாகத் தொழிலாளர் அருமையும் தேசிய செல்வத்தில் தீவிர அதிகரிப்பு ஏற்பட்டதையும் அவர் சரியாக சுட்டிக் காட்டினார். ஏனைய விலைகளைப் போலவே ஊதியமும் கேள்வி, நிரம்பல் விதிக்கு உட்பட்டதேயாகும்.

ஏழைகள் அசாதாரணமான உயர் பிறப்பு வீதத்தையும் அதேபோல உயர் சிசு மரண வீதத்தையும் கொண்டுள்ளனர் என ஸ்மித் குறிப்பிட்டார். இவ்வுண்மை பின்னர் பல புள்ளிவிபர ஆய்வுகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேங்கிய பொருளாதாரங்களில் உயர் பிறப்பு வீதமும் ஊழிய வளங்களும் ஒன்று சேர்ந்து ஊதியத்தைக் குறைந்த வாழ்க்கைச் செலவு மட்டத்திலேயே வைத்திருக்கின்றன.பின்தங்கிய பொருளாதாரங்களில் இது இன்னும் கீழே செல்கின்றது. விருத்தி பெற்றுள்ள பொருளாதாரத்தில் ஊதியம் உயர்வடையும் நிலை காணப்படுகிறது. அதாவது உற்பத்தியாற்றலானது சனத்தொகை வளர்ச்சியை மேவி நிற்கிறது. மறுதலையாகப் பார்க்கும் போது பணக்காரர்களின் செல்வ நிலையானது குறைந்த பிறப்பு வீதத்தை ஏற்படுத்துகிறது. அதனால் செல்வமானது அவர்களிடமே குவிந்து கிடக்கிறது.

வேலை வழங்குபவர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் பேரம் பேசும் சக்தியில் சமமின்மை காணப்படுவதாகவும் ஸ்மித் குறிப்பிட்டார். "உழைப்பாளரின் ஊதியத்தை உண்மையான விகிதத்தை விட உயர்த்தக் கூடாது என்பதிற் சகல இடங்களிலுமுள்ள சகல முதலாளிகளுக்குமிடையில் ஒரு நிலையான ஒற்றுமை காணப்படுகிறது," என அவர் குறிப்பிட்டார். இவ்வாறான ஒற்றுமை பகிரங்கமாகத் தெரிவதில்லை. ஆனால் உழைப்பாளர் ஊதிய உயர்வு கோரி ஒற்றுமைப்பட்டால் அல்லது ஊதியக் குறைப்புக்கு எதிராக ஒன்றுபட்டால் அது வன்முறையின் மூலம் ஒடுக்கப்பட்டு விடுகிறது. ஒவ்வொரு நாடும் மூலதனத்தைத் திரட்டும் போது இலாப விகிதம் குறைவடையும். ஏனெனில் கூடிய மூலதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது கூடிய கைத்தொழிற் போட்டியைக் குறிக்கும். பின்தங்கிய சமூகங்களிற் கூடிய செல்வநிலை அல்லது வறுமைநிலை தெளிவாக வெளித்தெரியும். தனது இயற்கைச் சுதந்திர முறைமையின் ஒரு நிபந்தனையாகப் போட்டி இருக்க வேண்டுமென ஸ்மித் உணர்ந்தே இருந்தார். அவர் தனியுரிமையை எதிர்த்தார். ஆனால் கால்வாய் கட்டுமானத்தில் தனியுரிமை இல்லாது விடின் விரயமே ஏற்படும் என்பதனால் அதை அவர் எதிர்க்கவில்லை. தனியுரிமை பற்றிப் பின்வருமாறு அவர் எழுதினார்: "தனியுரிமை என்பது சிறந்த முகாமைத்துவத்தின் எதிரியாகும். சர்வதேச ரீதியாக அதனை ஒருபோதும் ஸ்தாபிக்க முடியாது. ஆனால் சுதந்திரமான முழுமையான போட்டி முறைமையில் ஒவ்வொருவருக்கும் காப்புரிமையும் சுயபாதுகாப்பும் உள்ளது.

வாடகை என்பது உண்மையில் ஒரு தனியுரிமை விலை என ஸ்மித் வாதித்தார். சிறப்பான நிலத்தின் அளவு வரையறை கொண்டது. அதனை உடைமையாகக் கொண்டிருப்போர் நுகர்வோரிடமிருந்து ஒரு கொடுப்பனவைப் பெறமுடியும். அக்கொடுப்பனவானது ஊழியத்துக் காகவோ அல்லது மூலதனத்துக்காகவோ அல்ல. உயர்வான வாடகை என்பது உண்மையில் உயரிய தேசிய செல்வத்தின் அல்லது உயர்ந்த ஊதியத்தின் பெறுபேறாகும். வாடகை பற்றிய தமது பகுப்பாய்வில் ஸ்மித் ஈட்டப்பெறாத பெருக்கம் (unearn increment) என்னும் முக்கியமான கோட்பாட்டைத் தழுவி நிற்கிறார். அதில் கைத்தொழில் உற்பத்தியாளரின் உணர்வுகளையே அவர் பிரதிபலிக்கிறார், மானிய முறைமையின் அல்லது நில உடைமையாளர்களின் உணர்வுகளை அல்ல.

அடம் ஸ்மித் பணம் மற்றும் வட்டி பற்றியும் பல விடயங்களைக் கூறினார். ஆனால் மிகவும் தொழில் நுட்பம் நிறைந்த இவ்விடயத்தில் அவருடைய பங்களிப்புக் குறிப்பிடக் கூடியதல்ல. பெருந்தொகையான பணம் பொது விலை மட்டத்தை உயர்த்துகிறது என்னும் கருத்தை அவரும் ஏற்றுக் கொண்டார். பணம் ஒரு பரிமாற்ற ஊடகம் என்றளவில் பயனுடையது என அவர் கருதினார். கடன்களுக்கு வட்டி அறவிடுதலை அவர் எதிர்க்கவில்லை. சேமிப்பு உயர்வாக இருக்கும் பொழுது வட்டி குறைவாக இருக்கும் என அவர் எண்ணினார். அதே நேரத்தில் பணத்தின் திரட்சியை விட அதற்கான கேள்வி கூடும் பொழுது வட்டி உயர்வாக இருக்கும்.

## முன்னைய கோட்பாடுகளுடன் உள்ள வேறுபாடுகள்

அடம் ஸ்மித்தின் நூலின் மிக முக்கியமான அம்சம் வர்த்தகவாதக் கோட்பாடுகளுக்கெதிரான அவரது விமர்சனங்களாகும். போட்டித் தன்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த வர்த்தகம், சிறப்புத் தேர்ச்சி ஆகியவை ஒரு நாட்டினுள் விரும்பப்படும் அம்சங்களாயின் அவை சகல நாடுகளினாலும் விரும்பப்படக் கூடியவையே. எந்த ஒரு நாடும் வேறு இடங்களிலிருந்து மலிவாகப் பெறக்கூடிய ஒரு பொருளைத் தான் உற்பத்தி செய்வதன் மூலம் நன்மையடைய முடியாது. தீர்வைகள் மற்றும் மானியங்களின் நோக்கம் இவ்வாறானவற்றைத் தவிப்பதற்கேயாகும். இவைகள் இல்லாத பட்சத்தில் ஒவ்வொரு நாடும் தனக்கு மிகவும் வாய்ப்பான உற்பத்தி வகைகளில் இயல்பாகவே சிறப்புத் தேர்ச்சியை அடையும். எவ்வாறாயினும் அதனுடைய சொந்த உற்பத்தியே அதனுடைய செலவத்தின் மூலமாகும். அத்துடன் தன்னிடமிருக்கும் ஊழியத்தின் அடிப்படையில் அது எவ்வளவு உற்பத்தியை மேற்கொள்கிறதோ அந்த அளவு செல்வத்தையும், பெறும். சர்வதேச வர்த்தகத்தைப் பாதிக்கும் தனியுரிமைகள் விரும்பத்தகாதவை. அதேபோல உள்நாட்டில் உள்ள தனியுரிமைகளும் விரும்பத் தகாதவைகளே.

ஒரு நடைமுறையான ஆங்கிலேயன் என்ற அடிப்படையில் ஸ்மித் விதி விலக்குகளை ஏற்றுக் கொண்டார். இராணுவப் பாதுகாப்பு நோக்கங்களுக்காகப் பிரித்தானிய கப்பற் சேவையை விருத்தி செய்வது விரும்பத்தக்கதாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளின் உற்பத்திச் செலவு விசேட வரியினால் அதிகரிக்கும் பொழுது போட்டியைச் சமநிலைப்படுத்தும் பொருட்டு உற்பத்தி செய்யப்படும் அதே பொருளுக்குத் தீர்வைகள் விதிக்கப்படவும் வேண்டும். பேரம் பேசும் நோக்கங்களுக்காகவும் தீர்வைகள் பயன்படுத்தப்படலாம். தீர்வைகளை உடனடியாக விதிப்பதாற் பல சிரமங்கள் ஏற்படுமெனில் தீர்வைகள் படிப்படியாக விதிக்கப்படலாம்.

வர்த்தக வாதத்துக்கு எதிராக ஸ்மித்தின் முக்கிய குற்றச்சாட்டு என்னவெனின் அது நுகர்வோரின் நலன்களை உற்பத்தியாளரின் நலன்களுக்குப் பலி கொடுக்கிறதென்பதாகும். "சகல உற்பத்தியின் நோக்கமும் இறுதி முடிவும் நுகர்வேயாகும்".

இயலாட்சியுடன் ஸ்மித் பல பொதுத் தன்மைகளைக் கொண்டிருந்தார். ஆனால் அது கோல்பேர்ட் வாதத்திற்கு எதிரான அநாவசியமான எதிர்வினை என விமர்ச்சித்தார். "பாதையின் ஒருபுறம் அதிகமாக வளைந்திருந்தால் அதனை நேராக்க அதே அளவுக்கு மறுபுறத்தே வளைக்க வேண்டும்". என்னும் பழமொழியை அவர் சுட்டிக்காட்டினார். விவசாயத்தை விவசாயத்தின் ஒரேயொரு மூலமாகக் காட்டுவதன் மூலம் இயலாட்சியாளர்கள் இதைத்தான் செய்தார்கள். விவசாயம் மிகவும் முக்கியமானது என்பதை ஸ்மித் ஏற்றுக்கொண்டார். ஆனால் விவசாயத்தைப் போலவே கைத்தொழிலும் வர்த்தகமும் கூட உற்பத்தித் திறன் மிக்கவை என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டார். (ஆச்சரியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில், தனிப்பட்ட வேலைக்காரர்கள், நடிகர்கள், கலைஞர்கள் மதகுருமார்கள் முதலிய சேவையாளர்கள் உற்பத்தித் திறனற்றவர்கள் என்பதை அவர் நம்பினார்.)

கைத்தொழிலுக்கு எதிராக விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்று வாதிப்பதன் மூலம் "இயற்கைச் சுதந்திரத்தில்" "கெஸ்னே" கடுமையான பார்வையைக் கொண்டிருந்தார் என ஸ்மித் கருதினார். அரசாங்கத்தின் நடிபங்கு பற்றி அல்லது அவரது வார்த்தைகளில் கூறுவதானால் 'இறைமை அல்லது பொதுநலத்தின்' நடிபங்கு பற்றி அடம்ஸ்மித் கொண்டிருந்த கருத்து மிக எளிமையானது. அரசாங்கமானது தேசிய பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யும் பொழுது ஆயுதப் படைகளைத் தாங்கி நிற்கின்ற பொருளாதாரம் பற்றிப் பொறுப்பையும் கொண்டிருக்க வேண்டும். இராணுவ பலத்தின் அடிப்படையானது கைத்தொழிலாகும். ஆயுதங்கள் மேலும் மேலும் விருத்தியடைந்து செலவு மிக்கதாக மாறும் பொழுது மேலும் மேலும் கைத்தொழில் முக்கியம் பெறுகிறது.

அரசாங்கம் நீதி வழங்க வேண்டும். ஆனால் ஒரு சுதந்திரமான ஒரு நீதியமைப்பு இருக்க வேண்டும். பொதுச் சேவைகளுக்கான செலவுகளை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். ஆனால் எல்லாரது நன்மைக்காகவும் வரி விதிப்பின் மூலம் சொந்தக்காலில் நிற்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அரசாங்கமானது பொதுவாக வெளிநாட்டு வர்த்தகத்தைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் தனியுரிமையை ஆதரிக்கக் கூடாது. அல்லது ஆயுதப் பாதுகாப்பைச் சில நலன்களுக்காக அதிகாரப்பகிர்வு செய்யவும் கூடாது. பிரித்தானியர் கிழக்கிந்தியக் கம்பனி விடயத்தில் இவ்வாறு ஆயுதப் பாதுகாப்புப் பகிர்வினைச் செய்தது. அரசாங்கமானது பொதுமக்களின் நன்மைக்காக ஆரம்பப் பாடசாலைகளுக்கு மானியம் வழங்க வேண்டும். முடியுரிமையின் கௌரவத்தைப் பேண வேண்டும். அதற்கான செலவுகளை அரசாங்கம் வழங்க வேண்டும்.

இவ்வாறான செலவுகளுக்காக மக்களிடம் வரிகள் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் "அத்தகைய வரிகள் அரசின் பாதுகாப்பின் கீழ் மக்கள் பெறும் வருமானத்தின் விகிதத்துக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்". வருமான வரியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். "வரி செலுத்துவதற்கான நேரம், செலுத்தும் விதம், செலுத்தும் அளவு ஆகியவை எல்லாருக்கும் தெளிவாகத் தெரிய வேண்டும்". இவ்வாறு அமையாவிட்டால் அது அநீதிக்கு வழிவகுக்கும். வரிவிதிப்பானது அது கொண்டு வரும் வருமானத்துக்கு மேலாக வரி இறுப்பாளர்கள் செலுத்த வேண்டி இருக்கக் கூடாது. வர்த்தகம், கைத்தொழில் போன்றவற்றை மழுங்கச் செய்யும் வரிகள் இத்தகையனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருளியலில் அடம்ஸ்மித்தின் செல்வாக்கு மிகப் பெரியது. எனினும் அடுத்த பரம்பரையைச் சார்ந்த தோமஸ் றொபேட் மல்த்தூஸின் செல்வாக்கு அதற்குச் சமனானது எனக் கொள்ள முடியும். தேசங்களின் செல்வம் ஸ்மித்தினால் வெளியிடப்படுவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் 1766 இல் பிறந்த மல்த்தூஸ் 1834 இல் இறந்தார். அவரது ஆரம்ப வாழ்க்கையில் நெருக்கடிகளும், பிரச்சினைகளும் நிறைந்திருந்தன. 1798இல் மல்த்தூஸ் தனது பெயரில்லாமல் வெளியிட்ட "குடித்தொகைத் தத்துவங்கள்" (The Principle of Population) என்னும் கட்டுரை தீவிர வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்தது. மல்த்தூஸின் கோட்பாடு மிகவும் எளிமையானது. அதாவது சனத்தொகையானது கேத்திரகணித ரீதியாகப் பெருகும் போது உணவுற்பத்தி அவ்வாறில்லாமல் எண்கணித ரீதியாகவே பெருகுகிறது. வரலாற்று ரீதியாகச் சனத்தொகைப் பெருக்கமானது போர், நோய், பஞ்சத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு மட்டத்துக்கு மேலாக உண்மையான ஊதியம் உயர முடியாது. ஏனெனில் இவ்வாறு உயர்ந்தால் ஊழியர்களின் வழங்கலும் அதிகரிக்கும். ஊதியம் இந்த மட்டத்துக்கும் கீழே விழுந்தால் ஊழிய மிகையானது மரணத்தின் காரணமாக வீழ்ச்சியடையும். இக்கருத்து "ஊதியத்தின் இரும்புச் சட்டம்" எனப்பட்டது. ஸ்மித்தைப் போல மல்த்தூசும் அமெரிக்காவிலுள்ள கூடிய ஊதியத்தை அவதானித்தார். ஆனால் அதன் காரணம் அமெரிக்காவில் தலைக்குரிய நிலம் உயர்வாகக் காணப்பட்டமையே என அவர் எண்ணினார். அமெரிக்காவில் சனத்தொகை வேகமாக வளர்ச்சி அடைந்தது. ஆனால் அது பிறப்பு வீதத்தினாலன்றி குடிவரவாலேயே ஏற்பட்டது. மல்த்தூஸ் தன்னுடைய கோட்பாட்டை நிறுவுவதிற் கவனம் செலுத்தியபோதும் குறைந்து செல்லும் பயன் 'விதி'யைப் பொதுப் பொருளியற் கோட்பாட்டுக்கு வழங்கியவரும் அவரே. இவ்விதியை நிலம் தொடர்பாகவே மல்த்தூஸ் முன்வைத்தார். அதாவது நிலத்தில் ஊழியத்தையும் உரத்தையும் கூட்டும் போது முதலில் விளைச்சல் பெருகும். ஆனால் ஒரு நிலைமைக்கு மேல் இது சாத்தியப்படாது. அதாவது உள்ளீட்டைக் கூட்டும் விகிதத்துக்கு ஏற்ப விளைச்சலைக் கூட்ட முடியாது. தொடர்ச்சியாகக் கூட்டும் போது விளைச்சல் குறைவடையும். இவ்விதியானது பின்னர் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. மல்த்தூஸின் பகுப்பாய்வின் தர்க்கமானது சமூக சிந்தனைகளைப் பெரிதும் பாதித்தது. மேற்குலகைப் பொறுத்த வரையில் அவரது எதிர்வு கூறல்கள் வெற்றியடைவில்லை. ஏனெனில் விவசாய, கைத்தொழிற் திறன் மிக வேகமாக வளர்ச்சி பெற்றது. இதனை மல்த்தூஸ் எதிர்பார்க்கவில்லை. அத்துடன் பிறப்பு வீத வீழ்ச்சியினால் சனத் தொகையிலும் சில இடங்களில் வீழ்ச்சி ஏற்பட்டது.

ஸ்மித்துக்கும், மல்த்தூசுக்கும் பின்னர் வந்த பொருளியலாளர்களில் தொழில்சார் பொருளியலாளர்களினால் பெரிதும் விதந்துரைக்கப்பட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிக்காடோ (Ricardo) என்பவர். றிக்காடோ தெளிவான சிந்தனையுடன் தனது கருத்துக்களைத் தர்க்கரீதியாக முன்வைத்தார். தன்னுடைய எழுத்துக்களில் யதார்த்த வாழ்க்கையில் உள்ள எளிய உதாரணங்களை அவர் கையாளவில்லை. அவரது எழுத்துக்கள் ஸ்மித்துடையதைப் போன்று வாசிப்பதற்குச் சுவையாக இல்லாது விட்டாலும் அவரது கருத்துக்கள் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தின.

றிக்காடோ ஸ்பானிய யூத இனத்தைச் சேர்ந்தவர். தனது தந்தையின் லண்டன் நிறுவனத்தில் பங்கு வியாபாரத்தைக் கற்றார். வங்கிக் கோட்பாடுகள், வெளிநாட்டு நாணய மாற்றம், நிதி ஆகியவற்றை அவர் கற்றார். தனது திருமணத்தின் காரணமாக மதம் மாறியதால் றிக்காடோ தனது தந்தையின் வெறுப்பைப் பெற்றுக் கொண்டார். சொந்த நிறுவனத்தைத் தொடங்கிய அவர் சீக்கிரமே பெரிய செல்வந்தரானார். தனது முப்பத்தைந்தாவது வயதில் பெரிய செல்வந்தனாக மாறினார். அதன் பின்னர் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அவர் கற்கத் தொடங்கினார்.

"தேசங்களின் செல்வம்" என்ற நூலை வாசித்தத்தைத் தொடர்ந்து அரசியற் பொருளியற் கோட்பாடுகளை விருத்தி செய்வதில் அவர் ஆர்வம் காட்டினார். அவருடைய வாடகைக் கோட்பாடு பிரசித்தி பெற்றது. எனினும் றிக்காடோ தன்னளவில் ஒரு பெரும் நிலச்சுவாந்தாராக இருந்தார். அத்துடன் பொதுச் சபை அங்கத்தவராகவும் அவர் வீற்றிருந்தார்.

## கோட்பாட்டுக்கு றிக்காடோவின் பங்களிப்பு

அவருடைய நூலான "வரிவிதிப்பு மற்றும் அரசியற் பொருளாதாரத் தத்துவங்கள்" (The Principles of Political Economy and Taxation), 1817 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட்து. இந்நூலிற் பிரதானமாகச் செல்வத்தின் பங்கீடு பற்றி றிக்காடோ கவனம் செலுத்துகிறார். இவ்விடயம் பற்றி ஸ்மித்தோ அல்லது மல்த்தூசோ திருப்திகரமாக விளக்கவில்லை என அவர் எண்ணினார்.

வாடகை என்பது ஒரு தனியுரிமை விலை என ஸ்மித் கூறினார். இதனை ஏற்றுக்கொண்ட றிக்காடோ இக்கருத்தினை மேலும் விளக்க முனைந்தார். நிலமானது காற்றைப் போல வரையறுக்கப்படாது இருந்தால் அது ஒரு "இலவசப் பண்டமாக" இருக்கும். ஆரம்பத்தில் நிலம் இவ்வாறுதான் இருந்தது என அவர் நம்பினார். ஆரம்ப விவசாயிகள் சிறந்த நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு சிறந்த நிலம் முடிவடைந்த பின்னர் அதிகளவு செழிப்பில்லாத நிலத்தை மற்றவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாகச் சிறந்த நிலத்துக்கு விலை ஏற்படுகிறது. இச்செயன் முறை காரணமாகக் குறைந்த வளம் கொண்ட நிலத்துக்கும் விலை மதிப்பு ஏற்படும் நிலை தோன்றுகிறது.

ஆகக் குறைந்த வளம் கொண்ட நிலமானது அதில் உழைக்கும் ஊழியத்திற்குத் தேவைப்படும் ஊதியத்தையேனும் தந்தால் மாத்திரமே செய்கைக்கு உட்படுத்தப்படும். எனவே சிறந்த நிலத்துக்கான வாடகை ஊழியத்துக்கான கொடுப்பனவாக இல்லாது ஓர் அரிதான இயற்கை வளத்தின் மீது உரிமைக்காக வழங்கப்படும் கொடுப்பனவாக அமையும். றிக்காடோ இந்தக் கொடுப்பனவை வாடகை எனக் குறிப்பிட்டார். இந்த வாடகை உழைப்பினாற் பெறப்பட்டதல்ல. 'எல்லை' நிலம் (marginal land) பற்றிய எண்ணக்கருவை முன்வைக்க றிக்காடோ முயன்றபோதும் பின்னர் பெறுமதி மற்றும் விலைகள் பற்றிய கோட்பாடுகளிற் பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு பகுப்பாய்வுக் கருவியை உருவாக்கி விட்டார்.

மல்த்துரஸின் ஊதியம் பற்றிய இரும்புவிதியை றிக்காடோ பின்னர் முறைமைப்படுத்தினார். ஊதியமானது சீவனோபாயத்தைப் பேணுவதற்குத் தேவையான அளவிலேயே இருக்க வேண்டும். ஏனெனில் ஊதியச் சந்தையின் கேள்வி நிரம்பற் கோட்பாட்டின் படி கூடிய ஊதியம் ஊழியத்தின் வழங்கலை அதிகரிக்கும்; குறைந்த ஊதியம் அதனைக் குறைக்கும். ஆனால் றிக்காடோ இன்னும் ஒரு படி மேலே சென்று சீவனோபாயச் செலவைப் பகுப்பாய்வு செய்தார். சீவனோபாயம் உணவு விலைகளிலும் ஏனைய பண்ணை விளை பொருட்களிலும் தங்கியுள்ளது. விளை பொருட்களில் உயர் விலையான்து உயர் ஊதியத்தையும் தோற்றுவிக்கும். விளை பொருட்களின் உயர்விலையானது வாடகை காரணமாக ஏற்படுகிறது. ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரித்து சிறந்த நிலம் முழுவதும் பயன்பாட்டுக்கு உள்ளாகும் போது வாடகையும் உயர்கிறது. றிக்காடோ தலையிடாமையை ஆதரிப்பதில் அடம்ஸ்மித்தையும் மிஞ்சி நின்றார். சகல பாதுகாப்புத் தீர்வைகளையும் கைவிட வேண்டுமென அவர் கூறினார். அவரது வாடகைக் கோட்பாடு 'தானியவரி'களை ஒழிக்க வேண்டும் என்னும் இயக்கத்தை வலுப்படுத்தியது. தானிய வரி இங்கிலாந்தின் விவசாயத்தைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. பின்னர் இவ்வரி நீக்கப்பட்டது. தானியவரி நீக்கப்பட்டதன் காரணமாகவே பிரித்தானியா வெளிநாட்டு வர்த்தகத்திலும் தயாரிப்புத் தொழிலிலும் முன்னணி வகித்தது. அவருடைய விலைகள் மற்றும் ஊதியம் பற்றிய கோட்பாட்டில் கார்ள்மாக்சின் ஊழியச் சுரண்டல் பற்றிய கோட்பாட்டின் அடிப்படை இருப்பதைப் பின்னர் பார்க்கலாம். எனினும் றிக்காடோவுக்கு இதைப்பற்றித் தெரிந்திருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெரமி பெந்தாமின் பயன்பாட்டு வாதம்

ஜெரமி பெந்தாம் (1748-1832) ஓர் ஆங்கிலேய சமூக மெய்யியலாளர். அடம் ஸ்மித்தைப் போலவே அவரும் தலையிடாக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர். அத்துடன் சோசலிச சிந்தனையின் வளர்ச்சியில் முக்கியமான ஒரு கருத்தை முன் வைத்தார். ஒரு செல்வந்த வழக்கறிஞரின் மகனாகப் பிறந்த ஜெரமி பெந்தாம் சட்டத்தையே பயின்றார். ஆனால் சட்டத்தைத் தனது வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளாமல் மனித நல மேம்பாட்டுக்குத் தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்தார்.

"ஆகக் கூடிய எண்ணிக்கையினருக்கு ஆகக் கூடிய நன்மை" (The greatest good to the greatest number). என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. ஒவ்வொரு சமூக நிறுவனமும் தனி நபர்களின் நன்மையை அதிகரிப்பதில் எந்தளவுக்குப் பயனுள்ளது என்பதின் அடிப்படையிலேயே மதிப்பிடப்பட வேண்டும் என அவர் கூறினார். இதன் காரணமாகவே அவரது கோட்பாடு பயன்பாட்டு வாதம் என அழைக்கப்படுகின்றது. நன்மை என்பது எவ்வாறு அடையாளப்படுத்தப்பட முடியும்? ஒரு நபரின் மகிழ்ச்சியை அதிகரிக்கும் அல்லது வேதனையைக் குறைக்கும் எதுவும், நன்மையெனப்படலாம். எல்லாத் தனிப்பட்ட நன்மைகளினதும் கூட்டு மொத்தம் சமூக மொத்தமெனப்படும். அவரது நோக்கத்துக்கு உறுதியான அர்த்தத்தைப் பெறுவதற்குக் கோடிக்கணக்கான தனி நபர்களின் மகிழ்ச்சியை அல்லது வேதனையை அளவிடுவதற்கு ஒரு வழி இருக்க வேண்டும். இத்தகைய அளவீடு பணம் என ஜெரமி பெந்தாம் கருதினார். பணம் இல்லாமையே துன்பத்துக்குக் காரணம். போதுமான பணம் மகிழ்ச்சியைத் தரும். ஆனால் ஒரு தனிமனிதனுடைய செல்வம் போதுமான மட்டத்துக்கு மேல் அதிகரிக்கும் பொழுது அவரது மகிழ்ச்சியும் விகித சமனாக அதிகரிக்குமெனக் கூற முடியாது. இதே அளவான செல்வம் ஒரு ஏழைக்கு இருக்குமெனின் அதைவிட அதிகமான மகிழ்ச்சியை அது ஏற்படுத்தும். இவ்வாறு பெந்தாமினுடைய தர்க்கம் செல்வத்திற் கூடிய சமத்துவத்தை விரும்புவதற்கு வழி சமைத்தது. இக்கொள்கையையே ஏதோவொரு வழியிற் சோசலிச வாதிகளும் முன்வைத்தனர்.

அடம் ஸ்மித்தின் நம்பிக்கையான இயற்கையின் நன்மை என்பதை நிராகரிப்பதற்கு பெந்தாம் பங்களிப்புச் செய்தார். "இயற்கை உரிமைகள்" என்பது ஒரு மூடத்தனம் என அவர் கூறினார். பயன்பாட்டை உச்சப்படுத்த வேண்டுமெனில் சிறந்த கொள்கையைக் கண்டறியக் காரணகாரியத் தொடர்பு அவசியமானது. பொருளியல் என்பது ஒரு விஞ்ஞானம் மாத்திரமல்ல. அது மனித விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் ஒரு கலையுமாகும். இதனைச் செய்வதற்கு மனிதன் வெறுமனே இயற்கையில் மாத்திரமே தங்கியிருக்க முடியாது. பெந்தாமின் வாதம் அரசு மௌனமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தலைச் சிறந்த கொள்கை என்பதை ஏற்றுக் கொள்வதற்கு வழிவகுத்தாலும் இதுவே வேறு சிலரை அரச தலையீட்டை ஆதரிப்பதற்கு வழிவகுக்கவும் கூடும். அக்காலத்திற் பிரித்தானியாவில் சீர்திருத்தங்களை மேம்படுத்திய 'தீவிர' (Radicals) வாதிகளில் பெந்தாம் முக்கியமானவராக இருந்தார். இச்சீர்திருத்தங்களில் அரசாங்கத் தலையீட்டை அதாவது தொழிலாளர் சங்கத்தைத் தடை செய்தல், பாதுகாப்பு வரி, கத்தோலிக்கர்களுக்கெதிரான பாரபட்சம் போன்ற அரச தலையீடுகளை நீக்கின. அதே நேரத்தில் சகலருக்கும் கல்வி வழங்குதல், வாக்களிக்கும் உரிமை, பொதுச் சுகாதாரம், ஒரு புதிய ஏழைச் சட்டம், 1832 ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் மற்றும் 1835 ஆம் ஆண்டின் மாநகர கூட்டுத்தாபனச் சட்டம் ஆகிய அரசாங்கத் தலையீடுகளை ஊக்குவிக்கவும் செய்தது.

## 3. றொபேட் ஓவன் (Robert Owen)

பிரித்தானிய சோசலிச இயக்கத்தை ஆரம்ப காலத்தில் ஊக்குவித்த நபர்களில் "றொபேட் ஓவன்" மிகவும் முக்கியமானவர். அக்காலத்தில் மிகவும் வெற்றிகரமான கைத்தொழில் உற்பத்தியாளராக றொபேட் ஓவன் (1771 - 1858) விளங்கினார் என்பது விசித்திரமான ஆனால் முக்கியமான உண்மையாகும். றொபேட் ஓவன் வட வேல்ஸ்சில் ஒரு சிறு வர்த்தகக் குடும்பத்திற் பிறந்தார். ஒன்பது வயதில் பாடசாலையை விட்டு நீங்கிய அவர் வாசிப்பதன் மூலம் தனது கல்வியைத் தொடர்ந்தார். 19 வயதில் தனது தந்தையிடம் 500 பவுண் கடன் வாங்கி மான்செஸ்ரரில் தனது சொந்தத் தொழிலை ஆரம்பித்தார். அமெரிக்கப் பருத்தியைப் பயன்படுத்தி வெற்றிகரமான வர்த்தகராக மாறிய முதலாவது பிரித்தானிய ஆலைச் சொந்தக்காரன் இவரே. தனது முப்பதாவது வயதுக்கு முன்னரே கிளாஸ்கோவில் சுமார் 2000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கிய நியுலெனாக் மில் (New Lanark Mills) என்னும் ஆலையை அவர் வாங்கினார்.

ஓவன் ஒரு சிறந்த முகாமையாளர். அவர் நிறைய இலாபத்தைச் சம்பாதித்தார். எனினும் செல்வத்தைத் திரட்டுவதை விடத் தொழிலைச் சிறந்த முறையில் செய்வதையே அவர் விரும்பினார். நவீன முறைகளையும் இயந்திரங்களையும் அவர் பயன்படுத்தினார். அவரது ஆலையானது ஒழுங்கும் தூய்மையும் நிறைந்திருந்தது. இயந்திரங்களின் மீது காட்டும் அக்கறை தொழிலில் ஈடுபட்டுள்ள மனிதர்களின் மீது காட்டப் படாமலிருப்பது நகைப்புக்கிடமானதாக அவருக்குப் பட்டது. தொழிற்சாலையில் வேலை செய்தவர்களின் நிலை குறித்து அவர் அதிர்ச்சி அடைந்தார். அங்கு வேலை செய்த பெண்களும் பிள்ளைகளும் கந்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடை அணிந்திருந்தனர். போஷாக்கின்மையினால் வாட்ட முற்றிருந்தனர். அவர்களது வீடுகள் மிகவும் மோசமான நிலையிலிருந்தன. களைக்கும் வரை அவர்கள் வேலை வாங்கப்பட்டனர். அவர்களது வேலை குறித்து வேதனைப்பட்ட ஓவன் உடனடியாக ஏதாவது செய்ய முயன்றார்.

வேலைநேரத்தைக் குறைத்துச் சம்பளத்தைக் கூட்டினார். மாதிரி வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். பாடசாலைகளை அமைத்து இலவசக் கல்வியை வழங்கினார். பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புமாறு வற்புறுத்தினார். உணவும் உடையும் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்காக அவர் ஒரு கம்பனிக் கடை ஒன்றினைத் திறந்தார். வேலைகளில் விடும் தவறுகளுக்கான தண்டனைப் பணம் நீக்கப்பட்டது. பொழுது போக்குவசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. காப்புறுதி நிதியம் ஏற்படுத்தப்பட்டது.

யாரும் நினைக்காத செயல்களை அவர் செய்தார். இதற்கான செலவுகளுக்குத் தமது பங்காளிகளைச் சம்மதிக்கச் செய்வது அவருக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால் இம்மேலதிகச் செயல்களால் கம்பனிக்கு எவ்வித நட்டமும் ஏற்படவில்லை. பஞ்சம் காரணமாக சகல ஆலைகளும் மூடப்பட்டிருந்த நான்கு மாத காலத்திலும் கூட அவர் தமது ஊழியர்களுக்கு முழுச்சம்பளத்தையும் வழங்கினார். நகரத்தின் நிலைமையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக ஓவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார். நோய், வறுமை ஆகியவை விடைபெற்றுச் சென்றன. நகரத்தில் வாழ்ந்த சமூகத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் சுத்தமும் நிலவின. இந்த அதிசயத்தைப் பார்க்க மதிப்புக்குரிய நபர்கள் பலர் பல இடங்களிலிருந்தும் வந்தனர். ஆனால் முழுக் கைத்தொழில்களும் இதனைப் பின்பற்ற மறுத்தன.

இத்தகைய மாற்றங்களினால் மனிதர்களின் சூழலையும் வாழ்க்கை நிலைமைகளையும் மாற்றியமைக்க முடியும் என ஓவன் நம்பினார். அத்துடன் அதற்காக மனித நேயம்மிக்க முதலாளிகளின் மீது தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் உணர்ந்தார். அவர்களுக்கு அதற்கான அவா இல்லை; அத்துடன் அதிகாரமும் இல்லை என அவர் கண்டார். சம்பள உயர்வு காரணமாகப் பொருட்களின் விலையும் கூடியது. தொழிலாளர் தாம் உற்பத்தி செய்த பொருட்களையே வாங்க முடியாத நிலையில் இருந்தனர். முதலாளித்துவவாதிகள் இல்லாத ஓர் கூட்டுறவு முறையை உருவாக்க வேண்டுமென அவர் எண்ணினார். உடனே செயலிலும் இறங்கிய அவர் தமது தொழிற்சாலையிலேயே ஓர் கூட்டுறவு அமைப்பை நிறுவினார். இலாபத்தை 5 சத வீதமாக மட்டுப்படுத்தினார். ஆனால் இதனை அவரது பங்காளிகள் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே அந்த அமைப்பு கலைக்கப்பட்டது. சீக்கிரமே புதிய பங்காளிகளை அவர் தேடிக் கொண்டார். அவர்களில் ஜெரமி பெந்தாமும் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 இல் நெப்போலியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உலகளாவிய பொருளாதார மந்த நிலை தோன்றியது. எனவே புதியதொரு ஆரம்பம் வேண்டுமென ஓவன் கருதினார். 1825 இல் அவர் இரண்டு கூட்டுறவு அமைப்புக்களை நிறுவினார். ஒன்றை ஸ்கொட்லாந்திலும் அடுத்ததை இந்தியானாவிலும் நிறுவினார். இரண்டுமே ஒழுங்காக நடைபெறவில்லை. அத்துடன் ஓவனின் செல்வத்தின் ஒரு பகுதியும் கரைந்தது. இதனால் அவர் கவலைப்படவில்லை. 1832 இல் இன்னுமொரு முயற்சியில் இறங்கினார். அவர் தொடங்கிய "தேசிய ஒப்புரவான ஊழியப் பரிமாற்றம்" (National Equitable Labour Exchange) ஒன்றில் தமது உற்பத்தியை ஒப்படைத்து அதற்குப் பதிலாக நோட்டுகளைப் (Notes) பெறமுடியும். இந்நோட்டுகளின் வாங்கும் சக்தி பண்ட உற்பத்தியில் செலவழிக்கப்பட்ட மணித்தியாலங்களுக்குச் சமனாகும். இதனால் கேள்வி நிரம்பலுக்கு இடையில் உள்ள மொத்தப் பெறுமதியில் வித்தியாசமில்லை. ஆனால் இம் முயற்சியும் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை.

ஓவன் தொழிற்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு உதவினார். கூட்டுறவு வாழ்க்கையின் நன்மைகள், சகலருக்கும் கல்வி, சிறந்த சூழல் ஆகியவை பற்றி அவர் தளராது கூறிவந்தார். இங்கிலாந்தில் றொச்டேலில் தொடங்கி மகத்தான வளர்ச்சி பெற்ற நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பிரித்தானிய தொழிலாளர் இயக்கம் ஆகியவற்றில் ஓவன் பெரும்பங்கு கொண்டிருந்தார். அவர் எழுதிய "சமூகத்தின் ஒரு புதிய பார்வை" (A New View of Society) நுண்ணிய அறிவாற்றலைப் பிரதிபலிக்கவில்லை எனினும் மனிதத்துவத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையைப் பிரதிபலித்தது. உண்மையில் பிரித்தானிய சோஷலிசமானது கார்ல்மார்க்சை விட றொபேர்ட் ஓவனின் மரபுகளுக்கே கூடுதலாகக் கடமைப்பட்டுள்ளது.

## 4. கார்ல் மார்க்ஸ்

நவீன சோஷலிசத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸ் (1818-1883) தனது கருத்துக்களுடன் தனக்கு முந்திய பலரது சோஷலிச மற்றும் முதலாளித்துவக் கருத்துக்களையும் இணைத்தே புதியதொரு பலமான சிந்தனை மரபைத் தோற்றுவித்தார். அவரது சிந்தனையிலிருந்த வலுக்களும் அவரது எதிர்வு கூறல்களிலிருந்த தவறுகளும் பின்வந்த வரலாற்று நிகழ்வுகளினால் எடுத்துக் காட்டப்பட்ட போதிலும் அவரது சிந்தனை புதியதொரு இயக்கத்தைத் தோற்றுவித்தது என்பதை மறுக்க முடியாது. மார்க்ஸ் ஒரு மெய்யியலாளர்; வரலாற்றாசிரியர், சமூகவியலாளர், பொருளியலாளர் மட்டுமன்றித் தமது வாழ்க்கை முழுதும் ஏற்பட்ட போராட்டங்களில் ஒரு தீவிர முரண்பாட்டு வாதியாகவும் (controversialist) விளங்கினார். எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிகழ்வுகள் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எதிர்வு கூறியதுடன் சமூகத்தின் இயல்பை மாற்றியமைக்க விரும்புபவர்களுக்கு வழி முறைகளையும் கூறினார்.

## மார்க்ஸின் பொருளியல்

தனது "மூலதனம்" (Capital) என்பதில் மார்க்ஸ் முன்வைத்த பொருளியற் கோட்பாடானது சாஸ்திரியமானது. மரபுரீதியாக ஸ்மித், றிக்காடோ ஆகியோரைப் பின்பற்றுவோருக்கும் மரபுவாத சோஷலிசவாதிகளுக்கும் அவரது கருத்துக்கள் ஆச்சரியத்தை அளித்தன. அவர் தனது கருத்துக்களை நிறுவுவதற்கு அவருக்கு முன்பிருந்த மரபுவாதிகளைப் போன்றே உய்த்தறிமுறையையே கையாண்டார். எனவே அவர்கள் விட்ட தவறுகளையே இவரும் செய்தார். அவர்களது முடிவுகளுக்கு ஆதாரம் இல்லாதது போலவே இவரது முடிவுகளுக்கும் ஆதாரம் தேட முடியவில்லை. எப்படிப் பார்த்தாலும் மார்க்ஸ் ஒரு மரபு வாதப் பொருளியலாளராவார். ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில் அவர் தனது தர்க்கத்தை முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது அதனைத் தாக்குவதற்கு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினார்.

தனக்கு முற்பட்ட பொருளியலாளர்களைப் போலவே மார்க்சும் பண்டங்களின் பொருளாதாரப் பெறுமதியை அவற்றை உருவாக்கச் செலவழிக்கப்பட்ட உழைப்பின் அடிப்படையில் மதிப்பிட்டார். உண்மையில் இது றிக்காடோவின் கருத்தாகும். மார்க்ஸ் மேலதிகமாகக் கூறியதென்னவெனில் பெறுமதியை உருவாக்குவதற்காகச் சமூகரீதியில் உழைப்பு அவசியம் என்பதாகும். அதாவது அதன் உற்பத்தி எவருக்காவது பிரயோசனமாக இருக்க வேண்டும். சந்தைகள் விருத்தியடையும் போது பெறுமதியானது பணத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட முடியும். ஆனால் பணத்தைப் பற்றிய ஏமாற்று வித்தைகளை அகற்றிப் பார்த்தால் ஒரு நுகர்வோன் ஒரு பண்டத்தைக் கொள்வனவு செய்வதற்குக் கொடுக்கும் பணமானது உண்மையில் அப்பண்டத்தை உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்பட்ட சமூக ரீதியான அத்தியாவசியமான உழைப்புக்காகவே செலுத்துகிறான். பணம் வெறுமனே ஓர் இடை ஊடகம் மட்டுமே.

ஒரு முதலாளி பண்டங்களைக் கொள்வனவு செய்வது தனது நுகர்வுக்காகவன்றி மீள் விற்பனைக்காகவே. ஒரு பருத்தி ஆலைச் சொந்தக்காரன் நூல், தறிகள் மற்றும் உழைப்பாளர்களை வாங்குகிறான். இறுதி உற்பத்திப் பொருளின் விலையில் அதன் கூறுகளுக்காகச் செலவழிக்கப்பட்ட உழைப்பின் பெறுமதியும் அடங்கியுள்ளது. ஆலையின் உற்பத்திப் பொருளை அவன் தனக்கு ஏற்பட்ட செலவுகளிலும் பார்க்கக் கூடிய விலையிலேயே விற்கிறான். அப்படி அவன் விற்பனை செய்யாவிட்டால் அவ்வியாபாரத்தில் அவனுக்கு இலாபமில்லை. எனவே மிகைப் பெறுமதியைப் (surplus value) பெறுபவரும் அவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளி தொழிலாளிக்கு வழங்கும் வேதனம் தொழிலாளி உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமானது மட்டுமே. (இது மல்த்துஸ் - றிக்காடோவின் "ஊதியத்தின் இரும்பு விதி"யாகும்) நுகர்வோரிடமிருந்து அவன் பெறுவது பண்டத்தின் உற்பத்தியில் இடப்பட்ட ஊழியத்தின் பெறுமதியையே. முதலாளி தனக்காகச் செல்வத்தைச் சேர்க்கும் செயன்முறையில் தொழிலாளியைச் சுரண்டுகிறான். பின்வரும் உதாரணத்தின் மூலம் இதனை மேலும் விளக்க முடியும். ஒரு நாள் முழுவதற்கும் தேவையான ஆகக் குறைந்த செலவினைப் பெறுவதற்கு ஒரு தொழிலாளி அரைநாள் உழைத்தால் போதுமானது எனக் கொள்கிறோம். ஆனால் முதலாளி அரைநாள் உழைப்புக்கான ஊதியத்தை வழங்கிவிட்டு முழுநாளும் அதாவது 12 மணித்தியாலங்களுக்கான உழைப்பைப் பெறுகிறான். இன்னொரு வகையில், முதலாளி இயந்திரங்களை அறிமுகம் செய்கிறான் என வைத்துக் கொள்வோம். அதன் மூலம் தொழிலாளியின் ஒரு நாள் வெளியீடு இருமடங்காக அதிகரிக்கிறது. முதலாளி ஊதியத்தை இரண்டு மடங்காக அதிகரிப்பதுமில்லை. பெறுமதி மிகையைத் தானே வைத்துக் கொள்கிறான். இவ்வாறே தனிப்பட்ட செல்வம் சேர்க்கப்படுகிறது. தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் அனைத்தும் வழங்கப்பட்டால் முதலாளியால் செல்வத்தைத் திரட்ட முடியாது.

"மூலதனப் பொருட்கள்" எனக் கூறப்படும் இயந்திரங்கள், கட்டிடங்கள் முதலியவை அவசியமல்ல என இக்கோட்பாடு கூறவில்லை. எந்த ஒரு சமூக முறைமையிலும் உற்பத்திக்காக இப்பொருட்களைக் கொள்வனவு செய்வது அவசியமானதாகும். உண்மையில் அது இப்பொருட்களை உருவாக்கிய ஊழியத்துக்கான கொடுப்பனவாகும். இக்கோட்பாடு வற்புறுத்திக் கூறுவது என்னவெனில் அத்தகைய மூலதனப் பொருட்கள் தன்னுடையது என ஒரு முதலாளி கூற முடியாது என்பதாகும். இந்த முடிவினை நிறுவுவதற்கே மார்க்ஸ் பெரிதும் முயன்றார். இப்பொருட்கள் தொழிலாளிக்குச் சொந்தமாக இருக்குமெனில் அவர்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியைப் புதிய இயந்திரங்களையும், கட்டிடங்களையும் வாங்குவதற்காகச் சேமிப்பர்.

ஊழியத்தின் முழுப்பெறுமதியை வழங்காது சந்தைக்கு மேலதிகமான பொருட்களை முதலாளி உற்பத்தி செய்கிறான் என மார்க்ஸ் கருதினார். இதனால் ஒரு இயற்கையான அல்லது பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் உள்ளதைப் போல பொருட்கள் முழுவதும் "கொள்வனவு" செய்யப் படுவதில்லை. இதன் காரணமாகவே அதாவது மிகைப்பண்டங்களை முதலாளி வைத்திருப்பதன் காரணமாகவே அடிக்கடி வேலை வாய்ப்பில்லாத நிலைமை தோற்றுவிக்கப்படுகிறது. மார்க்ஸின் மந்தநிலை பற்றிய இந்தக் கோட்பாடு முழுமையானதல்ல; எனினும் ஒரு முதலாளித்துவ ஒழுங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள வெளிப்படையான இக்குறைபாட்டினைச் சுட்டிக்காட்டிய முதலாவது பொருளியலாளன் என்ற வகையில் மார்க்ஸ் பெருமைக்குரியவராவர்.

முதலாளித்துவ வளர்ச்சியின் இயற்கை விதியானது வர்க்கப்போராட்டம் கூர்மையடைவதற்கு வழிவகுக்கும்; நடுநிலைக் கூறுகள் யாவும் நீக்கப்படும். இறுதியில் சொத்துக்கள் ஏதுமற்ற தொழிலாள வர்க்கத்தினரும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரான முதலாளி வர்க்கத்தினரும் மோதுவர். சனத்தொகையின் பெரும்பகுதியினர் தொழிலாளர் வர்க்கத்தினராகவே இருப்பர். தொழிலாளி வர்க்கம் சனநாயக ரீதியான வாக்களிப்பு மூலமோ அல்லது வன்முறையின் மூலமோ அதிகாரத்தைப் பிடிக்க முடியும். சமாதானத்தின் மூலமான ஆட்சிமாற்றத்தில் மார்க்ஸ் அவ்வளவாக நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எனினும் பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளில் அப்படி ஏற்படலாம் என அவர் ஒத்துக் கொண்டார்.

கைத்தொழில்களும் பாரிய வர்த்தகங்களும் விரிவடைய மக்கள் இவ்வாறு இரு சக்திகளாக வேறுபடுவதும் ஏற்படும். விவசாயிகள் தமது நிலங்களினின்றும் அப்புறப்படுத்தப்படுவார்கள். சிறு தொழில் வர்த்தகர்களும், கைவினைஞர்களும் தமது தொழிலை இழப்பார்கள். விவசாயம் கைத்தொழில் மயமாக்கப்பட்டு அதன் உடைமை ஒரு சிலரிடம் குவியும். மூலதன உடைமையாளர்களும் எண்ணிக்கையில் குறைவடைவார்கள். அதாவது மூலதனம் ஒரு சிலரது கைகளில் குவியும்.

மார்க்ஸின் இன்னுமொரு எதிர்வு கூறல் முதலாளித்துவம் வளர்ச்சிடைந்து உச்சநிலையை அடையும் போது உழைக்கும் வர்க்கத்தின் துன்பமும் உச்சமடையும் என்பதாகும். முதலாளித்துவத்தின் உற்பத்தித் திறன் வளர்ச்சியினால் பண்டங்களின் வெளியீடும் அதிகரிக்கும். இப்பண்டங்களுக்குத் தேவையான சந்தைகள் இல்லாமையினால் முதலாளித்துவமானது தொழிலாளரின் ஊதியத்தைக் கீழ் எல்லையில் வைத்திருந்து தனது "பெறுமதி மிகையை"க் கூட்டிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படும். முதலாளித்துவம் வங்குரோத்து நிலையை அடைவதைத் தவிர்ப்பதற்கு இதைத் தவிர வேறுவழி அதற்கில்லை.

இறுதியில் தனது "உள் முரண்பாடுகள்" காரணமாக முதலாளித்துவம் வீழ்ச்சியடையும். முதலாளித்துவம் பலமாக இயங்கும் நாடுகளில் புதிய உற்பத்தித் துறைகளில் ஈடுபடுவதன் மூலமே அது தன்னைப் பேணிக்கொள்ளும். அத்துடன் உலகின் புதிய பிரதேசங்களுக்கும் அது பரவுவதன் மூலமும் தன்னைப் பேணிக் கொள்ள முயற்சி செய்யும். கைப்பற்றிக் கொண்டு சுரண்டுவதற்கு இனி இடமே இல்லாதவாறு அது தனது அழிவுகளை எல்லா இடங்களுக்கும் பரப்பி வைக்கும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை வாய்ப்பின்மை, வேலைவாய்ப்பின்மை போன்ற நெருக்கடிகளுக்கும் அது அவ்வப்போது முகம் கொடுக்கும்.

முதலாளித்துவத்தின் இறுதி நெருக்கடி சீக்கிரமே அதாவது தனது வாழ்க்கைக் காலத்திலேயே ஏற்படும் என மார்க்ஸ் எதிர்பார்த்தார். சூழ்நிலையியல் பற்றிய அவரது பகுப்பாய்வு சரி எனில் அவரது எதிர்பார்ப்பு நிறைவேறி இருக்கவேண்டும். கார்ல்மார்க்சின் முடிவுகளைக் குறைத்துக் காட்ட வேண்டுமெனில் இலகுவான வழி அவரது எதிர்வுகூறல்களிலுள்ள பிழைகளை எடுத்துக் காட்டுவதாகும்.

விவசாயம் ஒரு சிலரது கைத்தொழில் உடமையாக மாறவில்லை. சுதந்திரமான வர்த்தகர்களும், சுயமான தொழிலில் ஈடுபட்டிருக்கும் நபர்களும் பெரும் முதலாளிகளை விட அதிக எண்ணிக்கையிலேயே உள்ளனர். "கைத்தொழிற் தொழிலாளர்கள்" பல நாடுகளிலும் பெரும்பான்மையினராக மாறிவிடவில்லை. உழைக்கும் வர்க்கத்தினரின் துன்பம் அதிகரித்துக் கொண்டு செல்லவில்லை. பல கைத்தொழில் நாடுகளில் அவர்களது மெய்வருமானம் கூடியிருப்பதோடு அவர்களது வாழ்க்கைத் தரமும் 19 ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியிலிருந்தே கூடிவந்துள்ளது. பொருளாதார மந்தங்களும், வேலையின்மையும் மோசமாக ஏற்பட்டுள்ளன. ஆனால் மார்க்ஸ் எழுதியதைப் போல அவ்வளவு மோசமாகவும் நீண்டதாகவும் ஏற்படவில்லை. பாரிய கைத்தொழில் விருத்தி அடைந்த நாடுகளிற் தொழிலாளர் வர்க்கம் சோசலிசப் புரட்சியை நடத்தவுமில்லை. கம்யூனிசத்தின் வெற்றிகள் பின்னடைந்த நாடுகளிலேயே ஏற்பட்டுள்ளன. பிரித்தானியாவில் தொழிற் கட்சியினால் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சோசலிச ஏற்பாடுகளும் கூட மிகக் குறைந்த பெரும்பான்மை வாக்குகள் மூலமாகப் பெற்ற வெற்றியின் காரணமாகவே ஏற்படுத்த முடிந்தது.

எவ்வாறெனினும் மார்க்ஸின் எதிர்வுகூறல்களில் உள்ள தவறுகள் அதன் உள்ளடக்கத்தை விட நேரத்தில் இருக்கலாம். சிலவேளை முதலாளித்துவத்தின் அழிவு எதிர்காலத்தில் ஏற்படக் கூடும். எனினும் மார்க்ஸ் கூறுவதைப் போல முதலாளித்துவ அமைப்பு கொடுமையானதெனில் கடந்த நூற்றாண்டில் நாம் அதனிடமிருந்து இத்தனை நன்மைகளைப் பெற்றிருக்க முடியாது. ஆனால் இத் தவறுகளுக்காக நாம் மார்க்சை நிராகரித்துவிடவும் முடியாது. அத்துடன் எந்தவொரு சிந்தனையாளரும் தவறுகள் அற்றவர் எனக் கூறிவிடவும் முடியாது. எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான கோட்பாடு என எதுவுமில்லை. ஓர் அறிஞர் என்றளவில் மார்க்ஸ் பொருளியலை விடச் சமூக அபிவிருத்திக் கோட்பாட்டுக்கே அதிகளவு பங்களிப்புச் செய்துள்ளார். நவீன சிந்தனை மரபில் மார்க்ஸ் ஒரு பகுதியாவார். மார்க்சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளின் சவால்களுக்கு உட்படாவிட்டால் முதலாளித்துவம் இவ்வளவு சாதித்திருக்கும் எனவும் கூறமுடியாது. மார்க்ஸின் கோட்பாடு ஒரு முழுமையாகக் கொள்ளப்பட்டு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது முதலாளித்துவத்துக்குக் கூடிய பாதகங்களை ஏற்படுத்தியிருக்கக் கூடும். இன்று பலர் கூறுவதைப் போல மல்த்துாஸ் மற்றும் றிக்காடோவின் கொள்கைகள் நடைமுறைப் பிரச்சினைகளில் உறுதியாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பின் சிலவேளை முதலாளித்துவம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே தூக்கி எறியப்பட்டிருக்கும்.

## 5. ஜோண் ஸ்ருவர்ட் மில்

"கொப்டன்" (Cobden), "பிறைட்" (Bright) ஆகியோர் பாராளுமன்றத்தில் வெற்றி பெற்ற ஓராண்டுக்கு முன்னர் அதாவது 1845 இல் தான் மில் தனது பிரசித்தி பெற்ற நூலான "அரசியற் பொருளாதாரத் தத்துவங்கள்" (Principles of Political Economy) என்னும் நூலை எழுதத் தொடங்கினார். இந்நூல் 1848 இல் வெளியிடப்பட்டது. அதே ஆண்டிற்தான் மார்க்ஸ், ஏங்கெல்ஸினால் கம்யூனிஸ்ட் பிரகடனம் (Communist Manifesto) வெளியிடப்பட்டது. மார்க்சைப் போலவே மில்லும் யூதோப்பியன் சோஷலிஸ்டுகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தார். அக்காலத்தில் நிகழ்ந்த சீரழிவான நிலைமைகளையும் அவர் அவதானித்தார். ஆனால் மார்க்சைப் போல முதலாளித்துவ ஒழுங்கமைப்பின் அழிவை அவர் எதிர்நோக்கவில்லை. ஆனால் பொருளாதாரக் கோட்பாடுகளில் மாற்றம் ஏற்பட வேண்டுமென அவர் எதிர்பார்த்தார்.

மில்லைப் போல வேறெந்தப் பொருளியற் சிந்தனையாளரும் சீரிய உணர்வையும் தெளிந்த சிந்தனையையும் கொண்டிருக்கவில்லை. பழம் பொருளியற் கோட்பாட்டை அவர் மாற்றியமைத்தார். முன்னேற்றத்தின் நன்மையைப் பரப்பத் திட்டமிடப்பட்ட தலையீடு வேண்டுமென அவர் கூறினார். இவரது நூல் பெரிதும் வெற்றி பெற்றதுடன் பல ஆண்டுகள் பொருளியல் உலகத்தில் செல்வாக்குச் செலுத்தியது. சிமித், றிக்காடோ ஆகியோரை விட மில்லின் நூல் பெரிதும் உவந்து வாசிக்கப்பட்டது.

### மில்லின் அடிப்படைக் கோட்பாடு

மரபுரீதியான சிந்தனையில் மில் அறிமுகப்படுத்திய மாற்றம் என்னவெனில் செல்வத்தின் பங்கீட்டை நிர்ணயிப்பது மாற்றமுடியாத இயற்கைச் சட்டமல்ல; மனிதனது தலையீடு என்பதே. உற்பத்தி பற்றிய மரபுரீதியான கருத்துக்களை ஓரளவு திருத்தி விரிவுபடுத்திய மில் அக்கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசியமானவை எனவும் எத்தகைய சமூக அமைப்பிலும் பயன்படுத்தப்படக் கூடியவை எனவும் கூறினார். "ஆனால் செல்வத்தைப் பங்கீடு செய்தல் என்பது மனிதனால் செய்யப்படக் கூடியது. அது சமூகத்தின் சட்டங்கள் மற்றும் வழமைகளின் பாற்பட்டது. இதைத் தீர்மானிக்கும் விதிகள் என்பவை சமூகத்தில் ஆளும் அதிகாரம் கொண்டோர்களின் அபிப்பிராயங்களும் உணர்வுகளுமாகும். இவை காலத்துக்குக் காலம், நாட்டுக்கு நாடு வேறுபட்டவை" எனவும் மில் எடுத்துரைத்தார்.

அபிப்பிராயங்களை உருவாக்கக் கூடிய இயற்கைச் சட்டங்கள் இருக்கலாம் என மில் சிந்தித்தார். ஆனால் இதைப் பற்றிய விசாரணையில் அவர் ஈடுபடவில்லை. ஒரு பொருளியற் சிந்தனையாளனாற் செய்யக்கூடியது ஒரு குறிப்பிட்ட முறைமை எவ்வாறு செயற்படுகிறது என்பதைக் கண்டறிதலாகும். "சமூகம் செல்வத்தை எவ்வாறு பங்கீடு செய்வது என்பதைத் தான் சிறப்பானது எனக் கருதும் விதிகளின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அத்தகைய விதிகளின் அடிப்படையில் ஏற்படும் இயக்கத்தின் மூலம் எத்தகைய விளைவுகள் பெறப்படும் என்பதைக் கண்டறிய வேண்டும். இதற்கு அவதானத்தையும் காரண காரியத்தையும் பயன்படுத்த வேண்டும்" என்று மில் கூறினார். இதன் மூலம் மரபு சார்ந்த கோட்பாட்டின் வரட்சித் தன்மையை அவர் நீக்கினார். வறுமையையும் அநீதியையும் நியாயப்படுத்தும் ஓர் இயற்கையான சட்டத்தை மனிதன் அனுசரிக்க வேண்டும் என்னும் மரபுவழிக் கோட்பாட்டை அவர் நிராகரித்தார்.

## உற்பத்தி விதிகள்

மில்லினது உற்பத்தி பற்றிய பொருளியல் விதிகள் (Laws of Production) உள்ளடக்கத்தில் அடம்ஸ்மித்தின் கோட்பாடுகளையே விரிவுபடுத்தின எனக் கூற முடியாது. ஆனால் அதன் பரிமாணத்தை நிச்சயமாக விரிவுபடுத்தின. உற்பத்தியின் அடிபடைக் காரணிகள் உழைப்பும் இயற்கை வளங்களுமாகும் என மில் கூறினார். இவ்விரண்டு எண்ணக்கருக்களையும் அவர் விரிவுபடுத்தினார். அவரது கருத்துப்படி உழைப்பு என்பது உடல் உழைப்பையும் உள உழைப்பையும் உள்ளடக்கியிருந்தது. உடலுழைப்பாளியின் உழைப்பு மாத்திரமல்ல, விஞ்ஞானி, மெய்யியலாளர், அரசியல்வாதி ஆகியோரது உழைப்பும் அதில் அடங்கியுள்ளது. இயற்கை வளம் என்பது மனிதன் பயன்படுத்தக் கூடிய பொருட்களை மாத்திரமல்லாது அவற்றைப் பயன்படுத்துவதற்கு மனிதனுக்கு உதவும் கருவிகளையும் குறிக்கும். மில் பின்வருமாறு கூறினார்:

"பொருட்களைச் சரியான இடத்தில் பொருத்தி விட்டால் இயற்கையின் சக்தியானது சகல பணிகளையும் செய்கிறது. இவ்வாறு பொருட்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் சரியான இடத்தில் பொருத்துவதுதான் மனிதன் செய்யும் வேலை. அல்லது செய்யக்கூடிய வேலை. இயற்கை வலுக்களின் மீது ஆட்சி செலுத்தும் வலிமையை மனிதன் பெற்றுள்ளான். அவ்வலிமையானது தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது". உண்மையில் மில்லின் இக் கூற்று தூர திருஷ்டி உள்ளதாகும். நுகர்வு செய்வதற்கும் மில் ஓர் உற்பத்திச் செயற்பாட்டினை வழங்கினார். நல்ல உணவு உற்பத்தியாளனுக்கு உதவுகிறது. நல்ல கல்வி சிந்தனையாளனுக்கு உதவுகிறது. உற்பத்தித் திறனற்ற நுகர்வும் உண்டு. வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு அது உதவுமெனில் அத்தகைய நுகர்வும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இது உண்மையான பொருளாதார மிகை எனக் கருதப்படல் வேண்டும்.

மில் மூலதனத்தையும் பணத்தையும் வேறுபடுத்தினார். மூலதனம் என்பது மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வசதி செய்யும் பண்டங்களின் திரட்சி (accumulation of goods) என அவர் கூறினார். மூலதனம் என்பது கடந்த கால உழைப்பின் உற்பத்தியாகும். மூலதனம் என்பது இந்த வகையில் வரையறையில்லாமல் பெருகக்கூடியதல்ல. அது தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட வேண்டும். "ஒரு முதலாளியினாற்றான் மூலதனம் வழங்கப்பட வேண்டும் என்ற அவசியமில்லை" என மில் கூறினார்.

## பங்கீடு பற்றிய மில்லின் கருத்துகள்

தனிப்பட்ட சொத்து என்பது பண்டைய சமூகங்களில் இருந்த ஓரமைப்பு என மில் கூறினார். இவ்வாறான தனிப்பட்ட சொத்து சமூகத்தின் நன்மை கருதி உருவாக்கப்பட்டதல்ல. சச்சரவுகள் ஏற்பட்ட பொழுது சமாதானத்தைப் பேணுவதற்காகவே தனிப்பட்ட சொத்துகள் உருவாக்கப்பட்டன. அதாவது ஆக்கிரமிப்பை அடக்குவதற்காகவே புராதன நீதிமன்றங்கள் சொத்துக்களில் முதல் உரிமை கொண்டாடுவோருக்குச் சட்ட அந்தஸ்து வழங்கின. முதலாவது சொத்துரிமை கொண்டவர் இன்னொருவரை விரட்டுவதற்கு அதாவது சொத்து அற்றவராக்குவதற்கு வன்முறையைத் தொடங்கினார். இவ்வாறு பிரச்சினை தொடங்கிய பொழுது அவர் கொண்டுள்ள சொத்துரிமையானது அவரது சொந்த உழைப்பின் மூலம் பெறப்பட்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

செல்வத்தைப் பங்கீடு செய்யத் தனிப்பட்ட சொத்துரிமை தான் ஒரே வழி என்பதல்ல. இவ்விடயத்தில் மில் கொமியூனிச வாதிகள், சோசலிசவாதிகள் ஆகியோரது திட்டங்களை ஆய்வு செய்தார். இம் முறைகளின் நன்மை தீமைகள் எவ்வாறு இருப்பினும் அவை நடைமுறைச் சாத்தியமற்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறுவதற்கில்லை. தனிப்பட்ட நபர்கள் வேலையைப் பொறுத்தவரையிற் தமக்குரிய பங்கினைத் தவிர்க்கவே முயல்வர். அதாவது நேர்மையும் திறமையும் கொண்ட உழைப்பு பெறப்பட வேண்டுமெனில் அவர்கள் தமது உழைப்பின் நன்மையைப் பெறக்கூடிய வாய்ப்பும் இருக்கவே வேண்டும். ஒரு சமூகத்தின் உழைப்பை அதன் அங்கத்தவர்களுக்குப் பங்கிடுவதுதான் மிகச் சிரமமானது. ஆனால் இச்சிரமத்தினையும் கூடத் தவிர்க்க முடியும். கம்யூனிசத்துக்கு மாற்றுவழி துன்பங்களும் அநீதிகளும் நிறைந்த தற்போதைய சமூக அமைப்பு எனில் கம்யூனிசத்தின் கஷ்டங்கள் யாவற்றையும் நாம் தூசாக நினைக்க வேண்டும் என மில் கூறினார். ஆனால் கம்யூனிசம் என்று மில் குறிப்பிட்டது இன்றைய கம்யூனிசக் கோட்பாட்டையோ அல்லது சோவியத் யூனியனையோ அல்ல.

முதலாளித்துவத்தின் கீழ் செல்வம் எவ்வாறு பங்கீடு செய்யப்படுகிறது என மில் விபரித்தார். அவரது கருத்துக்கள் மரபு வழியான எண்ணக்கருக்களைச் சார்ந்தவையாக இருந்த பொழுதிலும் அவர் முன்னேற்றத்துக்குச் சாதகமான சில அம்சங்களையும் குறிப்பிடத் தவறவில்லை. உண்மையான கீழ்மட்ட ஊதியமானது தொழிலாளர்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டுமெனில் அது அவர்களது ஆகக் குறைந்த வாழ்க்கைச் செலவுக்குக் கட்டுப்படியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மாறாக அவர்களுக்குப் பழக்கமான வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். றிக்காடோவின் கோட்பாடு அதாவது உழைப்புக்கான செலவினம் உயரும் பொழுது இலாபம் வீழ்ச்சியடையும் என்பது சரி எனினும் உழைப்புக்கான செலவினம் என்பதும், ஊதியம் என்பதும் ஒன்றல்ல என மில் கருதினார். உழைப்புக்கான செலவினம் என்பது ஊதியம் ஆகக் குறைந்திருக்கும் பொழுது அது மிக உயர்ந்திருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உழைப்பு மிக மலிவாக இருந்த பொழுதிலும் வினைத்திறனற்றதாக இருக்கலாம். உழைப்பாளர்கள் கூடிய வினைத்திறன் கொண்டவர்களாக இருக்கும் பொழுது உழைப்புக்கான செலவினம் வீழ்ச்சியடைகிறது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாகத் தொழிலாளர்களைக் கூடிய வினைத்திறனுடன் பயன்படுத்தவும் முடியும். சனத்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தக் கூடியது. உயர்ந்த இலாபமும் உயர்ந்த ஊதியமும் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல. மில் இவ்வாறு எழுதியது முதல் பிரித்தானியாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் இத்தகைய போக்கு உண்மையாகவே காணப்படுகிறது. உண்மையில் மில் றிக்காடோவின் வாடகைக் கோட்பாட்டுக்கு மேலதிகமாகவோ அல்லது பெறுமதி மற்றும் விலை பற்றிய மரபு வழிக் கோட்பாடுகளுக்கு மேலதிகமாகவோ புதிதாக எதையும் கூறவில்லை. ஆனால் முதலாளித்துவத்தின் கீழ் விலைக்கோட்பாடு என்பது என்ன வகையான செல்வப் பங்கீடு நடைபெறுகிறது என்பதைப் பொறுத்து அமைகிறது எனக் குறிப்பிட்டார். எனவே "இயற்கைச் சட்டம்" என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றப்படக் கூடியது எனவும் கூறினார். அரசியற் பொருளாதாரத்தில் உண்மைகள் என்பது தற்காலிகமானதே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## சமூகத்தின் முன்னேற்றம்

மில்லின் தத்துவங்களில் நாலாவது பகுதியான கடைசிப் பகுதி மிகவும் முக்கியமானது. அதனது தலைப்பு "உற்பத்தியிலும் பங்கீட்டிலும் சமூக முன்னேற்றத்தின் செல்வாக்கு" (Influence of the Progress of Society on Production and Distribution) என்பதாகும். பொருள் சார்ந்த முன்னேற்றமே இறுதி இலக்கு என்பதை இந்த முடிவுரையில் அவர் மறுக்கிறார். மேலும் மேலும் செல்வத்தைச் சேர்த்துக் கொள்வதற்காக மக்கள் மேலும் மேலும் ஒருவரோடொருவர் போட்டியிடுவது அவருக்குச் சிறந்த அம்சமாகத் தோன்றவில்லை. இவர்கள் தமது அபிலாசைகளை அடையக் கூடியதாக இருக்கலாம். ஆனால் அதனை மில்லினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்த நிலைமைக்கு உதாரணமாக அவர் வட அமெரிக்க மாநிலங்களைக் காட்டினார். "அங்கு ஒரு பகுதியினர் தமது வாழ்க்கை முழுவதும் டொலர்களை வேட்டையாடுகின்றனர். மறுபகுதியினர் டொலர்களை வேட்டையாடுபவர்களைப் பெற்றுத் தள்ளுகின்றனர்." மக்கள் தேங்கி நிற்க வேண்டுமென்றோ, உளுத்துப்போக வேண்டுமென்றோ அவர் கூறவில்லை. ஆனால் நாம் மனித அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறோம் என அவர் கூறினார். ஆனால் சமூகம் "தேங்கி நிற்கும்" (Stationary) காலம் ஒன்று வரும் எனவும் அப்போது மக்கள் தொகை தானாகவே கட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

தொழில்நுட்பம் காரணமாக சனத்தொகை முழுவதற்கும் உணவு வழங்கப்பட முடியுமெனினும் உலகம் முழுவதையும் ஏன் சனத்தொகையைக் கொண்டு நிரப்ப வேண்டும் என அவர் வினவினார். ஒவ்வொரு அங்குல நிலத்திலும் விவசாயம் செய்து உணவுற்பத்தியைப் பெருக்குவதும் மனிதனுக்குப் பயன்படாத விலங்குகளைக் குவிப்பதும் அர்த்தமற்றது எனவும் அவர் வாதிட்டார். இயற்கைக்கு மேலாகப் பெருகி வரும் சக்தியை வேலை நேரத்தைக் குறைப்பதற்குப் பயன்படுத்தலாம். அதன் மூலம் கிடைக்கும் மேலதிக நேரத்தை வேறு விடயங்களிற் செலவழிக்கலாம். வாழ்க்கையை எவ்வாறு கொண்டு நடத்துவது என்பதிலிருந்து மனிதன் விடுபடும் போது வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்பதில் அவனது கவனம் செல்லும் என மில் கருதினார்.

முதலாளித்துவம் தொடர்ந்து இவ்வாறே இயங்கும் என்பதிலும் மில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. "மனிதர்களை இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பினர்களாக அதாவது தொழில் வழங்குவோரும், தொழில் பெறுவோரும் என நிரந்தரமாகப் பிரித்து வைத்திருக்க முடியாது. இந் நிலைமை இரு சாராருக்குமே திருப்திகரமானதல்ல. பொருளியற் செயன்முறையானது அடிப்படையில் கூட்டுறவுத் தன்மை கொண்டது" என மில் கூறினார். உற்பத்தியாளர்களின் கூட்டுறவும், நுகர்வோரின் கூட்டுறவும் எதிர்காலத்தில் ஏற்படும் என மில் நம்பினார். முதலாவது விடயத்தில் அவரது நம்பிக்கை நிறைவேறவில்லை. இரண்டாவது விடயம் சர்வதேசரீதியாக வலிமை நிறைந்த ஓர் இயக்கமாக வளர்ந்துள்ளது.

விரும்பக் கூடிய மாற்றங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்தைப் பயன்படுத்தலாம். வருமானத்தைச் சமப்படுத்துவதற்காக வரி விதிப்பை அவர் விரும்பினார். அரசாங்கம் பொலிஸ்காரனுடைய வேலைக்கு அப்பாற் பலவற்றை ஏற்கெனவே செய்துள்ளது; பொது மனித குலத்துக்கே சகல வளங்களும் சொந்தமானது; அதனை அரசாங்கம் பாதுகாத்துள்ளது; பணத்தை உருவாக்கியது; பொது வேலைகளை மேற்கொண்டது. இவ்வாறு பல வேலைகளை அரசாங்கம் செய்துள்ளது. அரசாங்கத்தின் தலையிடாமை என்னும் கொள்கை தவறானது என மில் கருதினார். பிரச்சினையின் தன்மைக்கு ஏற்ப அரசாங்கத்தின் தலையீடு முக்கியமானது. தன்னுடைய தத்துவங்கள் என்னும் நூலில் சோசலிசவாதிகளின் நடைமுறை நோக்கங்களை ஆதரித்தார். ஆனால் அவர்கள் போட்டித் தன்மையை எதிர்ப்பதை அவர் ஏற்கவில்லை. போட்டித்தன்மை தொழிலாளர்க்கும் நன்மையானது என்பது அவர் கருத்து. கூட்டுறவுகளை அவர் ஆதரித்தபோது இச்சங்கங்களும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட வேண்டுமென அவர் கூறினார். ஆனால் போட்டித்தன்மை யானது ஒரு நபர் ஆகக்குறைந்த வாழ்க்கை வசதிகளைப் பெறுவதற்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது எனவும் பலர் பின்தங்கி இருக்கத்தக்கதாக ஒரு சிலர் மட்டும் சலுகை பெற்ற வகுப்பினராக வளர்ச்சியடையக் கூடாது எனவும் அவர் கூறினார்.

1890இல் மில் தனது "தத்துவங்கள்" (Principles) என்னும் நூலை வெளியிட்டார். 40 ஆண்டுகளுக்குப் பின்னர் பொருளியற் சிந்தனை முழுவதையும் மாற்றியமைக்க முயலும் மரபின் இன்னுமொரு வழித்தோன்றலாக இன்னுமொருவர் தோன்றினார். மில்லின் நூல் வெளிவந்த பின்னர் கோட்பாட்டு ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. சோசலிசம் பெரிதும் முன்னேறி விடவில்லை. பிரித்தானிய முதலாளித்துவம் நாகரிக உலகின் சகல பகுதிகளிலும் வெற்றிக்கொடி நாட்டியது; தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைந்தன; வேலை நேரம் குறைக்கப்பட்டது; ஊதியம் உயர்ந்தது; பல்வேறு சமூகப் பிரச்சினைகள் நிலைத்தன. ஆனால் அவை நல்லிணக்கம் மூலம் தீர்க்கப்பட முடியும் என்னும் நம்பிக்கையும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நூல்கள் இப் புதிய சூழ்நிலைகளுக்குப் பொருத்தமானவைகளாக இருக்கவில்லை. இக்காலத்தில்தான் மார்ஷலின் "பொருளியற் தத்துவங்கள்" என்னும் நூல் வெளியிடப்பட்டது. "ஒவ்வொரு பரம்பரையினரும் தமது பிரச்சினைகளைத் தமது பார்வையிலேயே நோக்குகின்றனர்" என மார்ஷல் குறிப்பிட்டார்.

"பொருளாதார மனிதன்" என்னும் எண்ணக்கருவை மார்ஷல் விமர்சனம் செய்தார். இக்கருத்து மிகவும் குறுகியது எனவும் பொருளாதாரம் உண்மையான மனிதர்களுடன் தான் சம்பந்தப்படுகிறது என அவர் கூறினார். ஆனால் அவர் தமது பகுப்பாய்வில் "பொருளாதார மனிதனை"ப் பயன்படுத்தவே செய்தார். போட்டியை மார்ஷல் புகழ்ந்துரைத்த அதே நேரத்தில் அதில் பல்வேறு கூடாத அம்சங்களும் உள்ளன என்பதையும் அவர் கூறினார். சில சந்தர்ப்பங்களில் இதன் தீவிரம் குறைக்கப்படல் வேண்டும். நமது பொருளாதார ஒழுங்கை விபரிப்பதற்குப் "போட்டிமுறைமை" (Competitive System) என்பதற்குப் பதிலாகக் "கைத்தொழில் மற்றும் தொழின் முயற்சிகளின் சுதந்திரம்" (Freedom of industry and enterprise) என்னும் பதத்தை அவர் பிரயோகித்தார். ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாக வாழ்ந்த ஒரு புராதன சொர்க்கலோகம் பூமியில் இருந்தது என்பதை அவர் பொய்மை என நிராகரித்தார். வரலாற்றில் அப்படியொரு காலம் இருந்திருக்கவில்லை. ஆனால் முயற்சி செய்தால் எமது பொருளாதார முறைமையை அதனைப்போன்ற ஒன்றாக எதிர்காலத்தில் மாற்றியமைக்க முடியும் என அவர் கூறினார்.

வறுமையின் கொடுமைகளுக்காக அதனை அழித்துவிட வேண்டுமெனவும், தனியார் சொத்துடைமையின் நன்மைகளுக்காக அதனைப் பேண வேண்டுமெனவும் மார்ஷல் கூறினார். செல்வம் பொது நன்மைக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும்; அரசு பொருளியல் முயற்சிகளில் மிகவும் முக்கியமான ஒரு கூறு; சகல உற்பத்திக் காரணிகளையும் நல்ல பயன்பாட்டுக்கு உட்படுத்தும் முகாமையாளன் அல்லது ஒழுங்குபடுத்துபவன், பொருளாதாரச் செயற்பாடுகளில் மையநிலையைக் கொண்டிருக்கிறான் போன்ற கருத்துகளை அவர் முன்வைத்தார்.

உற்பத்திக் கோட்பாட்டில் மல்த்தூசின் நிலத்தைப் பற்றிய குறைந்துசெல் பயன்விதியை மார்ஷல் ஏற்றுக் கொண்டார். ஆனால் மனிதனின் கூட்டுழைப்புத் திறனால் (collective skills) இயற்கையின் கஞ்சத்தனத்தை மாற்றியமைக்க முடியும் என அவர் வாதிட்டார். அடிப்படையான தேவைகளுக்கு மேலதிகமான மிகையை உருவாக்குவதே நோக்கம்; ஆனால் அந்த மிகையின் இயல்பும் பங்கீடும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதுதான் எதிர்நோக்கப்படும் பிரச்சினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியத்தின் வாழ்வாதார மட்டம் (subsistence level) என்பதற்குப் பதிலாக வசதியின் நியமம் (Standard of comfort) என்னும் பதத்தை அவர் குறிப்பிட்டார். இவை இரண்டுமே வினைத்திறனை அதிகரிக்கின்றன என அவர் கூறினார். தொழிற்சங்கங்களையும் கூட்டுப் பேரம் பேசலையும் அவர் ஏற்றுக்கொண்டார். ஊதியம் பற்றிய உறுதியான விதி ஒன்று இருப்பதை மார்ஷல் மறுத்தார். ஊதியம் என்பது பல காரணிகளின் விளைவு எனக் கூறினார். தொழிலாளரும், தொழில் வழங்குபவரும் எப்போதும் ஒருவருக்கொருவர் எதிரானவர்கள் என்பதை அவர் ஏற்கவில்லை. வினைத்திறன் சார்ந்த ஒத்துழைப்புத் தொடர்பாக இருவருமே ஒருமித்த கருத்துக் கொண்டிருப்பதால் அவர்கள் எப்போதுமே எதிரானவர்கள் எனக் கூற முடியாது.

எல்லைப் பயன்பாட்டுக் கோட்பாடுகளைப் பயன்படுத்திய மார்ஷல் அவை யாவற்றையும் ஒரு தர்க்கரீதியான அமைப்புக்குக் கொண்டு வந்தார். ஒரு கணிதவியலாளர் என்ற அடிப்படையில் இவ்விடயத்திற் கணிதத்தை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துவதை அவர் எதிர்த்தார். நிலையான சூழ்நிலைகளின் கீழ் கேள்வி-நிரம்பற் பகுப்பாய்வு தொடர்பாகக் குறுகிய காலத்தில் இது பொருத்தமானது எனினும் நீண்டகாலத்தை விளக்குவதற்காகச் சமநிலைக்கோட்பாடு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மார்ஷல் விலை மற்றும் சந்தைப் பகுப்பாய்வுடன் மாத்திரம் நின்று விடவில்லை. தேசிய வருமானம் பற்றியும் அதனுடைய பங்கீடு எவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் அவர் எடுத்துரைத்தார். மாற்றங்கள் அவசியமானவை என்ற போதிலும் மாற்றங்களை ஏற்படுத்துபவர்கள் மனித இயல்புக்கு மாறாகக் கூடிய வேகம் காட்டுவதாகக் குறிப்பிட்டார். அவரது நூல் பல புதிய கருத்துக்களுக்கும் பார்வைகளுக்கும் வழி திறந்துவிட்டது.

## பெறுமதிகளும் விலைகளும்

பெறுமதி மற்றும் விலை பற்றிய கோட்பாடுதான் பழம் கோட்பாடுகள் பற்றிய வாதப் பிரதிவாதங்களின் அடிநாதமாக இருந்து வந்துள்ளது. பொருளியலாளர்கள் எப்போதுமே விலைக்கோட்பாடு பற்றி அலசி ஆராய்ந்து வந்துள்ளனர். மார்ஷல் விலைக் கோட்பாட்டில் முக்கியமான பல பங்களிப்புகளை வழங்கியுள்ளார். உதாரணமாக, கேள்வி நெகிழ்ச்சி (elasticity of demand) என்னும் எண்ணக்கருவை அறிமுகஞ் செய்தவர் அவரே. ஒரு பொருளின் விலையில் ஏற்படும் மாற்றங்கள் எந்தளவுக்கு அப்பொருளுக்கான கேள்வியைப் பாதிக்கும் என்பதைக் கேள்வியின் நெகிழ்ச்சி விளக்குகிறது. கேள்வியானது கூடிய நெகிழ்ச்சித்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பின் விலை மற்றும் உற்பத்திக் கொள்கையில் வித்தியாசமான பல காரணிகள் செல்வாக்கு செலுத்தும். மார்க்ஸியவாதத்தின் பெறுமதி மிகையின் எதிர்வடிவமாக மார்ஷல் நுகர்வோர் மிகை (Consumer surplus) பற்றிக் குறிப்பிட்டார். இதன் பொருள் ஒரு பொருளைக் கொள்வனவு செய்ய ஒரு நுகர்வோன் வழங்க விரும்பும் விலைக்கும் அவன் உண்மையில் வழங்கும் விலைக்கும் உள்ள வேறுபாடு என்பதாகும்.

நிறைபோட்டி நிலவுகிறது என்ற அடிப்படையிலேயே பல விலைக் கொள்கைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. பின்னர் தனக்கு நன்மை எது என்பதைத் தீர்மானிக்கும் ஒரு தனியுரிமையாளன் எவ்வாறு விலையைத் தீர்மானிப்பான் என்பதற்குப் பொருளியலாளர்கள் இலகுவாக விளக்கமளித்தனர். விற்பனையைஅதிகரித்து விலைகளைக் குறைப்பதன் மூலம் அவன் இலாபமடைய முடியும். போட்டியானது அவனை ஒரு புள்ளிக்குக் கீழ் நிறுத்தி வைக்கும். இவற்றைச் சமன்பாடுகளின் மூலமும் வளைவுகளின் மூலமும் இலகுவாக விளக்க முடியும். ஆனால் விற்பனை, கொள்வனவு ஆகியவற்றில் பொருளியலாளர் கூறும் போட்டியோ அல்லது எளிமையான தனியுரிமையோ நமது பொருளாதார ஒழுங்கில் ஒரு பண்புக் கூறாக விளங்குகின்றது எனக் கூறுவதற்கில்லை என்பது நீண்ட காலமாகவே தெளிவாகியுள்ளது. உண்மையான நிலை இந்த இரண்டு அந்தங்களுக்கும் இடைநடுவில் எங்கோ உள்ளது.

மார்ஷலைப் பின்பற்றிய பல பொருளியலாளர்கள் "நிறைவில் போட்டி" (Imperfect competition), "தனியுரிமைப் போட்டி" (Monopolistic competition), "சிலருரிமை" (Oligopoly) (குறிப்பிட்ட சில விற்பனையாளர்) "சிலருரிமை" (Oligopsory) (குறிப்பிட்ட சில வாங்குவோர்) ஆகியவை பற்றிச் சிந்திக்கவும் எழுதவும் தலைப்பட்டனர். இவ்விடயங்கள் சிந்தனைக்கும் தர்க்கத்துக்கும் பிரசுரங்களுக்கும் வாய்ப்பளித்தன. எனினும் இவற்றில் முக்கிய பங்களிப்புச் செய்தோராக ஆங்கிலேயரான ஜோன் றொபின்சன் (Joan Robinson), அமெரிக்கரான எட்வேர்ட் சாம்பர்லின் (Edward Chamberlain) ஆகியோரைக் குறிப்பிடலாம்.

பழம் மரபுகளிலிருந்து உதயமாகிய இக்கோட்பாடுகள் அவற்றைப் போலவே விலைகள் உண்மையில் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்னும் விடய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. தர்க்கரீதியான உய்த்தறிதலுக்கு இவ்வாறான எளிமைப்படுத்தல் மிகவும் முக்கியமானது. ஓர் உண்மையான சந்தையில் பல்வேறு காரணிகளின் தாக்கங்கள் விலைகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றி எவரும் நிச்சயமாகக் கூறிவிட முடியாது. அனுபவத்தின் அடிப்படையில் சோதித்து நிறுவக் கூடிய கோட்பாடுகள் அரிதாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் உலகப்போர் (1914-1918) பழம் பொருளியல் மரபுகளின் அடித்தளத்தையே ஆட்டங் காணச் செய்தது. சர்வதேச வர்த்தகத்தையும் கொடுப்பனவுகளையும்போர் தடைசெய்தது. இதுவரை இல்லாத அளவுக்கு அரசாங்கங்களைப் போர் சார்ந்த உற்பத்தி விடயங்களிற் தலையிடச் செய்தது. பாரிய அரசாங்கக் கடன்களை ஏற்படுத்தியது. இவ்வாறான நிலைமை 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்த நெப்போலியப் போர்களுக்குப் பின்னர் ஏற்படவேயில்லை. அப்போதும் கூட சனத்தொகையில் இவ்வாறு பெருந்தொகையினர் போருக்குள் இழுபடவில்லை. நாடுகளின் செல்வம் இந்தளவுக்கு வீணாக்கப்படவில்லை. அத்துடன் முன்னைய பொது ஐரோப்பிய யுத்தமானது கைத்தொழிலாக்கத்தின் ஆரம்ப விரிவாக்கத்தின் போதே ஏற்பட்டது. ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே பிரித்தானியாவும் இதற்கு முன் எப்போதுமில்லாதவாறு துன்பங்களை அனுபவித்தது. தன்னுடைய வெளிநாட்டு முதலீடுகளின் பெரும்பகுதிகளைப் போர்ச் செலவினங்களுக்காக விற்பனை செய்தது. ஐக்கிய அமெரிக்காவுக்குப் பெருங் கடனாளியாகியது. போரின் போதும் அதன் பின்னரும் பணவீக்கமும், பொருட்களின் விலையேற்றமும் அந் நாடுகளிலும் கிடுகிடுவென அதிகரித்தன. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருமந்தம் காரணமாக 1920-21 ஆண்டுகளில் விலைகள் கிடுகிடுவெனச் சரிந்தன. 1920களில் பிரித்தானியாவின் ஏற்றுமதிச் சந்தை வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி நாடுகளில் வேலையின்மை அதிகரித்தது.

தொழிற்சங்க இயக்கம் பெரும் வலிமை பெற்றது. கைத்தொழிற் தொழிலாளர்களை நிராகரிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பிரித்தானியாவிலும் ஐரோப்பாவிலும் சோசலிச சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்த அரசியற் கட்சிகளின் மையமாக இவர்கள் அமைந்தனர். இவர்கள் சிறுபான்மையினர் எனினும் அதிகளவு வல்லமையைக் கொண்டிருந்தனர். ரஷ்யாவில் மாக்ஸியவாதப் புரட்சி உண்மையிலேயே தோன்றியதோடு பரவக் கூடிய அபாயமும் தோன்றியது. முதலாளித்துவ ஆதரவாளர்கள் தமது அடித்தளம் ஆடுவதை உணர்ந்து வெளியகத் தாக்குதல்களுக்கு எதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயன்றனர். இக்காலத்தில் தமது கோட்பாடுகளை மீளாய்வு செய்வதும், உறுதியைப் பேணும் கொள்கைகளைக் கண்டறிவதும் பொருளியலாளர்களுக்குத் தவிர்க்க முடியாத விடயங்களாயின. தனியார் தொழின் முயற்சிகளையும், சுதந்திரமான சந்தை முறைமைகளையும் தொடர்ந்து இயங்கச் செய்தால் முழுமையான சமநிலையை அடைய முடியும் என்று நம்பிய பழம் பொருளியலாளர்கள் இப்போது ஏற்பட்ட அரச தலையீடுகளின் காரணமாக ஒரு புதிய ஆரம்பத்தை ஏற்படுத்தத் திரும்பவும் அரசாங்கத் தலையீடு அவசியம் என்பதை உணர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1929 இல் முதலாளித்துவ உலகத்தின் நீண்ட பெருமந்தத்தினால் ஐக்கிய அமெரிக்கா உட்பட சகல நாடுகளும் துன்பம் அடைந்த போதும் சிந்தனைக் குழப்பம் மேலும் தீவிரமடைந்தது. இந்தச் சிக்கல் நிலையைத் தீர்ப்பதற்கு எவராவது ஏதாவது கருத்துக்களை முன்வைக்கும் போது அதனைக் கேட்பதற்குப் பலரும் விருப்பமாயிருந்தனர். இத்தகைய நெருக்கடி காரணமாக எழுந்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வழி சொல்லக் கூடியவர்களுக்குச் செல்வாக்கு அதிகரித்தது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னால் இருந்த சூழ்நிலைக்குப் பின்னர் கோட்பாடுகளின் தேவை இதைப் போல எப்போதுமே உணரப்படவில்லை.

இக்காலத்திற் தொழில்நுட்பப் பொருளாதாரத்தில் இரண்டு முக்கியமான அம்சங்கள் தெளிவாகத் தெரிந்தன. ஒன்று பணம் பற்றிய கோட்பாடாகும். ஏனெனில் பணவீக்கம் விலையுயர்ந்த சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றுடன் பணம் முக்கிய தொடர்பு கொண்டிருந்தது. இரண்டாவது விடயம் தேசிய அரசுகள் வேலையின்மையைக் குறைப்பதற்கு ஏதேனும் செய்ய முடியுமா என்பதாகும். இவ்விரண்டு விடயங்கள் பற்றியும் வாதப் பிரதிவாதங்கள் நிறையவே எழுந்தன. ஆனால் இவற்றில் இவற்றைப் பற்றிய மிகச் சிறப்பான கருத்துக்களை அப்போது முன்வைத்தவர் ஜோண் மேனாட் கெயின்ஸ் (John Maynard Keynes) என்பவரே. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொருளியலாளரான கெயின்ஸ் மார்ஷலின் சிறந்த மாணவராவர். கெயின்சின் கருத்துக்கள் போன்று வேறு பல பொருளியலாளர்களும் முன் வைத்த போதும் அவை பழமையான காரண காரிய அடித்தளத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் மரபு சார்ந்த முறைகளையே கையாண்டு, பழைய ஞானத்தின் அடிப்படையில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பழம் பொருளியலாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளைக் கெயின்ஸ் மறுதலித்தார். இது உண்மையில் ஒரு புரட்சியாகும். இவ்வாறு கெயின்ஸ் ஒரு புதிய பொருளியல் மரபின் நாயகனாக உருவாகினார். அவரது கோட்பாடுகளைப் பற்றிய விளக்கத்துக்கு முன்னர் அவருக்கு முன்னிருந்த சில பொருளியற் கருத்துக்களை நோக்குதல் நல்லது.

## பணம் பற்றிய கருத்துக்கள் - தங்க நியமம்

பணம் பற்றிய தத்துவார்த்த ஆய்வு எந்தவொரு பொருளியல் விடயத்தையும் போன்றே பழமையானது. "நல்ல" பணம் "உள்ளார்ந்த பெறுமதி" (Intrinsic value) கொண்டதா? தங்கமும் வெள்ளியும் ஏனையவற்றைப் போன்ற பண்டங்கள் தானா? அல்லது ஏனைய பண்டங்களின் பெறுமதியை அளவிடும் கருவிகளா? பணம் உற்பத்தித் திறன் கொண்டதா? அது மூலதனமா அல்லது மூலதனத்தையும் ஏனைய பண்டங்களையும் வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடு செய்யும் கருவியா? இவற்றுக்கு வெளிப்படையான பதில் இல்லை. எனவே நாம் இவை பற்றிக் கூடுதலாக விசனம் கொள்ளத் தேவையில்லை.

எனினும் பணத்தின் வரலாற்று ரீதியான அபிவிருத்தி பற்றிப் பருமட்டாக அறிந்திருப்பது நன்று. ஆரம்ப கால மரபு ரீதியான பொருளியலாளர் பணம் என்பது விலைமதிப்புள்ள உலோகம் மற்றும் அவற்றிலிருந்து உருவாக்கப்படும் நாணயங்கள் என்று கருதினர். விற்பதற்கும் வாங்குவதற்கும் கடன் பெறுவதற்கும் கொடுப்பதற்கும் மக்கள் கடதாசித் துண்டுகளையும் பயன்படுத்தினர். ஆனால் பின்னர் பெறுமதியான தங்கம் அல்லது வெள்ளியை வழங்குவதற்கான உறுதிப்பத்திரங்களாகவே இருந்தன. அரசாங்கமும் தனிமனிதர்களும் இப்பத்திரங்களைப் பயன்படுத்தினர். சிலவேளைகளில் இப்பத்திரங்களைக் கொடுத்து ஏற்கனவே வைப்பிலுள்ள தங்கம் அல்லது வெள்ளியைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது.

வங்கி முறை நடைமுறையில் வந்த போதுதான் நாணயத்துக்குப் பதிலாக வங்கி நோட்டுக்கள் பெரிதும் புழக்கத்துக்கு வந்தன. இவ்வங்கி நோட்டுக்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்டளவு தங்கத்தை அல்லது வெள்ளியை வழங்குவதற்கான உறுதிப்பத்திரங்களேயாகும். ஒரு வங்கியின் மதிப்பு இப்பத்திரங்களைக் கௌரவிப்பதில் தங்கி இருந்தது. காலப் போக்கில் மக்கள் இப்பத்திரங்களை வங்கியில் கொடுத்து மாற்றுவதற்குப் பதிலாக பிறருக்குத் தாம் செய்ய வேண்டிய கொடுப்பனவுகளுக்குப் பதிலாக இவற்றைக் கையளித்தனர். பின்னர் வங்கிகள் தம்மிடம் உள்ள உலோக இருப்பை விட மேலதிகமாக இந்நோட்டுகளை வழங்கத் தொடங்கின. தாம் வழங்கும் நோட்டுகளின் பெறுமதியில் ஒரு பகுதி வங்கியில் இருப்பிலிருந்தால் போதுமானது எனக் கருதப்பட்டது. ஆனால் வங்கிகளின் முழுச்சொத்துப் பெறுமதி அதனுடைய பொறுப்புகளை விடக் குறைந்துவிடக் கூடாது எனக் கருதப்பட்டது. இவ்வாறான உலோக நாணயப் பணத்தை விடப் பேப்பர் பணம் அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இன்னொரு அபிவிருத்தி வங்கி இருப்புகளைக் காசோலை மூலம் மாற்றுவதாகும். இது அமெரிக்காவில் சிவில் யுத்தம் வரை பிரசித்தமாக இருக்கவில்லை. ஆனால் பின்னர் பெருமளவு கொடுப்பனவுகளை இம்முறையே ஆக்கிரமித்துக் கொண்டது. இவ்வாறு பணப்பெறுமதியை அடிப்படையில் தங்கம் அல்லது வெள்ளியின் பெறுமதியுடன் தொடர்புபடுத்தும் நடைமுறை 1930 வரை சர்வதேசரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பணக் கணியக் கோட்பாடு

தனது காலத்தின் ஏனைய பொருளியல்ாளர்களைப் போலவே அடம்ஸ்மித்தும் அமெரிக்காவிலிருந்த ஸ்பானியக் குடியேற்றங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தங்கம், வெள்ளியின் காரணமாகவே ஐரோப்பாவில் விலைவாசிகள் தொடர்ச்சியாக அதிகரித்தன என நம்பினார். பொருளியலாளர்கள் பொதுவாகப் பணத்தின் கணியக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர். அதாவது கூடிய பணம் இருந்தால் கூடிய விலைகள், குறைந்த பணம் இருந்தால் குறைந்த விலைகள். இக்கருத்து காலம் காலமாக வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்ட போதும் இது பொதுவாகப் பொருளியலாளர்களினால் மட்டுமன்றி சாதாரண பொதுமக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது.

அமெரிக்கக் குடியேற்றவாதிகளிடமிருந்த பொதுவான ஒரு மனக்குறை தமது வர்த்தக முயற்சிகளுக்கும் தமது கடன்களைத் தீர்க்கவும் தம்மிடம் போதிய பணம் இல்லை என்பதாகும். அவர்கள் பணத்தைப் பெறுவதற்காக நோட்டுகளை அச்சடிக்க முயன்ற போது பிரித்தானிய அரசாங்கம் பணவீக்கம் ஏற்படும் எனக் கூறி அதனை நிறுத்தியது. பிரான்சில் ஜோண் லோ (John Law) பணப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக நிலத்தின் அடிப்படையில் கடதாசிப் பணத்தை வழங்கிய போது கூடிய நிரம்பலினாற் பணவீக்கம் ஏற்பட்டு பின்னர் அது வீழ்ச்சியும் அடைந்தது. அமெரிக்கப் புரட்சி யுத்தத்தின் போது ஃபியட் பேப்பர் பணம் (Fiat paper money) வழங்கப்புட்டது. அது பெருந்தொகையாக வழங்கப்பட்டதால், எவ்வித பிரயோசனமும் அற்றதாக மாறியது. 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் பணத்தின் வகை, அளவு பற்றி அமெரிக்காவில் அரசியற் பிரச்சினைகள் தோன்றியவண்ணம் இருந்தன.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யேல் பல்கலைக்கழகத்தின் பொருளியற் பேராசிரியராக இருந்த ஈர்விங் பிஷர் (Irving Fisher) (1867-1947) வளமான காலத்தின் போதும், மந்தத்தின் போதும் நிலையான விலைகளைப் பேணும் நோக்கத்துடன் பணம் பற்றிய பிரச்சினையிற் கவனம் செலுத்தினார். அவர் பின்வரும் கருத்துக்களைக் கூறினார். பணம் அதிகரிக்கும் போது விலைகள் உயர்கின்றன. விலைகள் வீழ்ச்சியடைவது குறைவு. தீவிர பணவீக்கம் ஏற்படும் போது விலைகள் பெரிதும் உயர்ந்து பணத்தைப் பயனற்றதாக்குகின்றது என்பதை அனைவரும் ஏற்கின்றனர். கடன் வாங்குவது தற்காலிகமாகத் தடைப்படும் போது பயம் ஏற்படுகிறது. இது தடுக்கப்படல் வேண்டும். பொதுவான விலை மட்டத்தில் ஏற்படும் தளம்பல்கள் தவிர்க்கப்படுதல் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் விலை உயரும் போது ஒவ்வொருவரும் தமக்கு ஏற்படக் கூடிய இலாபம் கருதிக் கொள்வனவு செய்கின்றனர். விலைகள் வீழ்ச்சியடையும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் விற்க முயல்கின்றனர். அதாவது வாங்குவதைத் தவிர்க்கிறார்கள். வாங்குதல் விற்றல் தொடர்பான இந்த மாற்று அலைகள் வர்த்தகத்தில் அல்லது வேலை வாய்ப்பில் ஒழுங்கின்மையைத் தீவிரப்படுத்துகின்றது.

"ஆகவும் குறைந்த" (Too little) அல்லது "ஆகவும் கூடிய" (Too much) பணம்மென்றால் என்ன? விலைகளுக்கென்ன நடக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தீர்மானிக்கலாம். விலை உயர்வு பணத்தின் வழங்கலைக் கட்டுப்படுத்துகிறது. விலை வீழ்ச்சி பணத்தின் அளவைக் கூட்டுகிறது. எனவே "உறுதியான பணம்" (stable money) என்பது விலைகள் பற்றிய புள்ளிவிபர ஏற்பாடுகளை வற்புறுத்துகிறது. இதன் மூலம் விலைவாசிப் போக்கின் ஒரு விலைச் சுட்டெண் மாதிரியைப் பெற முடியும்.

பணத்தைப் பற்றிய அவர்களது கணியக் கோட்பாடு கூடிய தர்க்கரீதியான அடிப்படையைக் கொண்டிருந்தது. பணத்தை ஒரு பரிமாற்ற ஊடகமாகக் கொண்டால் அதனைச் செய்யக் கூடிய கருவிகளையும் பணமாகக் கொள்ள வேண்டும். தங்கம், வெள்ளி, நோட்டுகள் மட்டுமல்லாது வங்கி இருப்பையும் பணமாகவே கொள்ள வேண்டும். பண்டங்களையோ அல்லது சேவைகளையோ டொலர்களுக்காகக் கைமாற்றும் போது அப் பரிமாற்றத்தில் பணத்தின் பயன்பாடு உள்ளது. இதனை நாம் கொடுக்கல் வாங்கல் (Transaction) எனலாம். இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கைக்குச் சமமாகப் பணச் சுழற்சி இருக்குமானால் சராசரி விலைமட்டம் ஒரே அளவில் இருக்கும். கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையைவிட வேகமாகப் பணச்சுழற்சி அதிகரிக்குமாயின் விலைகள் உயரும். மறுதலையாகப் பணச்சுழற்சியை விடக் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் விலைகள் வீழ்ச்சியடையும். சுழற்சி (velocity) என்பது பயன்பாட்டிலுள்ள பணத்தின் அளவு மற்றும் அது கைவிட்டுக் கை மாறும் வேகம் ஆகியவற்றின் விளைவாகும்.

கடன் வாங்கப்படும் பணத்தின் விலைதான் வட்டி. எனவே பழம் பொருளியலாளர்கள் விலைக்கோட்பாட்டின் அடிப்படையில் வட்டி பற்றிய பல கருத்துக்களை முன் வைத்தனர். கேள்வி நிரம்பற் கோட்பாட்டினை அவர்கள் கடன்களின் கேள்வி நிரம்பலிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவதற்குப் பிரயோகித்தனர்.

"ரேகோட்" (Turgot) என்பவர் சேமிப்பு, பணத்தின் வழங்கலை அதிகரிக்கிறது எனக் கூறுகிறார். "செ" என்பார் ஏற்படக்கூடிய ஆபத்து, உடனடிப் பணமாக (Liquidity) மாற்றக் கூடிய தன்மை ஆகியவை கடன்கள் மீது பெறப்படும் விகிதங்களுக்கான காரணிகள் எனக் கூறினார். எல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக் கோட்பாட்டாளர்கள் கடன் வாங்குபவர் வாங்க விரும்பும் கடன், கொடுப்பவர் கொடுக்க விரும்பும் பணத்தின் இறுதி அலகுக்கான (Last unit) கேள்வியே விகிதத்தைத் தீர்மானிக்கிறதெனக் கூறினார். சிலர் வட்டியானது பணத்தைச் சேமிப்பதற்காக மற்றவற்றை மறுக்கும் நபர்களுக்கான வெகுமதி எனக் கூறினர். எனவே உயர்ந்த வட்டி வீதங்கள் சேமிப்பை ஊக்குவித்து மூலதன வழங்கலை உயர்த்துகின்றன. அதே நேரத்தில் உயர்ந்த வட்டி வீதங்கள் கடன் வாங்குபவர்களின் விருப்பத்தைக் குறைக்கின்றன. இவ்வாறான கருத்துகள் மூலம் பழம் பொருளியலாளர்கள் வட்டியைப் பொறுத்த வரையில் தமது வழமையான சமநிலைக் கோட்பாட்டையே கொண்டு வந்தனர். சம்பந்தப்பட்ட சகல காரணிகளும் சமநிலையடையும் ஒரு இயற்கை விகிதமும் உண்டு. பணத்தை மூலதனமாகப் பயன்படுத்த விரும்பும் நபர்களுக்குச் சட்டரீதியாகத் தேவைப்படும் பணத்தின் தேவையை நிறைவேற்ற அவசியமான சேமிப்பினை இந்த விகிதமே தீர்மானிக்கிறது. பணத்துக்கான கேள்வியும் நிரம்பலும் "இயற்கையான" விகிதத்திற் சமமாகவே இருக்கும்.

பொருள் சார்ந்த முன்னேற்றத்துக்கு மூலதனத்தின் வளர்ச்சியே பொறுப்பாக இருந்தது. எனவே பணத்தின் கேள்வி நிரம்பலில் இருந்து எழும் "இயற்கை" விகிதத்துக்கு மேலாகவோ அல்லது கீழாகவோ வட்டி விகிதத்தை வைத்திருந்தால் அது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். அத்தகைய ஒரு செயற்பாடு சமூகத்தின் பணத்தேவையைப் பூர்த்தி செய்யும். சேமிப்புகளை உருவாக்கும் நுண்ணிய பொறிமுறையைச் சிதைத்துவிடும். எனினும் புதிய கோட்பாட்டாளர்கள் இதனையே வேண்டி நின்றனர். உதாரணமாக மந்தகாலத்தின் போது கூடிய கடன்களைப் பெறுவதற்காக வங்கிவீதத்தைக் குறைக்க வேண்டுமென நிதி முகாமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அதேபோல செழிப்பான காலத்தில் ஆரோக்கியமற்ற விரிவாக்கத்தைத் தடைசெய்வதற்காக வட்டி விகிதத்தை உயர்த்துமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஆனால் கெயின்ஸ் முன்வைத்த ஆலோசனைகள் பழம் பொருளியற் கோட்பாட்டின் ஜாம்பவான்களையே அதிர்ச்சியடையச் செய்தது. வேலையின்மையைக் குறைப்பதற்கு அரசாங்கமே ஏதாவது செய்ய வேண்டும் என்னும் கருத்துத்தான் இத்தகைய சிந்தனைப் போக்கில் கூடிய செல்வாக்குச் செலுத்தியது. தனியார் தொழின் முயற்சிகளின் அனுபவம் இதனையே எடுத்துக்காட்டியது. பின்னர் இக்கருத்து கெயின்ஸினால் சிறப்பாக முன்வைக்கப்பட்டது.

இத்தகைய சிந்தனையிற் கூடிய பங்களிப்புச் செய்த பழம் பொருளியலாளர்களில் ஏ.சி. பிக்கோ (A.C. Pigou) ஒருவராவர். மார்ஷலுக்குப் பின்னர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் பதவியேற்ற பிக்கோ 1920 இல் தனது நலப் பொருளியல் (The Economics of welfare) என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை வெளியிட்டார். "பெரும்பாலான மக்களின் நன்மைக்கு உதவும் கொள்கை அல்லது கொள்கைகள் யாவை? இக்கேள்வியைச் சுற்றியே பிக்கோ தனது கருத்துக்களை முன்வைத்தார். பிக்கோ தொழில் முகவர்களின் ஒரு தேசிய முறைமை மற்றும் தேசிய சமூகக் காப்புறுதி முறைமை ஆகியவற்றை மனப்பூர்வமாக ஆதரித்தார். மந்தகாலத்தில் பொது வேலைகள் உயர்த்தப்பட வேண்டும் எனவும் செழிப்பான காலத்தில் குறைக்கப்பட வேண்டுமெனவும் முன்வைக்கப்படும் கருத்தில் பல விடயங்கள் உள்ளன என அவர் கருதினார்.

வேலையின்மைக் காலத்தில் பொதுவேலைகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது ஒரு பண்டைய கருத்தாகும். மிகப் பழைய காலத்திலிருந்தே இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டும் பரிசோதனை செய்யப்பட்டும் வந்துள்ளது. பிக்கோ, ஹொப்சன், கெயின்ஸ் ஆகியோருக்கு முன்னரே பலர் இக் கருத்தினை ஆதரித்துள்ளனர். சுவீடிஸ் பொருளியலாளரான ஜோண் குஸ்ராவ் னூட் விக்செல் (John Gustav Knut Wicksell (1851-1926) கெயின்ஸின் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தியவர்களில் ஒருவராவர். அவருடைய கருத்துக்கள் அவரது கடைசிக் காலத்திலேயே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. அதனால் அமெரிக்க, பிரித்தானிய பொருளியற் சிந்தனைகளில் அவரது கருத்துக்கள் அதிகம் செல்வாக்குச் செலுத்தவில்லை. ஆனால் கெயின்ஸ் விக்செலின் கருத்துக்களை வாசித்ததுடன் நில்லாது அவரைப் போற்றியுமுள்ளார். விக்செல் தன்னுடைய பொதுவாழ்க்கையை ஒரு சமூக அரசியற் சீர்திருத்தவாதியாகவே ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அவர் ஒரு கணிதவியலாளராக மட்டுமே பணியாற்றினார். பின்னர் பொருளியலை அவர் கற்றதுடன் அதனை முன்னெடுத்துச் செல்லவும் முயன்றார். விக்செல் பொதுவாக விலைகள் ஏறி இறங்கும் உண்மையான உலகில் தனது கவனத்தைச் செலுத்தினார். ஏன் இவ்வாறு சகல விலைகளும் ஏறி இறங்குகின்றன என அவர் சிந்தித்தார். மொத்தக் கேள்வி ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில் மொத்த வழங்கலை விடக் கூடியோ, குறைந்தோ இருக்கலாம் என அவர் கூறினார். இவருடைய கருத்து "சே" யின் "விதி"யுடன் முரண்பட்டிருந்தது. அவர் பொதுவான கூடிய உற்பத்தி என ஒன்றில்லை எனக் கூறியிருந்தார்.

விக்செலின் கருத்தானது தேசிய வருமானப் பாய்ச்சலிற் பகுப்பாய்வை அறிமுகப்படுத்தியது. ஒரு நாட்டிலுள்ள சகல மனிதர்களினதும் வருமானத்தைக் கூட்டினால் அத்தொகையானது அந்நாட்டு மக்கள் செலவழிக்கக் கூடிய மொத்தச் செலவைக் காட்டும். அதாவது அவர்கள் வெளிப்படுத்தக் கூடிய மொத்தக் கேள்வியைக் காட்டும். நுகர்வுக்காகச் செலவழிக்கப்படும் வருமானத்தின் பகுதி கேள்வியை உருவாக்குகிறது. நுகர்வுக்காகச் செலவழிக்கப்படாத பகுதி அதாவது சேமிப்புக் கூட அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் வீடுகள், தொழிற்சாலைகள் அல்லது இயந்திரங்களில் இடப்பட்டால் கேள்வியின் ஒரு பகுதியாக மாறலாம். ஆனால் அத்தகைய மூலதனப் பொருட்களிற் செய்யப்படும் முதலீட்டை விடக் கூடுதலாக (அல்லது குறைவாக) சேமிப்புச் செய்யப்படலாம். சேமிப்பு முதலீட்டைவிட அதிகமாக இருக்கும் போது கேள்வி குறைந்து விலைகள் வீழ்ச்சியடையும். சேமிப்பு முதலீட்டை விடக் குறைவாக இருக்கும் போது மொத்தக் கேள்வி உயர்ந்து விலைகளும் உயர்வடையும். கெயின்ஸின் வேலைவாய்ப்புக் கோட்பாட்டின் (Theory of Employment) அடிப்படை இக்கருத்தேயாகும்.

பணம் பற்றிய கணியக் கேட்பாட்டை வருமானக் கோட்பாடாக மாற்றியவர் விக்செல்லாகும். சேமிப்புக்கும் முதலீட்டுக்குமிடையில் ஒரு சமநிலையைப் பேண வேண்டுமெனில் வட்டி விகிதத்தில் வெளிப்படையான மாற்றங்களைப் புகுத்த வேண்டுமென அவர் கூறினார். இவ்வாறாக பொதுவிலை நுகர்வுக் கோட்பாடு மற்றும் தேசிய வருமானக் கோட்பாடு ஆகியவற்றின் தளத்துக்கே பணக் கோட்பாட்டையும் கொண்டுவர விக்செல் காரணமாக இருந்தார். ஜோண் மேனாட் கெயின்ஸ் (John Meynard Keynes, 1883-1946) பழம் பொருளியலாளரான ஜோண் நெவில் கெயின்ஸ் (John Neville Keynes) என்பாரின் மகன். அவரது தாயாரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி. அவர் பின்னர் கேம்பிரிட்ஜ் நகரத்தின் மேயராக நியமிக்கப்பட்டார். கெயின்ஸ் கணிதம், அரசியல், மெய்யியல், ஆகிய பாடங்களில் அதீத திறமை காட்டினார்.

சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து அரசாங்கப் பதவி ஒன்றினைப் பெறும் நோக்கத்துடன் மார்ஷலுடன் சேர்ந்து பொருளியல் கற்றார். பரீட்சையில் இரண்டாவதாக வந்த கெயின்ஸ் இந்திய அலுவலகத்தில் (Indian Office) நியமிக்கப்பட்டார். அலுவலகத்தில் அவர் தமது நேரத்தைப் பொருளியல் ஆய்வு ஒன்றிலேயே செலவிட்டார். இவ்வாய்வின் மூலம் தமக்குக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற் பதவி ஒன்று கிடைக்கும் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு அப் பதவி கிடைக்கவில்லை. ஆனால் அவரது திறமையை உணர்ந்த மார்ஷல் விரிவுரையாளர் பதவியை வழங்கித் தனது சம்பளத்தின் ஒரு பகுதியைப் படியாக வழங்கினார். அடுத்த வருடம் தமது ஆய்வை மீளாய்வு செய்து கேம்பிரிட்ஜ் பதவியைப் பெற்றுக் கொண்டார். மார்ஷலின் உதவியுடன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வெளியிட்ட "பொருளியற் சஞ்சிகை" (Economic Journal) என்னும் சஞ்சிகையின் ஆசிரியர் பதவி அவருக்குக் கிட்டியது. கெயின்ஸ் தனது நேரத்தைப் பணக்கோட்பாடு பற்றிய கற்கைகளிலேயே செலவிட்டார். 1913 இல் "இந்தியாவின் நிதி மற்றும் நாணயம் பற்றிய றோயல் ஆணைக்குழு" (Royal Commission on Indian Currency and Finance) என்னும் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். தமது கோட்பாட்டு ஞானத்தை நடைமுறைப் பிரச்சினைகளுடன் இணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தயாரித்த ஒரு மனுவானது அவருக்குப் பாராட்டைப் பெற்றுத் தந்தது. இதனைத் தொடர்ந்து கோட்பாடு அம்சங்களை நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு கருவியாக அவர் பயன்படுத்தினார். அதனால் அவரது கருத்துக்களை அடிக்கடி மாற்ற வேண்டியிருந்தது. ஒரு ஆய்வாளருக்குக்குரிய உறுதித் தன்மை இல்லாத காரணத்தால் அவர் விமர்சனத்துக்கும் உள்ளானார்.

முதலாம் உலக யுத்தத்தின் போது கெயின்ஸ் திறைசேரியில் நியமனம் பெற்றார். பின்னர் சமாதான மகாநாட்டில் ஓர் ஆலோசகராகவும் நிமிக்கப்பட்டார். "சமாதானத்தின் பொருளாதார விளைவுகள்" (Economic Consequences of Peace) என்னும் அவரது நூல் பாரிய வெற்றியை அடைந்தது. அந்நூலில் ஜேர்மனி மீது திணிக்கப்பட்ட நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை அவர் கண்டித்தார். இச் செயற்பாடுகள் ஐரோப்பாவின் உற்பத்தித் திறனை எவ்வாறு பாதிக்கும் எனவும் அவர் எடுத்துக் காட்டினார். இந்நூலானது கெயின்சுக்கு எதிர்ப்பையும் அதேவேளை பாராட்டுதல்களையும் கொண்டு வந்தது.

## கெயின்ஸின் பொதுக் கோட்பாடு - வேலைவாய்ப்பு

கெயின்ஸ் தனது மகத்துவம் பொருந்திய நூலைச் சிறந்த அறிமுக உரையுடன் ஆரம்பித்தார். மரபுவழி மற்றும் நவீன மரபுவழிக் கோட்பாடுகள் தர்க்கரீதியானவை. எனினும் பல ஊகங்களை அடிப்படையாகக் கொண்ட விசேட நிலைமைகளுக்கு மட்டுமே உண்மையானவை என அவர் கூறினார். எடுகோள் அடிப்படையிலேயே மரபுவழிக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் கெயின்ஸ் யதார்த்தமற்ற ஊகங்கள் அவசியமில்லாத ஒரு பொதுக் கோட்பாட்டை வகுத்தார். வேலைவாய்ப்புகளில் ஏற்படும் தளம்பல் நிலைமைகள் பற்றி மரபுவழிக் கோட்பாடுகள் பெரிதாக எதுவும் கூறவில்லை. எந்த ஒரு திறந்த பொருளாதாரத்திலும் கேள்வி-நிரம்பற் சமநிலைக்கு ஏற்ற வண்ணம் உற்பத்தியானது தளம்பல் நிலைமையைக் கொண்டிருக்கும். இச் சமநிலையில் வேலை செய்யும் வல்லமை கொண்ட ஒவ்வொருவரும் ஒரு தொழிலைப் பெறுவர். ஊழியம் கேள்விக்கு அதிகமாக இருப்பின் ஊதியம் வீழ்ச்சியடையும். ஊழியம் இவ்வாறு மலிவடையும் போது வேலை வழங்குவோர் மேலும் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவர். இதிலிருந்து நாம் விளங்குவது என்னவெனில் ஊழியர்கள் குறைந்த ஊதியத்தைப் பெறுவதற்கு விடாப்பிடியாக மறுத்தால் மாத்திரமே பாரிய வேலையின்மைப் பிரச்சினை தோன்றும். எனவே "தன்விருப்பற்ற வேலையின்மை" (Involuntary Unemployment) என எதுவுமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கோட்பாடு தர்க்கரீதியாகத் தோன்றிய போதிலும் உண்மையான உலகத்தில் பிரயோகிக்கக் கூடியதாக இல்லை எனக் கெயின்ஸ் உணர்ந்தார். தமது தொழிலை விட்டு விட நேர்ந்தாலும் கூட தொழிலாளர்கள் தமது சம்பளக் குறைப்பை ஏற்றுக் கொள்வதில்லை. தொழிற்சங்கங்கள் பொருளாதார முறைமையின் ஒரு பகுதியாக உள்ளன. பாரிய வேலையின்மை அடிக்கடி ஏற்படுகிறது. ஆனால் மந்த காலத்தில் தொழிலாளரின் அனுபவம் என்னவெனில் எத்தகைய குறைந்த வேதனத்திலும் அவர்களால் எந்தவொரு தொழிலையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதாகும். கெயின்ஸ் மரபுரீதியான பொருளாதாரக் கோட்பாட்டு மாதிரிகளை நன்கு கற்றறிந்திருந்த காரணத்தினால் தானே ஒரு சமநிலைக் கோட்பாட்டை உருவாக்குவதற்கு முனையவில்லை. கேள்வி நிரம்பலுக்கிடையில் சமநிலை ஏற்பட முடியும். அது வேலைவாய்ப்பு மட்டத்தைத் தீர்மானிக்கும். ஆனால் இந்த மட்டமானது திறமைமிக்க தொழிலாளர்களிற் பெரும்பாலானோரை வேலையற்றோராக வைத்திருக்கவும் கூடும் என அவர் விதித்தார். உயர் வேதனம் வேலையின்மைக்கான காரணம் என்பதை அவர் மறுதலித்தார். வேதனத்தைக் குறைத்தல் என்பது கோட்பாட்டு ரீதியாக வட்டி விகித வீழ்ச்சி ஏற்படுத்தும் தாக்கத்துக்குச் சமமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என அவர் கூறினார். எனவே வேதனக் குறைப்பினால் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் எதனையும் வட்டி விகிதக் குறைப்பினாலும் அடைய முடியும். ஆனால் இவ்விரண்டுமே போதுமான பரிகாரம் எனக் கூறமுடியாது எனக் கெயின்ஸ் கூறினார்.

பொதுவான வேலையின்மை, வேதன அதிகரிப்பினால் மாத்திரம் தோன்றியதில்லை எனில் என்ன காரணத்தினால் அது தோன்றுகிறது? இதனை விளக்குவதற்குக் கெயின்ஸ் ஒரு சர்வசாதாரணமான ஒரு கூற்றினைப் (Truism) பிரயோகித்தார். அதாவது ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. அதாவது கொடுப்பவர் செலவழிக்கும் அதே அளவுக்குப் பெறுபவர் வருமானத்தைப் பெறுகிறார். அதைவிட அதிகமாக ஒன்றுமில்லை. வருமானமானது ஒரு பொருளாதார முறைமையில் ஒரு சுழல் வட்டமாகப் பாய்கிறது. பொதுக் கேள்வியில் வீழ்ச்சி ஏற்படுகிறதெனில் அது வருமானப் பாய்ச்சலில் ஏற்படும் சுருக்கத்தின் காரணமாகவேயாகும். பணத்தை அதன் பாய்ச்சல் வட்டத்திலிருந்து தடுத்து வைப்பவர் யார்? அவர் ஏன் அவ்வாறு செய்கிறார்? நுகர்வோரினால் (ஒவ்வொருவரும் நுகர்வோர் தான்) செலவழிக்கப்படும் பணம் செலவழிக்கப்படுவதிலிருந்து தடுக்கப்படுவதில்லை. தடுத்து வைக்கப்படும் பணம் தான் - தற்காலிகமாகவேனும் - சேமிப்பு எனப்படுகிறது.

மரபுவாதிகள் சேமிப்பு முழுவதும் கட்டாயமாக முதலீட்டாளர்களினால் வர்த்தகத்தில் அல்லது உற்பத்தியில் செலவழிக்கப்படுகிறது என வழக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊகித்துக் கூறினர். கெயின்ஸ் விக்செல்லைப் போலவே இந்த ஊகத்துக்கு மறுப்புத் தெரிவித்தார். பணத்தைச் சேமிப்பவர்கள் எல்லோரும் முதலீட்டாளர்கள் அல்லர். அவர்களது நோக்கங்கள் வித்தியாசமானவை. சாதாரண மனிதர்கள் பணத்தைச் சேமிப்பு வங்கிகளிலோ காப்புறுதிகளிலோ சேமிக்கிறார்கள். யாராவது இப்பணத்தை வீடுகள் கட்டவோ அல்லது வர்த்தகத்தை விரிவாக்கவோ பயன்படுத்தாத வரை இப்பணம் செலவழிக்கப்படுவதுமில்லை. முதலீட்டுக்காகச் செலவழிக்கப்படுவதை விடக் கூடிய பணம் நுகர்வுக்காகத் தடுத்து வைக்கப்படும். இதுவே மொத்த வருமானத்தின் மேல் நோக்கிய அல்லது கீழ் நோக்கிய நுகர்வுகளுக்குக் காரணமாகிறது.

கெயின்ஸ் இந்தத் தர்க்கத்தை உண்மையான மரபுவழி அடிப்படையில் ஒரு கணித வாய்ப்பாடாகத் தந்தார்.

$$Y = C + I$$

இங்கு Y என்பது மொத்த வருமானம்; C என்பது நுகர்வோரின் பண்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை; I என்பது முதலீடுகளுக்காகச் செலவழிக்கப்பட்டு அதன் விளைவாக உற்பத்தியிற் பெறப்பட்ட தொகை (மூலதனம்)

இங்கு தெளிவாக விளங்குவது என்னவெனில் சேமிப்பு (S) என்பது மொத்த வருமானத்திலிருந்து (Y) நுகர்வுக்கு (C) செலவழிக்கப்பட்ட தொகையைக் கழித்துப் பெறும் தொகையாகும். அல்லது,

$$S = Y - C$$

இந்த இரு சமகால வாய்ப்பாடுகளிலிருந்து S=I என்னும் வாய்ப்பாட்டைப் பெறுவது இலகுவாகும்; அதாவது சேமிப்பு முதலீட்டுக்குச் சமமாகும். ஆனால் கெயின்ஸின் முக்கிய கருத்து என்னவெனில் சேமிப்பு என்பது முதலீட்டுக்குக் கட்டாயமாகச் சமமாக இருக்க வேண்டும் என்பதல்ல என்பதாகும். எனவே மேற்படி இரு சமன்பாடுகளும் அவரது கோட்பாட்டுக்கு எதிரானவைகளாக அல்லவா உள்ளன? இதற்கான விடை மக்கள் சிலவேளைகளில் முதலீட்டை விடக் கூடுதலாகச் சேமிக்கும் நோக்கம் கொண்டுள்ளனர் என்பதாகும். ஆனால் உண்மையான முதலீடு மக்கள் சேமிக்க நினைப்பதற்குச் சமமாக இல்லை எனில் அவர்களது வருமானம் வீழ்ச்சியடையும். அதன் காரணமாக உண்மையில் முதலீடு செய்வதை விடக் கூடுதலாகச் சேமித்து விட முடியாது. சேமிக்க எண்ணுகின்ற தொகை முதலீடு செய்ய நினைக்கும் தொகைக்குச் சமமாக இருக்க வேண்டுமெனில் பொருளாதாரம் சமநிலையில் காணப்படும். எனவே மேற்படி சமன்பாடுகளானவை எண்ணுகின்ற முதலீட்டுக்கும் எண்ணுகின்ற சேமிப்புக்குமிடையிலுள்ள சமநிலையைக் காட்டுகின்றன. இச்சமநிலையை நோக்கியே பொருளாதாரம் சார்ந்துள்ளது. பொருளாதாரம் உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநிலையில் இருக்க வேண்டுமெனில் சேமிப்பிலும் முதலீட்டிலும் எவ்வித மாற்றமும் ஏற்பட முடியாது.

## கெயின்சும் பணக் கோட்பாடும்

மரபுவழிவாதிகள் பணச் சந்தையும் ஏனைய சந்தைகளைப் போலவே ஒரு "இயற்கையான" வட்டி விகிதத்தில் கேள்வி நிரம்பலின் சமநிலையைச் சார்ந்துள்ளது எனக் கூறினர். உயர்ந்த வட்டி விகிதமானது சேமிப்பை அதிகரித்து வழங்கலை உயர்த்துகிறது. அதே போன்று கடன் பெறுதலைக் குறைத்து கேள்வியையும் குறைக்கும். கீழ்மட்ட வட்டி விகிதம் இதற்கு எதிரானவற்றைச் செய்யும். கடன் பெறுவோரிற் பெரும்பாலானோர் முதலீட்டுக்காகவே கடன் பெறுவதால் சேமிப்பையும் முதலீட்டையும் சமப்படுத்துவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என மரபுவழிச் சமநிலைக் கோட்பாட்டின் மூலம் பெறப்படுகிறது.

இக் கோட்பாட்டினைக் கெயின்ஸ் மறுத்துரைத்தார். சேமிப்பும் முதலீடும் தனித்தனியாகத் தீர்மானிக்கப்படுகின்றன என அவர் கூறினார். ஊதியம் பற்றிய விடயத்தைப் போலவே கேள்வி நிரம்பலைத் தீர்மானிப்பதில் விலைகளின் பங்கை அவர் மிகவும் குறைத்தே மதிப்பிட்டார். ஏனைய காரணிகள் இதைவிட மிகவும் முக்கியமானவை என அவர் சிந்தித்தார்.

தனது வருமானத்தைச் சேமிப்புக்கும் நுகர்வுக்குமிடையில் பகிர்வதை மக்கள் எவ்வாறு தீர்மானிக்கிறார்கள்? இது பழக்கத்தைப் பொறுத்தும் தேவைகளைப் பொறுத்தும் அமைகிறது என அவர் கருதினார். மக்கள் தமக்கென ஒரு வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொண்டு அதனைப் பேணுவதற்குத் தேவையான வகையில் செலவழிக்கின்றனர். இதைவிட வேறு ஏதேனும் மிச்சம் இருந்தால் அவர்கள் அதனைச் சேமிக்கிறார்கள். அச் சேமிப்புக் கொண்டு வரும் வட்டியைப் பற்றி அவர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. ஒரு குறிப்பிட்ட வருமான மட்டத்தில் செலவழிக்கப்படும் தொகையைக் கெயின்ஸ் "நுகர்வுக்கான மனப்பாங்கு" (propensity to consume) எனக் குறிப்பிட்டார். இது உளவியல் மற்றும் சமூகக் காரணிகளின் விளைவு எனப்படுகிறது. அத்துடன் இத்தொகையானது கணித விளக்கத்தில் முக்கிய காரணியாக விளங்குவதால் அது "நுகர்வுத் தொழிற்பாடு" (Consumption Function) எனவும் அழைக்கப்படுகிறது. சேமிப்பு செய்யப்படும் தொகை என்பது நுகர்வுப் பொருட்களில் செலவழிக்கப்படாத தொகையாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதெனில் நுகர்வின் தொடர்ச்சியை வீதங்களில் அல்லது பின்னங்களிற் கூறுவதாகும். அதாவது வருமானத்தில் நுகர்வு ஐந்தில் நாலு பங்கு அல்லது 80 வீதமெனில் சேமிப்பு ஐந்திலொரு பங்கு அல்லது 20 வீதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெயின்ஸின் கோட்பாட்டின் மிக முக்கிய பகுதியை நோக்கினால் அவர், எந்த ஒரு வருமான மட்டத்திலும் ஒருவர் சேமிக்கும் தொகை அவரது வருமானத்தின் அளவில் தங்கியுள்ளது என நம்பினார். ஏழைகள் தமது வருமானம் முழுவதையும் செலவழிக்கின்றனர். அவர்கள் எதனையும் சேமிப்பதில்லை. செல்வந்தர்கள் கூடிய மிகையைக் கொண்டிருப்பதால் அவர்களது சேமிக்கும் ஆர்வமும் உயர்ந்து செல்கிறது. இந்த அவதானம் பொது அறிவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் புள்ளிவிபரங்களின் துணையினால் உறுதிப்படுத்தப்பட்டுமுள்ளது. கெயின்ஸ் தன்னுடைய பிரதான கோட்பாட்டுக்கான பல முக்கிய அனுமானங்களை இந்த அவதானிப்பிலிருந்தே மேற்கொண்டிருந்தார். அத்தகைய ஓர் அனுமானம் ஒரு சமூகத்தில் மொத்த வருமானத்திலோ அல்லது அதன் பங்கீட்டிலோ மாற்றம் இல்லாதவிடத்து மொத்தச் சேமிப்பிலும் மாற்றம் இருக்காது என்பதாகும். நுகர்வு நிலையாக இருக்குமெனில் அதன் தொடர்ச்சியான சேமிப்பும் நிலையாகவே இருக்கும். இத்தகைய முடிவானது உண்மைக்கு முரணாக இருக்கக் கூடிய ஊகங்களை மறைக்கிறது. உதாரணமாக வருமான அளவில் ஏற்படும் மாற்றத்தைத் தவிர வேறெதுவும் நுகர்வுப் பொருட்களின் மீது ஏற்படும் செலவினத்தை மாற்றிவிட முடியாது. இத்தகைய முடிவுகளின் உதவியுடன் கெயின்ஸ் தன்னுடைய கோட்பாட்டில் மரபுவழியான நுணுக்கமான எல்லைக் கணிப்பீடுகளை (marginal calculations) அறிமுகஞ் செய்தார். வருமானத்தில் எல்லை உயர்ச்சிகளின் விளைவாக ஏற்படும் நுகர்வுப் பாங்குகளின் மாற்றங்களிலேயே சேமிப்பில் ஏற்படும் மாற்றங்கள் தங்கி நிற்கின்றன என அவர் கூறினார்.

## முதலீடு பற்றிய கெயின்சின் நிர்ணயங்கள்

சேமிப்பைத் தீர்மானிக்கும் நுகர்வுத் தொழிற்பாடுகள் ஒப்பீட்டளவில் உறுதியானதெனினும் முதலீடு என்பது உறுதியற்றதாகும். எதிர்காலத்தில் எதனை விற்பனை செய்யலாம் என்னும் வர்த்தகர்களின் எதிர்பார்ப்புகளில் அது தங்கியுள்ளது. அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்யும் சந்தையை எதிர்பார்க்கிறார்கள் எனில் எவ்வளவு மலிவான வேதனத்தைத் திரட்டும் வாய்ப்பு இருப்பினும் முதலீடு செய்ய மாட்டார்கள். உண்மையில் அவர்கள் தமது முதலீடுகளைக் கைவிடுவார்கள். இதற்கு எதிர்மாறாக வர்த்தகர்கள் பாரிய விற்பனைகளையும், உயர் விலைகளையும் எதிர்பார்க்கிறார்கள் எனில் மூலதனத்தைப் பெறுவதற்குக் கூடிய வட்டி வீதங்களைக் கொடுக்க வேண்டுமெனினும் கூட அவர்கள் பாரிய முதலீடுகளைச் செய்வார்கள்.

இங்கும் கூட கெயின்ஸ் எல்லை எண்ணக் கருவை அறிமுகஞ் செய்கிறார். ஒரு குறிப்பிட்ட மூலதன உபகரணத்தின் புதிய அலகு ஒன்றினை ஒரு வர்த்தகர் கொள்வனவு செய்ய விரும்பினால் இந்த அலகானது குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற் குறிப்பிட்ட பயனை விளைவிக்க வேண்டும். இந்த விளைவானது வட்டி விகிதத்தை விட மேலதிகமாக இருந்தால் மட்டுமே முதலீடு செய்யப்படும். குறைவு எனில் முதலீடு செய்யப்பட மாட்டாது. எனவே மூலதனத்தின் "எல்லை வினைத்திறன்" (Marginal efficiency) முதலீடு அதிகரிக்குமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கிறது. மூலதனத்தின் எல்லை வினைத்திறன் வட்டி விகிதத்துக்குச் சமமாக இருக்கும் போது முதலீடு சமநிலையில் இருக்கும். தற்போதைய விகிதத்தில் உற்பத்திக்குத் தேவையானவற்றை வர்த்தகமானது முதலீடு செய்து கொண்டிருக்கும். ஆனால் விரிவடைய மாட்டாது. இக்கோட்பாட்டிலிருந்து பெறப்படும் மிக முக்கிய முடிவானது: நுகர்வு ஒப்பீட்டளவில் உறுதியற்றதாக இருப்பதினால் தேசிய வருமானத்தில் வித்தியாசங்கள் ஏற்படுவதற்கு முதலீட்டில் ஏற்படும் வித்தியாசங்களே பெரிதும் பொறுப்பாக உள்ளன.

## பெருக்கி (The Multiplier)

முதலீட்டில் ஏற்படும் ஓர் உயர்ச்சி எவ்வளவுக்குத் தேசிய வருமானத்தை உயர்த்தும்? இது புதிய முதலீட்டுக்கு அதிகமாகவே இருக்கும் எனக் கெயின்ஸ் வாதிட்டார். ஒரு குறிப்பிட்ட வருடத்தின் புதிய முதலீடானது தேசிய வருமானத்தின் ஒரு சிறிய பகுதியாக இருந்த போதிலும் அது சக்தியுள்ள செல்வாக்கைக் கொண்டுள்ளது. உதாரணமாக ஒரு கைத்தொழில் நிலையத்தை அமைக்க ஒரு கைத்தொழில் அதிபர் ஒரு மில்லியன் டொலர் செலவழிக்கிறார் என வைத்துக் கொள்வோம். அப் பணத்தைப் பெறுபவர்கள் கட்டுமானத்தில் பங்கு கொள்ளும் தொழிலாளரும், பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் நபர்களுமேயாவர். அது அவர்களுக்கு வருமானமாகும். அவர்கள் அவ்வருமானம் முழுவதையும் செலவழிப்பார்களேயானால் அதனைப் பெறுபவர்களும் அவ்வாறே செலவழிப்பார்களெனில் அப்பணமானது முடிவே இல்லாது வருமானத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும். இவ்வாறாக அப்பணம் உருவாக்கும் மொத்த வருமானம் முடிவில்லாமல் இருக்கும்.

ஆனால் உண்மையில் இவ்வாறு நடப்பதில்லை. ஏனெனில் கொடுப்பனவு அல்லது செலவு செய்யும் ஒவ்வொரு முறையும் ஒரு தொகைப் பணமானது தடுத்து வைக்கப்படும் அல்லது சேமிக்கப்படும். இது முதலீடு மூலம் உற்பத்தி செய்யப்படும் வருமானத்தை வரையறை செய்கிறது. அத்துடன் சேமிப்புத் தொழிற்பாடு எவ்வளவு எனத் தெரிந்து கொள்ள முடியுமெனில் "எவ்வளவு" என்ற கேள்விக்கான விடையையும் கணிப்பீடு செய்ய முடியும். இதிலிருந்து தெளிவாகுவது என்னவெனில் ஒரு புதிய முதலீடு எவ்வளவு தூரம் மொத்த வருமானத்தைப் பெருக்கும் என்பதைக் காட்டும் "பெருக்கி" (Multiplier) என்பது சேமிக்கப்படும் எல்லை வருமானத்தின் தொடர்புபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னமாகும். அதாவது வருமானத்தின் பெருக்கத்தில் நான்கில் ஒரு பகுதி சேமிக்கப்பட்டால் பெருக்கி என்பது நான்காகும். இதன்படி ஒரு மில்லியன் டொலர் நான்கு மில்லியன் மேலதிக வருமானத்தை ஏற்படுத்தும். எவ்வளவு காலத்துக்குள் இவ்வருமானப் பெருக்கம் ஏற்படும் என்பது வருமானச் சுற்றோட்ட வேகத்தில் தங்கியுள்ளது.

இக் கணிப்பீட்டின் முக்கிய அம்சம் என்னவெனில் ஒவ்வொரு புதிய முதலீடும் அம் முதலீட்டைக் கொடுப்பனவு செய்யக் கூடிய சேமிப்பைக் கொண்டு வருகிறது என்பதாகும். நமது உதாரணத்தின் படி ஒரு மில்லியன் முதலீடு நான்கு மில்லியன் வருமானத்தை உருவாக்கியது. இதில் நான்கில் ஒரு பகுதி அதாவது ஒரு மில்லியன் சேமிக்கப்பட்டது. இது நம்ப முடியாத அளவுக்கு நன்மையுள்ளதாகத் தோன்றலாம். ஆனால் இந்தச் செயன்முறை எதிர்த்திசையில் இயங்க மாட்டாது என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். சேமிப்பு முதலீட்டை உருவாக்குவதில்லை. சேமிக்கப்பட்ட ஒரு மில்லியன் யாராவது ஒருவரால் முதலீடு செய்யப்படாது விடின் வருமானத்தின் வளர்ச்சி நிறுத்தப்படும். முதலீடு சமநிலையில் இருக்கும் போதுதான் பொதுச் சமநிலை ஏற்பட முடியும்.

## அரசாங்கத்தின் பங்கு

இதுவரை இந்த கோட்பாட்டு விளக்கத்துக்குள் அரசாங்கம் இடம்பெறவில்லை. ஆனால் அரசாங்கம் மிகவும் முக்கிய காரணியாகும். அதனுடைய முக்கியத்துவம் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது. அரசாங்கமானது வருமானத்தைப் பெறுகிறது; செலவு செய்கிறது; சேமிக்கிறது அல்லது முதலீடு செய்கிறது. கெயின்சும் அவரது ஆதரவாளர்களும் இவ்வுண்மையை நிராகரிக்கவில்லை. உண்மையில் அவர்களது பகுப்பாய்வின் பிரதான நடைமுறைப் பெறுபேறு அரசாங்கத்தின் நிதிக் கொள்கை பற்றிய அவர்களது முடிவுகளேயாகும்.

இது வரை நிதி விவகாரங்களில் அரசாங்கத்தின் பங்கு நடுநிலையாக இருக்க வேண்டுமென்றே மரபுவழிப் பொருளியலாளர்கள் எதிர்பார்த்தனர். அரசாங்கத்தின் சில தவிர்க்க முடியாத பணிகளுக்குப் பணம் தேவைப்பட்டது. தனக்குத் தேவைப்படும் பணத்தை அரசாங்கம் வரியிறுப்பாளரிடமிருந்தே வசூலிக்க வேண்டியிருந்தது. கடன்பட வேண்டியிருந்ததால் தன்னுடைய கடன்களைச் செலுத்த வேண்டியிருந்தது. தனியார் முதலாளித்துவத்தின் கட்டுப்படுத்த முடியாத தாளங்களுக்குப் பொருத்தமான ஓர் எதிர்க் காரணி அரசாங்கமேயாகும் என்றுதான் கெயின்ஸ் கருதினார். முதலீடுகள் வீழ்ச்சியடையும் போது அரசாங்கம் முதலீடு செய்ய முடியும். ஏனெனில் அரசாங்கத்துக்கு இலாபம் தேடல் அவசியமற்றது. அரசாங்க முதலீடானது அதே அளவான தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடு போன்றே வருமானத்தைப் பெறுகிறது. அத்தகைய வருமானம் சந்தைகளை விரிவுபடுத்துவதால் வர்த்தகர்களின் எதிர்பார்ப்புகளையும் விருத்தி செய்கிறது.

புதிய முதலீடுகளைவிட தனியார் சேமிப்புகள் அதிகரிப்பதன் காரணமாகத் தேசிய வருமானம் வீழ்ச்சியடையும் போது, அந்நிலையை மாற்றியமைக்க அரசாங்கம் விரும்பும் போது பொதுமக்கள் வருமானம் அல்லாத பணத்தையே செலவழிக்க வேண்டும். அதாவது வரியாகக் கிடைக்கும் பணத்தை விட அதிகமாகச் செலவழிக்க வேண்டும். அதாவது அது ஒரு துண்டு விழும் தொகையைக் கொண்டிருக்க வேண்டும். இத்துண்டு விழும் தொகையைச் சமாளிக்கப் பெறப்படும் கடன் பெருகி வரும் தனியார் சேமிப்பிலிருந்து அல்லது வங்கிக் கடனாகப் பெறப்படல் வேண்டும்.

பணவீக்கம் அச்சுறுத்தும் அளவுக்கு உயரும் போது இதற்கு எதிரான கொள்கை பின்பற்றப்பட வேண்டும். அரசாங்கம் தான் திரட்டிய பணத்தை விட அதிகமாகச் செலவழிக்கும் போது அது ஒரு முதலீட்டாளராக நடந்து கொள்கிறது. உண்மையில் அது இதற்கு மாறாக அதாவது ஒரு சேமிப்பாளராக நடந்து கொள்ள வேண்டும். இதன் பொருள் என்னவெனில் அரசாங்கம் செலவழிப்பதை விட அதிகமான பணத்தைத் திரட்ட வேண்டும். வேறுவார்த்தைகளில் கூறுவதானால் ஒரு மிகையினைக் கொண்டிருக்க வேண்டும்.

NF 33866



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
24-9-1996
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. T.P. 330195
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org